உ

கணபதி துணை.

அந்தகக்கவி வீரராகவமுதலியார்

இயற்றிய

# திருவாரூருலா.

இஃது

உத்தமதானபுரம்

வே. சாமிநாதையரால்

பலபிரதிரூபங்களைக்கொண்டு பரிசோதித்து

தாம் நூதனமாக எழுதிய அரும்பதவுரையுடன்

பதிப்பிக்கப்பட்டது.

"செந்தமிழ்" ப் பிரசுரம்—கசு.

மதுரை:

தமிழ்ச்சங்க முத்திராசாலைப்

பதிப்பு.

1905

# திருவாரூருலா.

## காப்பு.

### வாதாவிவிநாயகர்துதி.

கமலைக் கருள்செய் கமலைத்யா கேசர்
கமலைத் திருவுலாக் காப்பாங்—கமலைவயன்
மீதாவி வேழமுக மீன்குதிக்கு மப்பதியில்
வா தாவி வேழமுக வன்.

### மாற்றுரைத்தவிநாயகர்துதி.

பாந்த ளணியணிந்த பாலொத்த மென்மொழியாள்
காந்தர்தியா கேசருலாக் காப்பாகும்—பூந்தாளிற்
போற்றுரைத்த வாரணமே பொற்சிலம்பாங் கைச்சிலம்பு
மாற்றுரைத்த வாரணமே வந்து.

## அவையடக்கம்.

ஆதியுலா வாரூருக்கு மாரூ ரனைத்தமியே
னோதியுலா வாரூருக்க வுன்னினேன்—சோதிகையு
மாநாக முங்குழைக்கு மாமேரு வெற்பையொரு
பூநாக முங்குழைத்தல் போன்ம்.

## நூல்.

க. நீர்பூத்த தாமரையி னிற்குந்தே வாதியா
வேர்பூத்த வொன்பா னெனும்பேருய்ச்—சீர்பூத்த

---

(பாடபேதம்) வாதாவிவிநாயகர் துதி.

'அமலைக் கொருபாக ராரூர்த் தியாகர்
கமலைத் திருவுலாக் காப்பாங்—திமிலவயன்'
'கமல வயன்'

அவையடக்கம்.

'ஆதியுலா வாரூருக்கும்'
'பூநாக முங்குழைத்தல் போல்'

உ. வேதாந்த மேதெளிந்த சைவ விழுப்பொருளாய்
நாதாந்த மேயாய் நடிக்கின்றோன்—வேத

௩. முறைமையா லோது முதுபரா சத்திக்
கிறைமையா மெல்லைக் கிறையோ—னிறைவி

௪. லொருதலையி னுணு மொருதலையிற் சாய்ந்த
வரிதலையுஞ் சேதிப்ப தாகக்—கருதிய

௫. வானோர் சிதலாய் வரும்புற்றில் வந்தந்த
வானோ ருளத்துளக்க மாற்றினோன்—போனநாண்

௬. வில்லை மகபதிக்கு வில்லாம் படிதந்து
முல்லை யரிக்கு முடிதந்தோன்—றொல்லைச்

எ. சனகர் முதன்முனிவர் சாரக் கலிதீர்த்
தனக வொளியு மளித்தோன்—வினைகழிப்ப

அ. வார்த்த முடிக்கங்கை யாழ்ந்தே யெழுந்தேவ
தீர்த்த மலம்புகுண தீரத்தோ—னீர்த்த

௯. வொருசங்க மாமுனிவ னெண்கை யிரண்டும்
வருசங்க தீர்த்த மருங்கோன்—பொருசங்க

௧0. வேலைக் கமலை புகுந்திறைஞ்ச வேட்டதிரு
மாலைப் புணர்த்த வரத்தினோன்—காலை

௧௧. வருங்கம லாலயப்பெண் வந்திப்பத் தன்னூர்க்
கிருங்கம லாலயப்பே ரிட்டோன்—பெருங்கண்ணன்

௧உ. செய்யுங் கருத்து முடித்த திருவுருவா
யுய்யுஞ் சுரரரசுக் கோரரசா—யெய்தியவண்

௧௩. பண்டு பணிப்பப் பணிந்து முசுகுந்தன்
கொண்டு வரக்கமலை கோயிலா—வொண்டொடிக்கை

௧௪. மானுமொரு செவ்வேளு பானுமமு வுந்தரித்த
தானுமொரு சிங்கா தனத்திருந்தோன்—மாநகரை

௧௫. மேய்ந்து வலம்புரிந்த மெய்க்கோவு மக்கோவை
யாய்ந்து வலம்புரிந்த வாடவனும்—போந்து

௧௬. மதியி னமைச்சனு மன்னுமெனச் செய்து
கதியும் வழங்கு கழலோன்—முதுவன்

---

(பா-ம்) உ. 'வேதாந்தத் திற்றெளிந்த சைவ விழுப்பொருளின்'
௫. 'உளத்துக்கம்'
௧உ. 'சுரவரசுக்கு'
௧உ-௧௩. 'எய்தியவர், பண்டு பணியப்'
௧௬. 'மதியு மமைச்சனும்'

கஎ. றிரிசங்கு கோடிபடு தேவதீர்த் தத்தாற்
றிரிசங்கு மெய்சேரச் சேர்த்தோன்—சுருதியன்வாய்க்

கஅ. கள்வினையு முள்ளாவி காரி விருத்திரனைக்
கொள்வினையு மந்நீரிற் கோவித்தோ—னள்வினைப்பேய்க்

ககூ. கந்தக் கயையா லருநன்றி கொன்றமையு
மிந்தக் கயையா லினிதறுத்தோன்—செந்திருத்தா

உ0. டேடிப்பண் டோடி வருமறையோர் செய்வணக்கங்
கோடிக்குங் கோடியாங் கோலத்தோ—ணெடுங்கேர்ப்

உக. பத்தன் மகப்பேறு கூறினேன் பண்டொரு
சித்தன் மகப்பேறு சிந்தித்தோன்—முத்தி

உஉ. பொருகோபக் கூற்றுலகிற் போயாவி மீண்ட
விருகோ கரணர்க்கு மீந்தோன்—முருகு

உரு. பொலிசித் திரகாயப் பொற்காய வேந்தாற்
குலிசித் திரநாமங் கொண்டோன்—கலிபயந்து

உச. முத்தீர்த்த சீகரத்து மூன்றரைக் கோடியா
மத்தீர்த்தம் புக்க வபயத்தோ—னித்தகைய

உரு. வூரெல்லை கொண்டநா ளும்பர்க்கு மிம்பர்க்கும்
பேரெல்லை தோன்றுப் பெரும்பெருமா—ணேரேழுஞ்

உசா. சோதி விடங்கமே யாயினுந் தொன்மையாம்
வீதி விடங்கமே மேவினேன்—போதமே

உஎ. யண்ணமணித் தண்டி லசைந்தா டியபெருமா
டண்ணமணிச் சிங்கா தனப்பெருமாள்—விண்ணோர்

உஅ. திருமாளா தாட்கொண்ட தேவ ரகண்டப்
பெருமா டியாகப் பெருமாள்—விரிபுவன

உகூ. முற்றத் தழைப்ப மூதியவிதிக் காமிகத்திற்
கொற்றத் தியாகக் கொடியேற்றிச்—சுற்றெங்கும்

ரு0. வம்மின் றியாகர் மலர்ச்சே வடிவணக்கஞ்
செய்ம்மி னெனவனந்தந் தேவர்க்குந்—தம்முறையின்

---

(பா-ம்) உக. 'மகப்பேறுங் கூறினேன்'
,, 'மகப்பேறுஞ் சிந்தித்தோன்'
உரு. 'குலிசித் திருநாமம்'
,, 'கலியாய்ந்து'
உச. 'அவயத்தோன்'
உரு. 'ஊரெல்லை கண்டநாள்'
ரு0. 'வம்மின்றியா கேசர்'

௩௧. மிக்குத் திருத்தூதே விட்ட திருமுகமே
திக்குத் தொறும்போந் திருநாளிற்—புக்கிறைஞ்சுந்

௩௨. தேவரைவாழ் வித்துத் தெரிசிக்கப் பிந்திவருந்
தேவரைவா திக்குந் திருநாளிற்—றேவர்த

௩௩. மம்பொன் மகுட மடர்ந்துதிருக் காவணத்துச்
செம்பொ னிரம்புந் திருநாளி—லம்பரத்துச்

௩௪. சோனைக் கெதிராச் சொரிபொற் படிதெய்வச்
சேனைக் களக்குந் திருநாளின்—ஞானத்துப்

௩௫. பாவித்தோர் கிண்கிணிக்கால் பங்குனி யுத்தரத்தே
சேவித்தோர் முத்தித் திருநாளிற்—பூவிற்

௩௬. கலித்தகட லேழுங் கமலையிற்புக் கென்ன
வொலித்ததிரு நாளி லொருநாட்—கொலைக்கடுவை

௩௭. யீந்துந் தனதுமகட் கின்ப மணம்புணர்த்த
தாய்ந்து திருமருக னாகத்தே—தோய்ந்த

௩௮. கனமணி வாங்கிக் கடல்கொடுப்ப தென்னத்
தினமணி வந்துதயஞ் செய்ய—முனையி

௩௯. னடன்மேய சேயரிக்க ணல்லியங் கோதை
யுடன்மேய பள்ளி யுணர்ந்து—படியின்

௪0. முழுப்புணரி யுள்ளிரண்டு முற்றுமற மற்றை
விழுப்புணரி யைந்தும்போய் வீழ—மொழுக்கென்ன

௪௧. நெய்யுந் ததியு நிறைபாலுந் தேனுநறை
பெய்யும் புனலும் பெரிதாடிப்—பொய்யா

௪௨. மறையாதி சைவர் வகுத்த வகையிற்
குறையாது செய்பூசை கொண்டு—பொறைவில்லுங்

௪௩. கோட்டிக் கணைக்கணையாய்க் கோடாத தேர்சுமந்து
காட்டித் திருந்துதிருக் காப்பணிந்து—கோட்டுமையா

௪௪. ளையு மருங்கொத்த நண்பாற் பெருமாற்குச்
செய்யு மிதுவே சிறப்பென்றுப்—பையக்

௪௫. கணைய மறைநூலிற் கஞ்ச னிழைத்த
தணைய திருத்தா சணிந்து—கனகவுடை

௪௬. வாளு மராக்கச்சும் வாளரவும் போய்வளைத்த
கோளு மருளிக் கொளவிக்கி—வாளிரவி

---

(பா-ம்) ௩௧. 'மிக்குத் திரிதாது'
௩௪. 'பொற்பொடி'
௪௧. 'ததிபாலுந் தேனு நிறைநறையிற்'
௪௬. 'வாளராப் போய்மறைத்த, கோளுமருவிக்'

சஎ. வன்னச் சடில மதியோடு பங்குபிடித்
தென்னக் கிரீட மினிதேற்றித்—தன்னுழையு

சஅ. மேற்றிய காப்பு மெதிர மதியிரண்டு
தோற்றியெனச் செவ்வந்தித் தோடேந்தி—யாற்றிய

சகூ. வாலமணிக் கண்டத் துமையமைத்த வங்கையெனச்
சாலமணிக் கண்ட சரம்பூண்டு—மேலுரகன்

ரு0. றாங்கு மொருமடந்தை தந்தைகாந் தன்பிறப்புத்
தாங்கு முறுப்பைத் தழீஇயென்னத்—தூங்கு

ருக. மிலயப் புயங்கத் தசைபுமிணைத் தோளில்
வலயப் புயங்கம் வயக்கிப்—பொலன்மிடற்று

ருஉ. மஞ்சி னிழிந்த மழைக்கொழுந் தாரையென
விஞ்சு புரிநூலே மேலமைத்துக்—கஞ்சக்

ருங. குருகங்கை நாயகி கொங்கைத் தழும்புக்
கொருகங்கை நாயகி யூடித்—திருமார்பிற்

ருச. பார்த்தமையு நக்கமையும் பாய்ந்தென்னச் செங்கழுநீர்
சேர்த்தமையு முத்துஞ் சிலபூண்டு—மார்த்தாண்டன்

ருரு. முன்னந் தனைமறைத்த முன்னோற் கொருதிகிரி
யின்னங் கொடாமைக் கிருகரமுந்—துன்னிப்

ருசா. பிடித்து வணங்கியெனப் பேருலகம் விற்குந்
தடித்து மணிக்கடகந் தாங்கி—நொடித்தமிழி

ருஎ. லுந்தி யெனும்பெயரா லுந்தியுந்தன் பூதத்தாற்
சிந்தி நுரைதிரைக்குஞ் செய்கைபோற்—பந்தி

ருஅ. மருவுதர முத்தின் வருக்க நிரைத்த
திருவுதர பந்தனமுஞ் சேர்த்தி—யொருபொதுவின்

ருகூ. மீது குனிப்ப வியந்து பதஞ்சலிதான்
போது மெனச்சரணம் பூண்டென்னப்—பாதத்தி

---

(பா-ம்) சஅ. 'தோடணிந்தே, யாற்றரிய'
சகூ. 'மணிகண்டத்து'
,, 'மணிகண்ட சாம்பூட்டி'
ரு0. 'பிறப்பைத்'
ருக. 'புயங்கத்திசையும்'
,, 'புயங்கந் தசையும்'
ருச. 'சிலசூடி'
ருஎ. 'சிந்து நுரைதிரைக்குஞ் சீர்போலப்'
ருஅ. 'பந்த வருக்க நெருக்கும்'

௬௦. லாடிய பாம்பு மரிபெறாத் தன்பேறு
பாடிய கிண்கிணியும் பந்தித்து—நீடிய

௬௧. நீலத் தரிவணங்க நின்றநாட் பாற்கடலின்
கோலத் துளிபொதுளிக் கொண்டதோ—மாலுக்

௬௨. கடியை யறிய வரியதிரு மேனி
நெடிய தழல்பூத்த நீறோ—கடவுளுக்கு

௬௩. வண்ணந் திருவந்தி வண்ண மெனும்படிக்குத்
தண்ணம் பெருநிலவு தந்ததோ—வண்ணலைப்

௬௪. போய்முத் தரணி பணியும் பொழுதெவர்க்கும்
வேய்முத் தெனக்காட்டு மெய்க்காட்டோ—மாமலையின்

௬௫. மங்கை யொருபாற் கலந்தமைக்கு மாறேற்ற
கங்கை முழுதுங் கலந்ததோ—வங்கெதிரோ

௬௬. சார்ந்த திகம்பரத்தாற் றாரு வனமடவார்
சூர்ந்த நகைவெள்ளங் கோத்ததோ—காந்தி

௬௭. திவளப் பொலிவதெனச் செந்திருமெய் யெங்குந்
தவளக் கருப்பூரஞ் சாத்திப்—பவளநிறம்

௬௮. போர்த்த பளிதப் புதுமதியூர் கொண்டென்னச்
சேர்த்த திருவா சிகைசாத்தி—யேத்தி

௬௯. யெனைத்தவஞ் செய்த விடப்பா லுமைக்கு
நனைத்தண் மகுட நதிக்கு—முனைத்தகண்

௭௦. ணேறு சுடர்க்கும்பே றென்னலு மென்ன தவப்
பேறு முழுதுமிது பெற்றதென—நீறணிவா

௭௧. ஞேங்கலு மீது மூலோக குலமதனாற்
றாங்கலு முண்டுகொலோ தாயமென---வாங்குச்

௭௨. சுருதிநிலைக் கண்ணாடித் தோன்றரியான் றோன்றப்
பருதிநிலைக் கண்ணாடி பார்த்துச்—சுருதியும்

௭௩. வேத வனமடைத்தோன் மேனா ளதுதிறந்தோன்
றூத னெனவிடுத்தோன் சொற்பாட்டுங்—கர்தலித்து

---

(பா-ம்) ௬௫. 'கலந்தமைக்கு மாறாக'
௬௭. 'தவளத் திருச்சாந்து'
௬௮. 'கோத்த திருவா சிகைகோட்டி'
௬௯. 'எனைத்தவஞ் செய்தும்'
௭௧. 'தாயமெனப்—பாங்கின்'
௭௨. 'சுருதியுடன், மூவர்தே வார முதலாக வோரைந்து, தேவ வருண் மாலை செவிச்சார்த்தி—யாவர்களுங், கல்லென்னும்'
௭௩. 'சொற்பாட்டு—நாதற்கு'

எச. நாஹூறு காரிகையை நல்கினேன் வாசகமுந்
தேனூறு மாறு செவிச்சார்த்தி—வானுடர்

எரு. கல்லென்னும் வெள்ளக் கதிவிலக்குங் கைப்பிரம்பிற்
கல்லென்னு முண்டியான் கான்மூளையும்—வில்விசயன்

எசு. செம்மனுக்குத் தோள்கொடுத்த செம்மலையி னுங்கழித்த
செம்மனுக்குத் தோள்கொடுத்த செம்மனு—நம்மயிலைப்

எஎ. பெண்ணையே யென்பினுற் பெற்றுப் பெருதவாண்
பெண்ணையே பெண்ணுகப் பெற்றேனு—முண்ணப்போ

எஅ. யப்பூதி யக்துறந்த வாருயிரைத் திங்களூ
ரப்பூதி மைந்தற் களித்தோனு—மெப்போது

எகூ. மப்பரவை யிட்ட வவிர்சடையோன் றாதினு
லப்பரவை யிட்ட மடுத்தோனுஞ்—செப்பரிய

அ0. வஞ்சம்பு வாசி யகற்றினேன் மூன்கொணர
வஞ்சம்பு வாசி யழைத்தோனுந்—துஞ்சமளி

அக. யம்பற்குப் போதற் கருமைப் பெருமாளை
யம்பற்குப் போதற் கழைத்தோனு—நம்பற்குக்

அஉ. காற்சிலம்பின் சந்தணிந்து கண்ணி யணிந்துதினங்
காற்சிலம்பு கேட்டதிருக் காதோனு—நூற்சிலம்பக்

அங. கற்றூவிக் காவிக் கமலைவாய்த் தன்மகவைக்
கற்றூவிக் காவி களைந்தோனுஞ்—சற்றேனு

அச. மெள்வா யலைநீ யிறைக்கடிமை யாக்குமெனி
னெள்வா யுமிழெனக்கு மென்றேனு—முள்வாய்ப்

அரு. பிறங்குதிருத் தொண்டைப் பெருக்குந் தொழிற்குக்
கறங்குதிருத் தொண்டக் கடலுந்—திறங்கொள்

---

(பா-ம்) எஎ. 'பெண்ணைப்பெண் ணுக்கு பெருந்தகையும்'
எஅ. 'அப்பூதி யார்க்களித்த வண்ணலும்'
எகூ. 'அப்பரவை யிட்டஞ்சே ராண்டகையுஞ்'
அ0. 'அஞ்சம்பு வாசியழை யாளரியுங்'
அக. 'அம்பர்க்கு'
,, 'அழைமுதலும்'
அஉ. 'காதிறையும்'
அங. 'கற்றூவுக் காவிக் கமலைவாய்'
,, 'கற்றூவுக் காவி களைமனுவுஞ்'
அச. 'எனக்கெனேந்தலும்'
அரு. 'திருத் தொண்டப் பெருக்குந்'

அசு. பசுபாச நீக்கிப் பதியாக்கு ஞான
விசைவார்சந் தான ரெவரு—மிசைதேன்

அஎ. மிசையுஞ்செவ் வந்தியின் வெண்ணிலா வெண்டோ
ட்சையுங்கம் பிக்காதி னூன—முசுகுந்தன்

அஅ. பொன்னுட்டி னுங்கொணர்நாட் பொற்கோயிற் காணிக்கு
முன்னுட்டுந் தான முதன்மையருஞ்—சொன்னுட்டுஞ்

அகூ. சைவச் சுருதித் தலைவரும் பல்கோடி
தெய்வப் பரிகரத்துச் சேயோரும்—பெய்வானு

கூ0. நந்தெறியு மேழ்கடலு நக்கி யெழுகுவடும்
பந்தெறியும் பூத பதாதியு—மெந்தைதிரு

கூக. நீற்ருேடு மஞ்செழுத்தி னெஞ்சோடு நெக்குருகும்
போற்ருேடு மீண்டிப் புறம்போர்ப்பக்—கூற்றை

கூஉ. யழலு முளரி யகக்கோளர் பந்தர்
நிழலு மருகு நிழற்ற—முழவியம்ப

கூங. முட்ட வமரர் முடிபணியத் தண்டேறி
விட்டதிரு வாயில் வெளிப்பட்டு—நெட்டகிலங்

கூச. தேரா யெடுப்பளவோ சேமப் படைதொடுப்பக்
காராய வண்ணக் கணைகோடி—மேருவிற்

கூரு. கோடி யுரக குணங்கோடி கூடிடினுஞ்
சூடி யொருநொடியிற் சூழ்போதும்—பீடுகெழீஇ

கூசு. யன்றைத்தே ராழிக் கடும்பகைமைச் சேடனை
யின்றைத்தே ராழி யிரித்தெனத்—துன்றி

கூஎ. யெரிகின்ற வோரா யிரஞ்சுடிகை சோரத்
திரிகின்ற நேமி திகழ்ந்து—சுரநதியு

கூஅ. மாய மதியு மரன்முடிக்கோ பங்கென்னுஞ்
சேய பெரிய திருத்தேரி—னேயர்

---

(பா-ம்) அசு. 'இசைவாஞ்சந் தானர்'
அகூ. 'சுருதித் தவரும் பலகோடி'
கூக. 'அஞ்செழுத்து நெஞ்சோடும்'
,, 'புறம்பொற்ப'
கூஉ. 'நிழலு மருங்கும்'
கூங. 'மூடிபடிய'
கூச. 'சேமப் படைகொடுப்ப'
கூரு. 'சூடித் திருவீதி'
கூஅ. 'அரன் முடித்தற் கொக்குமெனுஞ்'
,, 'சேயபே ராழித் திருத்தேரின்'

கூகூ. விசைய மனக்கமலம் விண்டசைய வெண்டிக்
கசைய வசையவசைந் தாடித்—திசைகவிந்த

க00. விண்புதையத் தூபத்தால் விண்ணோர் மலர்மழையான்
மண்புதையத் தேவியொடும் வந்தேறி—யொண்புணரிப்

க0க. பூசை யுவந்திங்குப் போந்தோனுக் கங்குதித்த
வாசை மதிநிழற்று மாறென்ன—வீசு

க0உ. மவிகை தொடநின்றூ ரண்டத் தளவுங்
கவிகை நிலவு கதிப்ப—வவியா

க0௩. விரிவிழித்தீக் கொண்டெய்யும் வேளிறப்ப வின்ன
மெரிவிழித்தீ மூட்டுமா றென்னக்—கருவிழிகள்

க0௪. வேலால மொத்தார்கள் வெண்கவரி வீசவிரு
பாலால வட்டம் பணிமாற—வேலை

க0ரு. தருகொடியை மார்பகத்துத் தண்புயத்து ஞாலத்
தொருகொடியை வைத்தகொடி யோங்க—விருமருங்குஞ்

க0சா. சேயோ ரிருவர் திருவா குவுமயினு
மேயோ ரிருவ ரிருபுள்ளுங்—காயு

க0எ. மருக்க ரிரதமீ ராறு முடிவெள்
ளெருக்கர் பதினோ ரெருது—மருத்துவராய்

க0அ. நீடிருவ ரெண்மர் நிலாவொருவ ரைம்முனிவ
ரோடிருவர் மானமீ ரொன்பதும்—பாடுமிரு

க0கூ. காரிப் பெயரோர் கருணா ளியுங்களிறும்
வாரிப் பணையோன் மலைக்காலு—மோரெட்டு

கக0. வேந்தர் கரிவருடை மேதி நரர்மகரம்
பாய்ந்த கலைபுட் பகமேறு—மூர்ந்துவர

ககக. நாகர் கருடர் நவசித்தர் கிம்புருடர்
போக ரியக்கர் பொறியுரக—ராகநறுந்

ககஉ. தாமப்பூந் தேனுற் றலங்குழையக் கீழ்வீழ்ந்த
வேமப்பூண் கொள்ளரிய தென்றேக—வாமத்

கக௩. தருவி வரைப்பிறந்த வன்னத்தின் முன்னு
மருவிய கங்கை மருங்குந்—திருமகளு

கக௪. மண்மகளு நாமகளும் வான்மகளு மூன்றுதிருக்
கண்மகளும் பொற்றிகிரிக் கைமகளுந்—திண்மை

---

(பா - ம்) கூகூ. 'திசைகவித்த' க0௪. 'ஒத்தார்கை'
க00. 'வந்தேறிப்—பெண்புரியும்' கக0. 'நரமகரம்'
க0க. 'வாசிமதி'

ககரு. யெழுமா தருந்நீர்த்தத் தெண்ணின்மின் னுருந்
தொழுமா தரவினராய்ச் சூழக்—குழையின்

ககசா. மிசைத்தேன்செவ் வந்தியின் வெண்டோட்டு வண்டோ
டிசைத்தே னிருவ ரிறைப்ப—விசித்த

ககஎ. குடமுழவு துந்துமி கொக்கரை தக்கை
தடமுழவு பேரி தடாரி—நடமுருடு

ககஅ. கல்ல வடமொந்தை கல்லலகு சல்லரி
வல்ல படகம் வளைதாள—நல்யா

கககூ. ழகடு சிறியதுடி யாதிய வான
முகடு மதிர முழங்க—பகுடத்

கஉ0. தலையன் கொணரத் தருநாட்டி னும்பூ
வலையந் தனில்வந்தான் வந்தான்—கலியி

கஉக. னுகத்துக் கரிய வொருமறையோ னம்பர்
மகத்துக்கு முன்வந்தான் வந்தான்—சகத்தோர்

கஉஉ. தனையளவு காணாத தாளாற் பரவை
மனையளவு போய்வந்தான் வந்தான்—முனைவர்

கஉங. தெரிசனசிங் காதனத்தே செம்பொற் றியாகம்
வரிசை தரவந்தான் வந்தான்—சிரமிழந்த

கஉச. மாய னுயிர்திருப்ப வந்தான்வந் தானெனமுன்
சேய திருச்சின்னஞ் சேவிப்ப—வாயிற்

கஉரு. சிறுகு மெழுகடலித் தேர்ப்பவனிக் கென்ன
மறுகு புரள வரலுங்—குறுகித்

கஉசா. திருமாலை முன்சேரச் சேர்த்தமைக்குச் செல்வி
வருமாலை யத்துமட வாரு—மரிமகனை

கஉஎ. நிந்தித் துமையா ளிடுஞ்சாப நீக்கியது
சிந்தித் தவனூர்த் தெரிவையரும்—வந்தொருவன்

கஉஅ. மேனகையை முன்சபித்த வெண்ணரையின் போக்கறிந்து
மானகரிற் பொன்னாட்டு மங்கையரு—நான்முகற்கி

கஉகூ. யாக முடிய விடையிலொரு பெண்புணர்த்த
போக மகிழ்ந்தவனூர்ப் பூவையரு—மேக

கங0. வொருவிஞ் சையன்விடத் தூ தோதினே னென்ன
வருவிஞ் சையர்மாத ராரும்—புரிசைவட

---

(பா : ம்) ககஎ. 'நடைமுருடு' கஉஅ. 'மேனகையைச் சாபித்த'
கஉஉ. 'முனிவர்' கங0. 'ஓதினேனென்றென்று'

௧௩௧. வாயிலா னீலகண்டப் பாணர் வரவழைத்த
சாயலார் கந்தருவத் தையலரும்—போயிறைஞ்ச

௧௩௨. வேதர் துலைத்தலையின் மேற்படியென் றிப்படியின்
மாதர் தொகையின் வகையோரு—நாதன்

௧௩௩. களத்திருளை வெல்லக் கணங்கூடு கின்ற
வளத்திருளைப் போலளகம் வாய்ப்ப—முளைத்திங்கட்

௧௩௪. கோடி யெனவெமையுங் கொள்ளுமென்று சென்றவெனக்
கோடிய நெற்றிக் குலமிலங்க—வோடி

௧௩௫. யிடமா னெனத்தமையு மேந்துமெனப் போந்த
மடமா னெனக்கண் மதர்ப்ப—வுடனே

௧௩௬. நறையமுத மிங்கிருக்க நஞ்சுண்ட தென்னென்
றறைவ தெனக்கனிவா யாடப்—பெறுவேயும்

௧௩௭. வேய்முத்துந் தத்தமக்கு மெய்யுறவா வெய்தியென
வாய்முத்துந் தோள்வேயும் வந்தெறிப்பக்—காமித்து

௧௩௮. வைத்த தலைவி வருமரபி யாமென்று
மொய்த்த மலைபோன் முலைபணைப்பக்—கைத்தலத்தே

௧௩௯. மன்னுந் துடிபோன் மகிழ்ந்துதொடு மெங்களையு
மென்னுந் துடிபோ லிடைநடங்கத்—தென்னூரு

௧௪0. ரானந்தர்க் கெம்மை யணிந்துய்ந்தா ருண்டென்று
தேனந்தக் கஞ்சந் தெளிர்ப்பதெனப்—பானு

௧௪௧. நிழற்றும் பருவ நிறத்தா மரைக்கை
மிழற்றுங் குருகுவாய் விம்ம—வெழிற்றெருவு

௧௪௨. மன்று மணிமதிலு மாடமு மாடகச்செய்
குன்று முழுகக் குழாமீண்டி—நின்றிருபாற்

௧௪௩. பொங்கும் பகீரதியும் பூத்தனைய திங்களுந்
தங்கும் பவளச் சடைக்காடு—மெங்குஞ்

௧௪௪. சிவந்த திருநுதலுந் திக்கிருளை நக்கி
நிவந்ததிரு நீற்று நிலாவும்—பவந்தொலைய

௧௪௫. வவ்வந்திப் போது மதிமுகமு முக்கண்ணுஞ்
செவ்வந்தித் தோடுந் திருக்காதுஞ்—சைவமுடன்

௧௪௬. வேத மணக்குர் விழுச்செங் கனிவாயுஞ்
சீத முறுவற் சிறுமுகிழ்ப்பூ—மூதண்டங்

---

(பா - ம்) ௧௩௨. 'மெய்ப்படியென் றிப்படியின்' [யென' ௧௩௭. 'மெய்யுறவேயெய்தி ௧௪0. 'கஞ்சந்தெழிப்பதென' ௧௪0. 'கஞ்சந்தெளித்தென்ன' ௧௪௧. 'நிழற்றெருவும்' ௧௪௩. 'பகீரதியிற்பூத்தனைய'

கசஎ. தீராது காத்த திருநீல கண்டமுஞ்
சோராத நாகத் தொடித்தோளு—மார்பாரச்

கசஅ. சார்த்திய செவ்வந்தித் தாருங் கழுநீருஞ்
சேர்த்திய வெண்பளிதச் சேதகமும்—பூத்த

கசகூ. வனசக் கரனமைத்த மானு மழுவுங்
கனசக் கரனமளிக் கச்சு—நனிசிறப்ப

கரு0. மேலைத் தியாக வினோதப் பெயர்வரைந்த
சேலைத் திருவரையுஞ் சீராவுஞ்—சூலத்தான்

கருக. பாதத்தோ டாடும் பசும்பொற் பரிபுரமுங்
கீதத்தோ டாடரவக் கிண்கிணியு—மாதிரத்தை

கருஉ. வவ்விய கோடி வயங்குமிள ஞாயிற்றுச்
செவ்வியுந் தோற்குந் திருவழகு—நவ்வியங்

கருங. கண்ணார நோக்கிக் கசிந்து வியந்துவந்து
பண்ணாரப் பல்காற் பணிந்தேத்தி—மண்ணாட்டு

கருச. வைவச் சுதகற்பம் வந்துமுசு குந்தமன்னன்
செய்விப்பக் கொண்ட திருத் தேர்பாரீர்—கவ்வைப்

கருரு. புடைவீரை யாடைப் புவனாதி காக்கும்
படைவீர கண்டையத்தைப் பாரீர்—மடவீர்கா

கருசு. ணீடிய வம்பலத்தே நின்றாடி யிங்குமிருந்
தாடிய பொற்சே வடிபாரீ—ரூடெறிக்குஞ்

கருஎ. செவ்வந்தி மாலை நிலாவாந் திருமார்பிற்
செவ்வந்தி மாலை தெரிசியீ—ரவ்விருவர்

கருஅ. பாட்டுக் கடலமுதின் பாற்பிறந்த திங்களெனுந்
தோட்டுச் செவந்தித் துணைகாணீ—ரோட்டிய

கருகூ. தேரழகோ வீதித் திருவழகோ வாரூரர்
பேரழகோ யாது பெரிதென்பார்—தேரழகுந்

கசு0. தோற்றழகு நிற்கத் தொழுதேத்தப் பெற்றநம்
பேற்றழகு தானே பெரிதென்பார்—கோற்றொடியீ

கசுக. ரெண்படைக்குங் கங்கைபோ லீரா யிரநாமுங்
கண்படைக்கி னன்றோ களிப்பென்பார்—பெண்புடையா

கசுஉ. ரொள்விழா நோக்கி யுவக்குங் குழாத்தினை
லெள்விழா வீதி யிடத்தென்பா—ருள்ளரக்காப்

---

(பா - ம்) கசஅ. 'செவ் வந்திமணித் தாருங்' கருகூ. 'வீதித்தெருவழகோ'
கருஉ. 'நாயிற்றுச்' கசுக. 'பண்புடையார்'
கருஎ. 'மாலைநிவந்ததிரு'

௧௬௩. பையப் புகுந்துருக்கும் பண்பாற் றியாகர்க்கு
மெய்யைத் தழலென்கை மெய்யென்பார்—செய்யதீ

௧௬௪. வண்ணம் பெறுமிறைவர் வந்தணையி னம்முடைய
கண்ணம் பொழியாதோ காய்ந்தென்பார்—மண்ணெகிழக்

௧௬௫. கண்ணீர் சொரிவிப்பீர் கால்புதையுந் தேர்க்கென்ப
தெண்ணீ ருமதுமதி யேதென்பார்—புண்ணியர்தஞ்

௧௬௬. செம்பொன் றியாகஞ் சிறப்பித்தார் சேவித்தார்க்
கம்பொன் குடத்தோ டளித்தென்பார்—கொம்பனையீர்

௧௬௭. தென்னாட் டமணைச் சிதைத்தார்நங் கூறைபறித்
திந்நாட் டமண்வளர்த்தா ரின்றென்பார்—முன்னாளே

௧௬௮. யக்கன்று போக்குதிரு வாரூர்த் தெருவென்னு
திக்கன்று போக்கவந்தோம் யாமென்பார்—தக்கபசு

௧௬௯. வன்றிழந்த கன்றுக் கசைத்த மணியரிதோ
வின்றிழந்த கன்றுக் கெமக்கென்பார்—சென்றெதிரே

௧௭௦. யான்றதொரு புற்றி னகத்தே மறையரவங்
கான்றதொரு மாணிக்கக் கட்டியே—வான்றிரையின்

௧௭௧. வாங்கும் பலபூ மலரல்லி யங்கோதை
தாங்கு மணநுகர்ந்த தண்ணளியே—யோங்கிய

௧௭௨. மன்றற் றிருச்சா லகத்து வழிநுழைந்து
தென்றற் றவழுஞ் செழுங்காவே—முன்றிற்

௧௭௩. கடைகொளுங்கொள் ளாதென்னக் காத்திருந்து தேவர்
விடைகொளுஞ்சிங் காதனத்து வேந்தே—யடியொன்றுக்

௧௭௪. குய்யும் படிபசும்பொ னோரா யிரமுகந்து
பெய்யுந் தியாகப் பெருமாளே—வைகுமது

௧௭௫. மாலா னவர்தனுநாண் மாற்றியவூ ரென்பதோ
மாலா னவர்தனுநாண் பாற்றினீர்—மாலேத்த

௧௭௬. வோதம் புகுநா ளுமையுடன்புக் கீர்பிரிந்தா
லேதம் படாநீரு மென்படீர்—வேதிய

௧௭௭. ஞேமத்தீக் கம்பர்வா யுற்றதென வெவ்வினையேங்
காமத்தீ வந்துதிருக் கண்சாத்தீர்—தோமிலாத்

௧௭௮. தம்மை யறிவோர் தனிஞான மோபவனி
யெம்மை யறிவோ டிழக்கின்றே—மும்மைக்

---

(பா - ம்) ௧௬௪. 'வண்ணம் பெறினிறைவர் வந்தடையு நம்'
௧௭௧. 'தாங்கிமண'
௧௭௪. 'ஓராயிரமுவந்து'
௧௭௫. 'என்பதுவோ'
௧௭௬. 'என்செயீர்'
௧௭௭. 'அம்பல்வாயுற்றதெனவினையேங்'

கஎகூ. கமலா லயத்தரெனுங் காரணமெம் முள்ளக்
கமலா லயம்புகவுங் கண்டோங்—தமியே

கஅ0. மூளத்து மயன்மொழிய வோர்மொழியு மாருக்
கிளத்த திருவாயிற் கேளோ—மளித்துலகம்

கஅக. வாழும் பரிசுதிரு வாய்க்கேள்வி செய்தகதை
தாழுஞ் சிலர்க்குத் தவிர்ந்தீரோ—வாழி

கஅஉ. விடம்போல் விழியார்க்கு மேவத்தந் தாலோ
விடம்போல் வலப்புறமு மென்பா—ருடம்பெல்லாம்

கஅங. போந்தணிந்த வெண்பளிதப் போர்வையைப் பார்வையாற்
சாந்தணிந்த தென்னத் தயக்குவார்—நாந்தரும

கஅச. ஞாலையைக் கண்டிறவா துய்வித்தோன் செவ்வந்தி
மாலையைக் கண்டு மதிகாணார்—நூலை

கஅரு. விளக்கமல னந்திநிற மேவவே ருகி
யுளக்கமலஞ் சால வுலப்பார்—களக்காமன்

கஅசு. வாதிப்பார் தத்த மனமு மினையதிறம்
பேதிப்பா ராகப் பிறிதொருத்தி—யாதிப்

## பேதை.

கஅஎ. பருவச் சிறுபேதை பல்கலையு நட்பு
மருவப் படாத மடமா—னுருவ

கஅஅ. மிகத்தா ரணியில் விளங்கு மினொரு
ரகத்தா மரைவிரவா வன்னம்—பகைப்போர்

கஅகூ. பெறுதேர் விடுமுன் பிறந்தணிய நாள்வேள்
சிறுதேர் விடுங்குழவித் தென்றன்—மறமே

ககூ0. மடியாத தக்கன் மகம்போலக் கூட்டி
முடியாத கூந்தன் முடிபாள்—படியொடுக்குங்

ககூக. காலை விளையு மளவுங் கரைபுரளா
வேலை யனைய விழியினாண்—ஞாலத்துத்

ககூஉ. தீராப் பயமென்று நாணென்றுஞ் செங்கனிவாய்ச்
சோராப் பசுங்குதலைச் சொல்லினா—டேரூர்ந்த

ககூங. சேயுமொரு செங்காட்டிற் சேயுங் கராவுண்ட
சேயுமெனப் போய்மீளுஞ் சிற்றெயிற்றாள்—சேயுமுடன்

ககூச. கூடுந் துணையு பமணைக் குலச்சிறையா
ராடும் பகையடக்கு மாறென்னக்—கூடி

---

(பா - ம்) கஅக. 'செய்கதையைத்' ககூங. 'மீண்டசிறெயிற்றாள்'
கஅங. 'தயங்குவார்' ககூச. 'ஆடும்படி'

௧௯௫. யிளையோரைக் கண்ணுமடு மென்பளவுந் தாமு
முளையா தடங்கு முலையா—ளளியோர்

௧௯௬. திருத்திய வுள்ளத் திறம்போற் பிறரை
வருத்தி யறியா வடிவா—டருக்கிலாள்

௧௯௭. விண்ணு டியமதியை வேட்டழுவாள் சேடியர்கள்
கண்ணாடி காட்டுழிக் கண்டொழிவா—ணண்ணுத

௧௯௮. வாடி நிழல்பிடிப்ப வப்புறத்தோ வென்றுமறித்
தோடிய தந்தோ வொளித்தென்பா—ளாடக

௧௯௯. வள்ளக் கெடுதியின் மாதர் முலையதென்று
மெள்ளக் கலையை விடுத்தலைப்பா—ணள்ளாயஞ்

௨௦௦. சென்று மரப்பாவைக் கின்னஞ் செவிவளரு
மென்று குதம்பை யிடப்போவா—ளொன்றுமிப்

௨௦௧. பூவை கிளிபோற் புகலாது மூங்கையோ
பாவை யிதுவெனனும் பாவைமார்—காவலன்

௨௦௨ மூங்கைபோந் தீர்த்த முழுகுவியுன் பாவைக்கு
மூங்கைபோ மென்று முறுவலிப்ப—வாங்கதற்றுப்

௨௦௩. போமா றெழுங்காற் புவியாதி நாதாந்த
மாமா றிடங்கொண் டமர்ந்தாலும்—யாமத்தே

௨௦௪. தில்லையா ரூருந் திருவந்திக் காப்புக்கே
தொல்லையா ரூருந் தொழுகின்றே—னெல்லை

௨௦௫. பரந்த வகிலம் பலகோடி கோடி
புரந்தசமற் கார புரத்தோ—னரந்தைப்

௨௦௬. பிறப்பா லடையாத பேரின்பந் தன்னூர்ப்
பிறப்பா லடைவிக்கும் பெம்மான்—பிறப்பன

௨௦௭. முற்று நிமலமே மூதூர்க் கிலைபுலையென்
றுற்றுநமி நந்தியார்க் கோதினோன்—பொற்றாளுக்

௨௦௮. கன்போதுந் தேவ ரனிகக் கடற்பவனி
முன்போதும் பேரி முழங்குதலு—மின்போல

௨௦௯. மொய்த்தாய முன்செல்லச் சென்றாண் முலைத்தாயர்
கைத்தாயர் கைமுகிழ்ப்பக் கைமுகிழ்த்தாள்—சித்தங்

௨௧௦. கருதியது விட்டாள் கனகத்யா கேசன்
பருதி வெருவுருவம் பார்த்தா—ளருகுபோய்

---

(பா - ம்) ௧௯௭. 'காட்டுழியிற்' ௨௦௫. 'அகிலபலகோடி'
௧௯௮. 'என்றுமதித்து' ௨௦௮. 'அனிகக்கடன்முழக்கு'
௧௯௯. 'ஈதென்று' „ 'அனிகக்கடன்முழங்க'

உகக. வேதச் சிரத்திருந்து விண்டுவுங் கண்டறியாப்
பாதத் தழகெனவும் பாராதே—மாதவர்க்குந்

உகஉ. தேவர்க்கு மாட்டைக் கிருதினஞ் சேவிப்போர்
யாவர்க்கு நாட்டமதி லென்னுதே—பூவைமீர்

உகங. பந்தித்த வாடரவக் கிண்கிணியென் பாவைக்காம்
வந்தித்து வாங்க வருகென்றாள்—சிந்தையா

உகச. லெண்ணவரும் வேட்கையோ வெண்ணிறந்த நான்முகரும்
விண்ணவருந் தேர்ந்து விதிப்பதோ—மண்ணளந்தோ

உகரு. னேதப் பிறவிதொறு மீன்றூ ரலங்கரிக்குங்
கீதச் சிறுமருங்குற் கிண்கிணியோ—நாதாந்த

உகசு. மானூர்க்கு நாதமொரு கிண்கிணியா யாடுதோறுந்
தானூர்க்க வந்த தகைமைகாண்—டேனேகே

உகஎ. ளாடரவ மீச னசைந்தா டலைநோக்கும்
பாடரவ வேதப் பதஞ்சலிகா—ணீடிரண்டு

உகஅ. நீங்கா தணிவதுகா ணின்பாவை யிப்பாம்புக்
கேங்கா தழாதே யிராதுகாண்—வாங்கினு

உகசு. மன்ன மனையாயிவ் வாட்டறிவார் வேண்டாவோ
வின்ன மரிபா யிழக்குமோ—தன்னுணராப்

உ௨0. பேதா யெவர்க்கும் பெறற்கரும்பே றென்னுதே
யோதா யிதுவு முரைத்துமோ—போதாயென்

உஉக. றூய்முதலோ ராற்றுதலு மாரூர ஞழியான்
சேய்முதலோ ரோடுந் தெருக்கடந்தான்—றாய

## பெதும்பை.

உஉஉ. பெதும்பை பிறிதொருத்தி பெட்குமதென் றூலும்
பொதும்பை விடநடவாப் பூந்தே—னெதிர்ந்து

உஉங. குழைக்கு முவகைக் குணம்புணர்ந்த தேனு
மழைக்கு நடம்புரியா மஞ்ஞை—கழைக்காமன்

உஉச. மேவ விளவேனில் வேட்பறிந்த தானுலுங்
கூவ வறியாக் குயிற்பேடை—யாவருந்

உஉரு. தோற்றுமு னேடுமி னேடுமின் றேற்றினூற்
கூற்றமி தென்று குலத்தாயர்—நாற்றிசைக்கு

(பா - ம்) உகக. 'கண் கண்டறியாப்' உஉச. 'மேவவிள'
உகசு. 'கா—ணுத' ,, 'வேட்பதறிந்தாலுங்'
உஉஉ. 'பொதும்பர்விட' ,, 'கூவலறியாக்'
உஉங. 'குணம்புரிந்ததேனுங்' உஉரு. 'கூற்ருகுமென்று'

௨௨௬. மேற்கின்ற வெம்பறை யிட்டதிர வங்கெட்டிப்
பார்க்கின்ற தன்ன பணைமுலையாண்—மேற்கொன்ற

௨௨௭. வேளைவா வென்றேன் விடைபோலக் கொல்கைக்கு
நாளைவா வென்னு நயனத்தா—ணீளமரர்

௨௨௮. தேடுங் கமலையெனச் செங்கமலை மாலையே
கூடும் படிகூட்டுங் கொண்டையா—ளாடும்

௨௨௯. வினைபுகுந்து வேகடஞ் செய்யாதாய் மீண்டு
மனைபுகுந்து செய்ம்மணியாய் வாய்ப்பா—டனிபுகுந்து

௨௩௦. தன்மண வேட்கை சிறிதுள்ளித் தன்கிளியின்
மென்மண நோக்கி மிகநகைப்பா—டன்னருகு

௨௩௧. பாவைவிளை யாடிப் பனிக்கொல்லி யொத்தமைபோய்ப்
பூவைவிளை யாடிப் பொழிலொத்தாள்—பாவையருந்

௨௩௨. தானு மலர்க்காத் தலைப்பட் டுலாவுதலு
மானு மயிலும்போல் வந்தொருத்தி—தேனனையா

௨௩௩. யாதி யவனி புவனிதிரு நீலநகர்
வீதி யழக விடங்கென்னுஞ்—சோதிதிருப்

௨௩௪. பேரேழு மிட்டுப் பெறுமகவாய் நீவளர்த்த
வோரேழு செவ்வந்திக் குள்ளோங்கி—யாரூர

௨௩௫. ணுமத்த தொன்று மலர்ந்ததென நண்ணியதைத்
தாமத்த தோளாற் றழீஇக்கொண்டு—தேமலரைக்

௨௩௬. கொய்து தொடலை குறுந்தொடிக் கைசிவப்பச்
செய்து மிலைந்து செவிலியரை—யெய்தித்

௨௩௭. திருப்பே ரவனதே யீதுதியா கேசன்
விருப்பே கொடுத்துமென வேட்ப—வுரித்தெனினுஞ்

௨௩௮. சூடியபி னாதாந்தச் சோதித் திருவுருவா
யாடியவன் வேணிக் கடுக்குமோ—சூடிய

௨௩௯. கட்டார் கமழ்போது கண்ணுக்குக் கண்ணையிடந்
திட்டார்க் கொழிய விடப்போமோ—முட்டாது

௨௪௦. கண்மலருஞ் சாத்தக் கருத்தொருமித் தார்க்கலது
தண்மலருஞ் சாத்தத் தகுங்கொலோ—பெண்மயிலே

---

(பா-ம்.) ௨௨௬. 'ஏர்க்கின்றவெம்பறை யிட்டதிடாதென்றெட்டிப்'
,, 'சேர்க்கவெரி'
௨௨௯. 'மீட்டும்'
,, 'செம்மணியாய்'
௨௩௦. 'தன்மனவேட்கை'
,, 'மென்மனநோக்கி'
,, 'தன்மறுகு'
௨௩௪. 'பெருமகவாய்'
௨௩௮. 'மோ-நாடியே'
௨௪௦. 'தண்மலரைச்'

உசக. கங்கை பிறர்கொணர்ந் திட்ட கடிமலரைச்
செங்கை யலைத்தெறிந்து சீறுளோ—பங்குடையா

உசஉ. டன்மாலை யிட்டுத் தழுவுந் திருக்கழுத்தி
லுன்மாலை யிட்டக்கா லூடாளோ—புன்மையிது

உசங. புந்தியுஞ் சிந்தியே லென்றவர் போற்றுதலு
மந்தியுஞ் சந்தியு மாடுவான்—வந்துதிரு

உசச. வாரூர்ப் பிறந்தாரெல் லார்க்கு மடியேனென்
றாரூரர் சொன்னதிரு வாரூரன்—சோரா

உசரு. வருணையத் தொண்ட ரனைவருந்தா னென்னுங்
கருணையைப் பார்முழுதுங் காணத்—திருவடிக்கீழ்

உசசு. மன்னுங் கருணா கரத்தொண்டை மான்வந்தா
னென்னுந் திருச்சின்னத் தெம்பிரான்—மின்னுகரத்

உசஎ. துங்கத் திகிரி சுடர்த்திகிரி வெற்பளவும்
பொங்கத் திருத்தேரிற் போதுதலு—மங்கெழுந்து

உசஅ. போந்தளவி லாய மகளிர் பொதுளப்போய்ச்
சாந்தளஞ் செவ்விக் கரமுகிழ்த்தா—ளேந்திழையுந்

உசகூ. தக்க தகாத வறியாத் தரத்தறிவோ
வொக்க வுமையமையு மூடலோ—மிக்கோன்

உருo. விருப்பத் தரியணையின் மேலுமையைப் போல
விருப்பத் தருங்கொலெனக் கென்று—டிருத்தாய

உருக. ரெவ்வகைத் தேவர்க்கு மித்தேவே வேந்தென்னு
மவ்வகைக் கிட்டவடை யாளங்காண்—கைவணங்கிப்

உருஉ. பாரமாம் போதணையும் பாப்பணையும் பண்டளந்த
வாரமா ணிக்கத் தமைந்ததுகா—ணாரண

உருங. மத்தகைய சிங்கத்துக் கீச னடிசுமப்ப
தித்தகைய சிங்கம்போ லெய்துமோ—நித்தனுக்

உருச. கொள்ளிய சிங் காதனம் பொன்னெனலு மொண்கயிலை
வெள்ளி யெனலுமலால் வேறுண்டோ—கொள்பவுரி

உருரு. வல்லான் மவுலி மதியத்தும் வாமத்து
மெல்லா வனமறியு மேறுமோ—வல்லாய

---

(பா-ம்.) உசஉ. 'உன்மாலையுமிட்டால்' உசகூ. 'தக்கதகாதவழியறியாத்தகவோ'
உசங. 'அஞ்சாடுவான்'
உசரு. 'அருணையத்தொண்டர்' உருஉ. 'பண்டளித்த'
உசசு. 'மின்னிகரத்' ,, 'அமைத்தது'
உசஅ. 'போந்தளவில்லா' உருங. 'சுமப்பவித்தகைய'

௨௫௬. கற்றைக் குழற்கவரி கைக்கே யுலகத்து
மற்றைக் கிளியும்போய் வைகுமோ—நற்றவ

௨௫௭. மேற்புரியா தாருக்கு வீதிவிடங் கப்பெருமான்
பாற்பிரி யாமை பலிக்குமோ—வேற்குமிடங்

௨௫௮. கொள்ளை விடத்தைக் கொழுநர்க் கமுதாக்குங்
கிள்ளை மொழிக்கொழியக் கிட்டுமோ—வொள்ளிழாய்

௨௫௯. சேய்மையி னின்று பணிநீங்குந் தீங்கெனலும்
வாய்மையி னின்ற மடமயிலுங்—தாமணுக

௨௬௦. நல்கா விடத்தார்க்குத் தம்மிடமு நல்காரின்
மல்காது வைக்கு மனமீட்டாள்—வில்வாயிற்

௨௬௧. பூவர விட்ட தொடைமடக்கிப் போர்மதனுந்
தேவர கண்டன் செலச்சென்று—ஞேவிய

## மங்கை.

௨௬௨. மொத்த வுருவத் தொருத்தி யுலகருத்தி
வைத்த கடவுண் மடமங்கை—மெய்த்தவத்தி

௨௬௩. னெய்துந் திருவினர் காணிக் கெனப்பிறிது
செய்து வளர்த்த திருப்பாவை—பொய்கையின்

௨௬௪. மீதெடுத்த பொன்மாற்று வேழ முகனறியும்
போதெடுத்த வாணிப் புதுக்கனகம்—பேதைமுதன்

௨௬௫. மூசு மளக விருளை முகமதியந்
தேசு வரவரச் சிறுதலுங்—கூசிப்போ

௨௬௬. யுச்சியி னின்றது பின்னும்பின் ஞேடியென
முச்சி விடுத்த முடிக்குழலா—ணச்சுதய

௨௬௭. மின்று மெதிர்ந்த தெனமா லயன்கோயி
னின்று நடுங்கு நெடுங்கணு—ளின்றளவே

௨௬௮. தான்புதிது கற்ற சகோடயாழ்க் கல்வியெனத்
தேன்புதிது கற்ற செழுமொழியா—ளீன்புதிய

௨௬௯. தாலக்காச் சேய்க்குத் தரும்பைங் குரும்பையுங்
கோலக்காத் தாளமுமாங் கொங்கையாண்—மாலேக்கும்

௨௭௦. பூட்டக் கொடுவந்த பூணுக்குஞ் சேடியர்க்குஞ்
சூட்டப் பழியைத் தொடங்கிடையாள்—கோட்டு

(பா-ம்.) ௨௫௭. 'மோ - சீர்ப்பீடங்' ௨௬௬. 'விடுத்து முடிகுழலாள்'
௨௫௯. 'பணியலுந்தீங்கு' ௨௬௭. 'இன்றுமுதித்தது'
௨௬௩. 'செய்துவகுத்த'

௨௭௧. முலைவரவு நெஞ்ச முளரியிரண் டொத்த
கலைவரவு முற்றுங்கை கண்டா—ளுலக

௨௭௨. மிகவிறக்கு மின்றொடிவண் மென்முலைகண் டென்றான்
முகமிறக்கி மூரன் முகிழ்ப்பாண்—மிகமதனான்

௨௭௩. முன்மொழி வார்க்கு மொழிவன்றித் தானேமுன்
பன்மொழி செய்யாப் பருவத்தாண்—மென்மலர்த்

௨௭௪. தண்டலை வீதித் தலைத்தலை நாட்செய்த
வண்டலை விட்டு மனைவிடா—டண்டாச்

௨௭௫. செழுந்துணைவி பாகர் தியாகேசர் தேரிற்
கொழுந்துணையு மாடுது மென்று—கொழுந்துழாய்த்

௨௭௬. தொங்கலை வேய்ந்தார் தொழுநின்ற பாற்கடலிற்
பொங்கலை யூடாடும் பொன்போன்றுஞ்—செங்கம்பிக்

௨௭௭. காதழகர் சென்னி மதியாடக் கன்னிமான்
மீதழகி னோடாடு மெய்போன்று—மாதுமையாள்

௨௭௮. பாகத்தி னும்போ யசைந்தாடி பாற்பளித
வாகத்தி னாடு மதுபோன்றுந்—தோகையு

௨௭௯. மாடினா னித்திலப்பே ரூசலா ரூரரைப்
பாடினா டேனொழுகப் பல்காலு—மாடத்

௨௮0. துடனின்ற மாத ருருகி யகில
மடநின்ற கொங்கை யணங்கே—புடைநின்ற

௨௮௧. பௌவ முளரிமலர்த் தெய்வமும் பான்மலர்த்
தெய்வமும் வாழ்த்தெடுக்குந் தெய்வமே—யிவ்வகையே

௨௮௨. தூய்முத்தே யூசலா நீவிரும்பிற் சோதியாம்
வெய்முத்தே சேர விரும்பாதோ—தூய்முத்தே

௨௮௩. வேறு முதவ மதன்கரும்பை மேவியா
மீறு படுத்திலே மென்னாதோ—மாறழிய

௨௮௪. வன்று கருமா வெயிறுகடிந் தட்டமையி
னின்று கடியநெடி தெண்ணாதோ—கன்றியே

௨௮௫. முன்னா ளுரித்த மதகரியை மொய்ம்பினா
லின்னா ளுரிப்ப விரங்காதோ—நன்னிலவை

---

(பா-ம்.) ௨௭௪. 'தண்டார்ச்'
௨௭௫. 'துணைவர் த்யாகேசர் தேரிற்]பவனிக்கு'
௨௭௬. 'தொழுநின்று பாற் கடலப் பொங்கலையோடு'
,, 'பாற்கடற்'
௨௮0. 'இடநின்ற மாதரெ வருமுலகம்'
௨௮௩. 'கரும்பை வெம்மதத்தான்மீறுகதக்கல் லானைமெல்லாதோ'
,, 'மேவியாம்'

௨௮௬. யப்போது தேய்த்த வரிக்கரிய தாமரையி
னிப்போது தேய்ப்ப வெதிராதோ—தப்பாத

௨௮௭. ஷைந்தா யுதத்தை யளித்தமைபோய் நாலளித்து
நந்தா யுதம்பறித்து நல்காதோ—மைந்தர்கட

௨௮௮. முள்ளூச லாட்டுவதும் போதாமே யொண்முத்தின்
வெள்ளூச லாட்டுவதும் வேண்டுமோ—கிள்ளாய்

௨௮௯. பனிப்போதின் வாட்டம் படும்படுமுன் மேனி
யினிப்போதும் போது மெனலு—நினைப்பி

௨௯0. னருமைப் பெருமான்றென் ஞரூர்ப் பெருமான்
பெருமைத் தியாகப் பெருமா—னொருதெருவிற்

௨௯௧. சேவிக்கு மெல்லைச் சிவலோகத் தெல்லைக்க
ணேவிப் பணிப்ப னெனவந்தான்—பாவை

௨௯௨. யிழையூச லாடா திருபொன் மகரக்
குழையூச லாடக் குதித்தா—டழைகாவின்

௨௯௩. சேக்கையிற் றேன்றிச் சிறைநிறைந்த வோதிம
மாக்கயத் தேகாது வைகுமோ—காக்குந்தாய்

௨௯௪. காப்புப் பிரிந்த சகோரங் கலைமதியப்
பூப்புக் கெதிராது போதுமோ—தேர்ப்பவனி

௨௯௫. சேர்ந்த குலரத்ந சிங்கா தனப்பெருமாள்
போந்த திருமறுகு போய்ப்பணிந்தாண்—மாந்தளிர்

௨௯௬. வண்ணந் திரிந்து மனந்திரிந்து விழ்தலுமுக்
கண்ணன் றிருத்தேர் கடாவினு—னொண்ணுதலை

௨௯௭. யிற்கொண்டு புக்கா ரிடுமலர்ப் பாய்ப்படுத்தார் [டியும்
சொற்கொண்டுதெள்ளமுதைச்சோர்வித்தார்—பொற்கொ

௨௯௮. வேணுமுத் தொன்றுமே மெய்த்தழலா மல்லதுநாம்
பூணுமுத் துந்தழலாய்ப் பொங்குமோ—வாணகமே

௨௯௯. போர்த்த நிசாசர னல்லாதிப் பெண்சிறையைச்
சேர்த்த நிசாசரனுஞ் செய்யுமோ—கூர்த்திறைவ

௩00. ராடு மிராவே யுயிரொடுக்கு மன்றிவெயிற்
கோடு மிராவு மொடுக்குமோ—வாடலரன்

௩0௧. பூசையிற் கூடு மணித்விரப் போந்தாவி
ஞசை மணியுமுயி ருண்ணுமோ—விசர்க்குப்

(பா-ம்.) ௨௮௬. 'தேய்ப்பவிரங்காதோ'
௨௮௭. 'போனுலளித்து'
" 'நந்தாயது'
௨௯௪. 'கலாமதியப்'
௨௯௯. 'செய்வனே'
" 'கூத்திறைவர்'
௩0௧. 'பூசைத்ரிகூடமணி'

௩0உ. பாற்கடல் வாயொழியப் பாவி செவிதியக்
கார்க்கடல் வாயாலங் காலுமோ—மேற்கிடும்பூ

௩0௩. ணுண்டுமிழுங் காற்றுவிடுத் தோங்கற் றமிழமுத
விண்டுமிழுங் காற்றும் விடமாமோ—பண்டறியே,

௩0௪. னின்று விளைந்த விவையென் றிளைத்திளைத்துக்
கன்று மடநாணுங் கைநெகிழ்ந்தாள்—சென்ற

## மடந்தை.

௩0௫. தெருவத் தொருத்தி திருமடந்தை மங்கைப்
பருவத் தடுத்த படிபோய்—வரவரக்

௩0௬. காஞ்சிச் சுருக்கமுங் கச்சிற் பெருக்கமுமாம்
பூஞ்சித் திரமருங்காள் பூண்முலையாள்—வாஞ்சித்துக்

௩0௭. கற்பன கேட்பன வக்கால மிக்கால
நிற்பன செய்த நிலைமையாண்—முற்பருவம்

௩0௮. பூணுங் கலவி புலவிபோ தாமைக்கு
நாணுங் கருத்தி னகைமுகையாள்—சேணுய

௩0௯. ரங்கையார் மாடத்தி னந்தி நிலாமுன்றின்
மங்கையர் பால்வைக வைகுதலு—மங்கொரு

௩௧0. வீழி யிதழ்விறலி மின்னனை யாய்வாழி
வாழி யெனக்கைம் மலர்கூப்பி—யாழியான்

௩௧௧. வில்லான துன்புருவ விற்பொருது நாணற்ற
தல்லாது தேவ ரறுத்ததோ—நல்லாய்

௩௧௨. வளரு மொருமூ வகைப்புட் கரிணி
முளரி நறும்போது மூன்று—முளமருண்டு

௩௧௩. மென்முகங் கீழ்மருங்கு மேனேக் குவதலது
நின்முக நோக்கிறு நேருமோ—முன்னெழுவர்

௩௧௪. சீத வனசக் கிழங்ககழ்ந்தார் தெவ்வெனநின்
பாத மிருகை பணித்தன்றே—நாதன்போய்ப்

௩௧௫. புற்றிடங் கொண்டமையும் பாதாளப் பொற்புவனத்
துற்றிடங் கொண்டமையு மோதுகோ—மற்றுன்

௩௧௬. பணிக்குப் பணிமணி பல்காலும் வாங்கிப்
பணிக்கப் புகுந்த படிகாண்—டணிப்பரிய

---

(பா-ம்) ௩0௮. 'முகையாண்-மாணிக் கத்து' ௩௧௩. 'முன்னெழுவர்'

ருகள. சிந்தை யுனதழகிற் சென்றசையா வாசிகா
ணெந்தை யசலகிழ லெய்தின—னந்தலத்துக்

ருகஅ. காதை யினுமுனது காரணமே போதுமெனக்
கோதை யகமுருகக் கூறினாள்—காதலியுந்

ருககூ. தண்ணிய வாறணிந்தார் தாமே தமியேனை
யெண்ணிய வாறணைவ தென்றென்றாள்—பண்மகளும்

ருஉ0. வார்தரு பூங்குழலாள் வாம ரினிநாளை
யூர்தரு தேர்ப்பவனி யுண்டென்றாள்—வார்சடையார்

ருஉக. நன்று தரவருமுன் னாம மலயக்கா
லின்று பொடிபடுத்தி னென்செய்கேன்—றென்றலே

ருஉஉ. வெங்கண் கொடுசுடினு மேனாட் படியின்ன
மங்கம்பெண் ணுக்க லருமையோ—பங்கயக்கண்

ருஉரு. மாட்டுப் பரிவலவர் வந்தா விளமதியக்
கோட்டுத் தழலுங் குளிருமோ—கேட்டிலையோ

ருஉச. வப்ப ருறைநீற் றறையவித்தார்க் கிப்பிறையின்
வெப்பமுந் தட்பம் விளையாதோ—வொப்பிலாச்

ருஉரு. செம்பொன்றியா கேசர் சிறியேன் முலைத்தலையிற்
பைம்பொன் மறித்தும் பறிப்பரோ—நம்பியா

ருஉசு. ரூரற் கருளி யுடன்பறித்தா ருன்னிறத்துப்
பாரப் பசும்பொன் பறியாரோ—காரொத்த

ருஉஎ. மார்கு வளைமிடற்றார் வல்வினையேன் கையைவிடுத்
தேகு வளைமீண் டிடுவரோ—மாகூடற்

ருஉஅ. செட்டு மகளிர் திரளுக் களித்தாருன்
மட்டும் வளையளிக்க மாட்டாரோ—விட்டெறிக்குங்

ருஉகூ. கோவத்தின் மேனிக் குழகர் வரின்மார
னவத்தி னம்பு மறுங்கொலோ—கோவிசயன்

ருரு0. வேண்டும் பகழி விளைவொழித்தார் வேடனி
யீண்டு மலருக் கெளியரோ—காண்டி

ருருக. யினிக்காலை யென்றென் றிருவருமிவ் வாறு
பனிக்காலை முட்டப் பகர்ந்தார்—தனிக்காலை

சுருஉ. யோட்டுந்தேர் கண்டா ளுலாத்தேருங் காண்பலெனப்
பூட்டும்பூ ணோடும் புறப்பட்டாள்—கேட்டன

---

(பா-ம்.) ருகஅ. 'அகமுருகிக்'
ருககூ. 'தண்ணிலவாறு'
ருஉ0. 'உள்ளென்றாள்'
ருஉரு. 'மறித்துப்'
ருஉசு. 'நேரொத்த'
ருஉஎ. 'வாருமணிமிடற்றார்'
ருஉஅ. 'செட்டிமகளிர்'

௩௩௩. ளத்த னசபை நடத்துக்கே யாஞ்சுத்த
மத்தளமு மாசிலாத் தாளமு—மொத்ததிருச்

௩௩௪. சின்னமுங் காகளமுந் தேவாரப் பண்ணிசையி
னன்னயமும் வேத நவின்முழக்கு—முன்னதிரக்

௩௩௫. கொட்டிய துந்துபியு மான்முடியைக் கோதண்டம்
வெட்டிய நாளெடுத்த வெண்சங்கு—மெட்டெனு

௩௩௬. மாசை யுடனாடு மாடரவக் கிண்கிணியு
மோசை புகத்தன் னுயிர்புக்கா—ளாசெடுத்துப்

௩௩௭. பொன்மாரி பாடினி மேற்பொழிந்தாள் போதிறைற்
பன்மாரி காமாரி பாற்பொழிந்தாண்—முன்வீழ்ந்

௩௩௮. தமலா சிவலோகா வாரூர்த் தியாகா
கமலா லயவல்லி காந்தா—வெமையாளுஞ்

௩௩௯. செவ்வந்தித் தாமா திருவந்திக் காப்பழகா
வெவ்வந்திப் பூசல் விலக்கென்று—ளவ்வந்தி

௩௪௦. வண்ணத்தா னிவ்வண்ண மாதைமுனி யேலென்று [கும்
வெண்ணத்தான்சேய்க்குவிழிவைத்தான்—பெண்ணணங்

௩௪௧. வைத்த விழியுடனே மீண்டாண் மழுவலனு
முய்த்த திருத்தே ருடன்போந்தா—னத்தெருவி

## அரிவை.

௩௪௨. லுற்ற வரிவை யொருத்தி தனதுநிழல்
பற்ற வுருகும் படிமத்தாள்—செற்றெழுப்புங்

௩௪௩. காலை மதனைக் கனலாற் றிளநீரு
மாலை முடிசூட்டு மாமுடியும்—போல

௩௪௪. நிரம்பித் தலைகுவிந்து நேரொத் தடியிற்
பரம்பிப் பணையப் பணைத்துப்—பெரும்புவனத்

௩௪௫. தார்வம் பிறக்குமன்ப ராபத் தொளித்ததென
வார்வம் பிறக்கும் வனமுலையா—ளோர்பொழுதுந்

௩௪௬. தங்கோர் குறையாத தன்னிறைவாற் பானுபதப்
பங்கே ருகமாம் பருவத்தாண்—மங்கைமுத

௩௪௭. லைந்தி னடுப்பொலிவா யாரூரன் செய்கரும
மைந்தி னடுப்போ லடகிற்பா—ணந்தா

---

(பா-ம்.) ௩௩௫. 'வெட்டியவன்றெடுத்த' ௩௪௫. 'மார்வம்'
௩௪௦. 'மானைமுனியேல்' ,, 'மார்பம்'
௩௪௫. 'ஒழித்ததென' ௩௪௭. 'பொலிய'

௩௪௮. துறைகோலக் கூடலுக்கு மூடலுக்குந் தூக்கு
நிறைகோலை யொத்தொழுகு நெஞ்சாள்—விறலியரு

௩௪௯. மெல்லையில் பாணரு மேத்த விருந்திரா
வொல்லையில் வீணையிடத் தோன்றேந்தித்—தொல்லருளாங்

௩௫0. காவிரியுங் காவிரி நாடுங் கழுநீரு
மாவுறையா ரூரு மணிவரையுந்—தாவுபரி

௩௫௧. வேதமு மீரா யிரமருப்பு வேழமு
நாதமாம் பஞ்சா னனமுரசு—மூதுலகங்

௩௫௨. காக்கின்ற வாள்வீர கண்டயமு ஞாலமுழு
தாக்கும் புகழ்த்தியா கக்கொடியும்—பாக்கொண்டு

௩௫௩. பண்ணமரு மூவாறிற் பாடுதலும் பாடினியோ
ரெண்ணரிய பாண ரியம்புவா—ருண்ணெகிழ்ந்து

௩௫௪. கேட்டோர்தியா கேசரோ கேட்பருனைக் காப்பர்காண்
மாட்டோர் புகழ்ந்தென் மகிழ்ந்தென்றூர்—கேட்டவளு

௩௫௫. மென்னுயிர் காப்பரோ யென்று விறந்தமதன்
றன்னுயிர் மீட்டுந் தருவரோ—முன்னெடியோன்

௩௫௬. பெய்போதி லொன்று குறைத்தார் பெறுஞ்சிறுவன்
கொய்போதி லொன்று குறையாரோ—தெய்வீகக்

௩௫௭. கல்வேழ முண்ணக் கடிவேழந் தந்தமையின்
வில்வேழ முந்தருகை வேண்டாரோ—கல்லோல

௩௫ . வெள்ளத் திரள்கரப்ப விட்ட சடாடவியிற்
பள்ளக் கடல்சுவறப் பண்ணுரோ—வொள்ளழலாய்ச்

௩௫௯. சீறு பிறைவறிது சீறுமே தம்முடியி
லேறு பிறையினுட னேற்றூரோ—கூறுமதோ

௩௬0. வென்றே மொழிந்தா ளிருந்தோர் கமலேச
ரன்றே யுறவென் றறியாயோ—குன்றை

௩௬௧. யுரிய முலைக்கெதி ரோங்காது வாங்கும்
பெரிய திறலும் பிறிதோ—வரிமீனுங்

௩௬௨. கூற்றும் விடமு மடக்கியதுன் கூர்விழியி
னூற்றும் பகையென்கைக் கல்லவோ—சீற்ற

---

(பா-ம்) ௩௪௯. 'ஏந்திக்-கொல்லியும்'
௩௫௧. 'வேதமும் வீதி விடங்கத் திருப்பெயரும்'
,, 'வேட்டநடமுரசும்'
௩௫௧-௩௫௨. 'மூதுலகை,யெண்ணரியகேள்வியியற்று திருவாணையும், பண்ணரிய மூவாறிற் பாடுதலு-முண்ணெகிழ்ந்து'

௩௬௩. மடங்க லுரிப்புந் துடியடிப்பு மற்று
னுடங்க விடைக்கலது நொய்தோ—தடங்கமட

௩௬௪. வோடு பெயர்த்த துனது புறவடிக்கா
வாடு மிகலோ வயலொன்றோ—மூடிருளைக்

௩௬௫. கண்ணுற் பலகாலுன் காரளகத் தெவ்வென்னு
மெண்ணுற் கடிவ திலாததோ—வண்ணலுமுன்

௩௬௬. மெய்யின் வெறுப்பே தமக்கும் வெறுப்பென்று
செய்யு முரிமை தெரியாதோ—தையலே

௩௬௭. குன்று குனித்தார் விரும்பிற் குறுகாரோ
வென்று தாங்கித் திரங்காதே—நின்றுறங்கித்

௩௬௮. தேவர் விடைகொ டிருக்கா வணத்திருப்போ
தேவர் முகக்குந் தியாகமோ—தேவசபைச்

௩௬௯. செம்பொ னவமணிச்சிங் காதனத்திற் றேவியொடு
மும்பர்சே னைபதியு முற்றிடவே—பம்பு

௩௭௦. திருவா சிகையுந் திகழ்கண் டயமு
மருவார் கழுநீர்செவ் வந்தி—விரவார்

௩௭௧. பணியும் பலபணியும் பன்னெய் விளக்கி
னணியுஞ்செய் பூசை யழகுந்—துணியு

௩௭௨. மறையா கமவொலியு மந்திரத்தே வார
மறைதோத் திரவடியா ரார்ப்பு—முறைமையுற

௩௭௩. மத்தளங்க டாளங்கள் சின்னம் வளைகளுட
னொத்தவெக்கா ளங்க ளுடன்குமுற—வொத்ததிரி

௩௭௪. புண்டரமுங் கண்டிகையும் பூணும் புனைந்துமுச்சிக்
கொண்டையுட னேவிடைமுன் கூட்டஞ்சேர்—மண்டபக்

௩௭௫. கொத்தி னடுப்பதியி லாள்சபைக் கோலத்துக்
கொத்தலய வத்த முடன்காட்ட—வத்தகையோர்

௩௭௬. பொற்றட்ட மேந்தப் புகழ்விசிறி சாமரங்கண்
மற்றும் வரிசைகளால் வந்திக்க—கொற்றத்

௩௭௭. திருவந்திக் காப்புக்கொள் செல்வமோ தென்றல்
மருவந்த வாயி லருகே—பருவந்

௩௭௮. தருமுபசா ரங்கள்செவிச் சார்சமய மேயோ
வரையா வரங்கொடுக்கும் வாய்ப்போ—பரிகரத்தார்

---

(பா-ம்.) ௩௬௮. 'தேவர் விடை கொள்ளத் திருப் பே ருகந்தளிக்கும்' ௩௭௭-௩௭௮. 'திருவந்திக்காப்புந் திருச்சாலகமு,முருவந்தித்தே ருமுவப்போ-பரிகாரத்தார்'

௩எகூ. பல்லிய மார்க்கும்பொற் பல்லக்குச் சேவையோ
வல்லியங் கோதை யமளியோ—புல்லத்தார்க்

௩அ0. கேது திருவுளமோ யாண்டைத் திருநோக்கோ
மாது நினைநினைந்து வந்திலார்—போது

௩அக. விடிய வருவர் வருவரெனும் வேலை
யடியர் முடிவணங்கி யார்ப்ப—விடுபரித்த்

௩அஉ. தேருந் தியாகேசர் தெய்வத் திருத்தேரு
மூரும் பெருவீதி யுட்போதக்—காரிகையும்

௩அ௩. வந்து தொழுதெழுந்து மாணிக்கப் பேரழகை
முந்து விழியின் முகந்துண்டாள்—சந்துதிரி

௩அச. நம்பா வுமைபங்கா நாயகர்க்கு நாயகா
வெம்பா லுன் னெஞ்ச மிரங்காதோ—வும்பர்தொழ

௩அரு. வைம்போ துதிர வடித்தகான் மாரன்ற
னைம்போ துதிர வடியாதோ—கம்பேந்தி

௩அசு. யச்சிலைக்கு நாணை யரிசிதலை போற்கரும்பி
னிச்சிலைக்கு மோர்சிதலை யெய்தாதோ—நிச்சவிழாச்

௩அஎ. சேவிப்பத் தாழ்த்துவருந் தேவர் விலங்கொருநாள்
வாவிப் பொருவேட்கும் வாராதோ—கோவிடுந்தே

௩அஅ. ரங்கட் குழவிக்குச் செய்ததுநின் னூழித்தேர்
திங்கட் குழவிக்குஞ் செய்யாதோ—வெங்காற்று

௩அகூ. மன்றல் கமழ்தீர்த்தந் தூர்த்த மனச்சினமித்
தென்ற லுடன்முடுகிச் செல்லாதோ—வென்று

௩கூ0. ளிடநோக்க மஞ்சி யிவட்கு வலத்துத்
தடநோக்கந் தந்து தணந்தான்—மடநோக்கி

௩கூக. முன்னழகு கண்ட முதன்மயக்கின் மும்மடங்கு
பின்னழகு கண்டு பெருகினா—டன்னிற்

## தெரிவை.

௩கூஉ. பரியு முனிவர் மறைத்தாலும் பத்தி
தெரியு மொருத்தி தெரிவை—மருவை

௩கூ௩. யிறையுடன் மோப்ப விறங்கிமதித் தேகாப்
பிறையுட னைத்த பிறையுங்—கறைமிடற்றோன்

(பா-ம்.) ௩எகூ. 'பல்லக்கிற் செல்வமோ' ௩அஉ. 'ஊரும் பெருமை யுடன் போத'
௩அ0. 'யாது திருவுளமோ' ௩அகூ. 'முடிக்கச்செல்லாதோ
௩அஉ. 'தெய்வவாழித்தேரும்' ௩கூ0. 'விடநோக்கி'

௩௯௪. கண்ணற் கடந்த வடையாளங் கைக்கொளலின்
வண்ணக் கமல மலர்மகளைப்—பெண்மையின்

௩௯௫. சீலத் தொருதானு மாறழித்த சின்னமே
போலத் திருவும் பொலிகுழலா—ளாலத்தை

௩௯௬. யுண்ணத் துணிந்த துடையா னிவைக்கிடையே
நண்ணப் பயின்றதெனு நாட்டத்தா—டிண்ணியகல்

௩௯௭. வில்லான் றிருமேனி விண்ணேயென் றந்தவிண்
ணெல்லாந் தழுவ வெழுமுலையாண்—மெல்லிடை

௩௯௮. யில்லைகொ லுண்டுகொ லென்றென் றிறைதிருக்கண்
வல்லையில் வைக்கும் வகைமானப்—பல்காசின்

௩௯௯. பட்டிகையும் வெண்ணிறப் பட்டு மொளியொளிரக்
கட்டிய செம்பொற் கடிதடத்தாள்—விட்டெறியும்

௪௦௦. பல்கோடி பந்தினும் பத்திமுத் தூசலினும்
வெல்கோ டியமகர வீணையினும்—வல்லியரைச்

௪௦௧. சிறிப் பொருதுவெல்லுஞ் செவ்விபோய்ச் சீருமே
யாறிப் பொருதுவெல் லு மாற்றலா—ளேறிய

௪௦௨. வேற்று னுடனே யிவைநம் மவயவத்தே
தோற்றுன் மொழிந்திடா தூதென்று—மேற்றுய்ப்

௪௦௩. புயலுங் குயிலும் பொறியவரி வண்டு
மியலும் பொழிலுக் கெழாமே—மயிலுடன்

௪௦௪. கிள்ளைசூழ் செய்குன்றிற் கிட்டாமே யோதிமக்
கொள்ளைசூ ழோடை குடையாமே—வெள்ளிய

௪௦௫. வேலை பொருவு மரமியத்தில் வீற்றிருக்குங்
காலை யொருத்திவந்து காரிகையே—மேலொருகை

௪௦௬. யோட்டிரக்குங் காலத்து மொண்முனிவர் பன்னியரை
வாட்டிரக்கஞ் செய்து மருள்செய்தார்—தீட்டரும்பொற்

௪௦௭. சிங்கா தனப்பெற்றுத் தேர்பெற்றிப் போதுவந்தாற்
பொங்கா தரவு பொறுக்குமோ—சங்கார்கை

௪௦௮. யான்மோ கினியா யணியோ டெதிர்படத்தம்
மான்மோகஞ் செய்து மருள்செய்தார்—தேன்மொழியார்

௪௦௯. கூடலிளங் கோக்கள் வனிதையர்க்குக் கோலவளை
போடும் பொழுதுமயல் பூட்டினர்—வேடப்

௪௧௦. பரதராய் மீன்வலையாற் பாவைதிரை மங்கைக்
கிரதராய் மால்செய்தின் புற்றூர்—வரைமகளா

(பா-ம்.) ௩௯௯. 'வெண்பளிதப்பட்டும்' ௪௦௦. 'மெல்லியரை'

சகக. மங்கை தவங்கள் புரிய வயோதிகராய்த்
தங்கியின்ப வாய்மொழிகள் சாதித்தார்—நங்காய்

சகஉ. முழுதுமோர் கோல முதல்வர் பவனிக்
கெழுதுமோ வைகுதுமோ வென்றாள்—பழுதிலாண்

சகங. மூவரு மோதியவை கற்றோதின் மோகத்தா
லேவருவர் நம்பா விலங்கிழாய்—தீவருத்தா

சகச. தேட்டெழுது நள்ளாற்றுச் செய்யுளை யாமணியுந்
தோட்டெழுதில் வாடை சுடுங்கொலோ—நாட்டுதிரு

சகரு. வாலவா யான்றிருநீ றள்ளிற் குலத்தரசு
போலவா னிந்துவெப்பும் போகாதோ—பாலனூர்

சகசு. தைவந்து தென்னவர்கூன் றள்ளுதிருப் பாட்டெடுத்தாற்
கைவந்த வேள்சிலைக்கூன் காணுமோ—பொய்வந்து

சகஎ. போக்குந் தரும புரத்தியாழ் மூரியினாற்
றீக்கு மிசையாழ் சிதையாதோ—மாக்கடலுங்

சகஅ. தெவ்வரிடு கன்மிதப்பச் செய்ததிருப் பாட்டிசைத்தா
னைவித் திரவி னலியுமோ—வையாற்றுக்

சகசு. காவிரி யாறுமறி யூரன் கவிக்கிருகண்
மாவிரி யாறு மறியாதோ—மூவர்திருப்

சஉ0. பாடலா லுய்யலா மெங்கோன் பதமலருஞ்
சூடலா மென்று துணிந்தெழுந்தா—ளாடகத்

சஉக. தியாகக் கொடியே தனிவளரச் செய்தொருநாட்
பாகற் கொடியே பலவறுப்பா—ளைமச்

சஉஉ. சோதியிற் காசிக்குந் தொல்லம் பலத்திற்கு
மாதியிற் பேரூரா மாரூரன்—வீதியிற்

சஉங. பீலிக் குடைநிழலும் பேரிக் குழாமுழக்குங்
கோலித் திசைவிசும்புங் கொந்தளிப்ப—வேலையுஞ்

சஉச. சிந்த விடைக்கொடிமீ தாடத் திருத்தேரின்
வந்த பவனிவந்து வந்தித்தா—ணிந்தையா

சஉரு. ரூரன் புறம்பரனு மொக்கப் புறம்பென்றோர்
பேரன்பன் சீறும் பெருமாளே—கார்தவழும்

---

(பா-ம்) சகச. 'நள்ளாற்று மெய்ஞ்ஞானம்' சஉங. 'கோத்தளப்ப'
சகஅ. 'உய்வித்த வப்ப னுயிரொன் சஉரு. 'ஊரன் புறனுயனெ
னும் யாப்பிசைத்தால்' க்குப் புறனென்று

௪உ௬. வெள்ளிக் கிரிபசும்பொன் மேருக் கிரியுறைந்து
முள்ளிச் சிறுபுற் றுறைந்தீரோ—புள்ளுயர்த்தோன்

௪உ௭. வாதுபோய்க் காணு மலர்ச்சே வடிகாமத்
தூதுபோய்த் தேயத் துணிந்தீரோ—மீதசைந்து

௪உ௮. மாணிக்கத் தண்டு மணிமன் று மாடியகூத்
தாணிப் புறங்கா டடைந்தீரோ—பேணியே

௪உ௯. பெய்யுமடிக் காயிரம் பொன்னென்னப் பேறளிக்குங்
கையு மிரப்புங் கலந்தீரோ—மையோவிஞ்

௪௩0. நாதாந்தக் கோலமொரு நான்மறையோன் யாகத்தே
தீதாம் புலைக்கோலஞ் செய்தீரோ—வேதாந்தக்

௪௩௧. கேள்வியோர் காதிரண்டுங் கிட்டே லெமையென் று
வேள்வியோர் வைதனவும் வேட்டீரோ—தாழ்விதனுற்

௪௩உ. புல்கிய துண்டோ வுமைதோய் புயமெனக்கு
நல்கிய துண்டே னலம்போமோ—கொல்கணிச்சி

௪௩௩. வீரரே யெவ்வூர்க்கு மேனூ ரெனநிறுத்த
வூரரே யென்றென் றுருகினுள்—பேரிளம்பெண்

## பேரிளம்பெண்.

௪௩௪. வேறொருத்தி பல்கலைக்கும் வேதாவி னுவிற்போ
யேறொருத்தி யேனுமெதிராதாள்—வேறினியென்

௪௩௫. றண்டா மரைமயிலுந் தாமரையும் பாமகளும்
வெண்டா மரையுமா மேனியாள்—வண்டாட

௪௩௬. முன்னஞ் சுமந்த தமையாமே மொய்மணத்தை
யின்னஞ் சுமந்திளைக்கி லென்செய்யுந்—தென்னுலவை

௪௩௭. யாதி திருச்சா லகத்தோட மாட்டாமென்
றோதி மலர்பொதியா வோதியாண்—மோதித்

௪௩௮. திரைபோ யுலகஞ் சிதைப்பச் சிதைந்த
கரைபோல் வரிதுறந்த கண்ணு—ளரிபிரம

௪௩௯. ரென்பணியும் வன்மீகர் மன்றுட் டெனப்புலியும்
வன்பணியு முன்பணியும் வார்த்தையாண்—முன்பணைத்து

௪௪0. வானடையத் தாமே வளர்ந்து கவர்ந்தந்த
வானடையக் காணு வகைமையால்—வானெதுங்கி

௪௪௧. யீண்டு நிலைத்த தெனமருங்கைப் பார்ப்பதெனப்
பூண்டு முகங்கவிழ்ந்த பூண்முலையாள்—வேண்டியநா

(பா-ம்.) ௪உ௬. 'கவர்ந்தீரோ'

௪௪௨. ணாற் பனசை நகரத் தயன்பரந்துங்
காணாத் தலைசாய்த்த காரிகையும்—பூணாகம்

௪௪௩. பெய்துடைய கோவைத்தன் பிட்டுண்ணப் புண்ணியஞ்
செய்துடைய செம்மனச் செல்வியுங்—கொய்துமக

௪௪௪. வன்றரிந்த செங்காட் டமையுந் தலையிறைச்சி
நன்றரிந்த சந்தன நங்கையு—மென்றிவர்க

௪௪௫. ளொண்பிறப்பே போலப் பிறப்பெய்தி னாவாது
பெண்பிறப்பே வேண்டும் பெரிதென்பா—ணண்பினரா

௪௪௬. யல்விளை சோலைகலந் தாயிரங் கோடியராய்ப்
பல்விளை யாட்டயரும் பாவையரை—வில்விளையுஞ்

௪௪௭. சூடகக் கைவண்டு மொய்வண்டுஞ் சூழ்ந்தாட
வாடகத் தம்மானை யாடுவீர்—பீடு

௪௪௮. விரவுதிரு வாசகத்து மெய்வாத வூரர்
பரவுதிரு வம்மானை பாடீர்—விரைகமழுஞ்

௪௪௯. சுண்ணப் பொடியிடிப்பீர் தொன்னா ளவர்விளம்பும்
வண்ணத் திருச்சுண்ணம் வந்தோதீ—ரெண்ணிறப்பக்

௪௫௦. கூடுதிருத் தெள்ளேணங் கொட்டுவீ ராங்கவர்
பாடுதிருத் தெள்ளேணப் பாட்டறையீர்—தோடவிழச்

௪௫௧. சாத்துதிருப் பூக்கொய்வீர் சம்புப் பரியமைத்தா
ரேத்துதிருப் பூவல்லி யின்றேத்தீர்—கூத்தி

௪௫௨. னடுத்ததிரு வுந்தி பறப்பீ ரவர்வா
யெடுத்ததிரு வுந்தி யியம்பீர்—தொடுத்தாடி

௪௫௩. மல்குதிருத் தோணோக்கீர் மாணிக்க வாசகர்
நல்குதிருத் தோணோக்க நாவறையீர்—பல்வரியி

௪௫௪. ராற்றுதிருப் பொன்னூச லாடுவீர் நீடுமவர் [க்கு
போற்றுதிருப் பொன்னூசல் போய்ப்புகழ்வீர்—சாற்றளி

௪௫௫. நன்னர் குயில்கிளிக்கு நம்ப ரிசையிசைப்பீ
ரன்ன ரிசைத்தனவே யாங்கிசையீ—ரென்னு

௪௫௬. மிவையிவை போதித் திருந்துழி மாத
ரவையவை கேட்கு மளவிற்—குவிகையளாய்

௪௫௭. வாங்கிச் சிவபத்த வாணி யெனுங்கிளியைத்
தாங்கிக் கனிகனிவாய்த் தந்தேந்தி—யாங்களிப்ப

---

(பா-ம்) ௪௪௨. 'தலைதாழ்த்த'
௪௪௪. 'அன்றீந்த'
,, 'நன்றீந்த'
௪௪௬. 'சோலைகவர்ந்து'
௪௫௫. 'குயிலரிக்கு'

௪௫௮. முன்னமொரு சொல்லே முதல்வன் சொலவொருவன்
சொன்னதிருத் தொண்டத் தொகையெல்லா—மென்னமுதே

௪௫௯. பாடுக பாடுக பாடி நெடிதூழி
நீடுக நீடுக நீயென்றாள்—கூட

௪௬௦. வுறைகின்ற வுன்னுயத் துள்ளோ ரழகே
யறைகின்ற தொண்டரழ கன்றே—பிறைநுதலா

௪௬௧. யெற்களவு பேச வடங்கா விடங்கழியார்
நெற்களவு போன நிசிவனப்பு—நெற்குமுளே

௪௬௨. வாரி யிளைசையின் மாறர் வருமிருளு
மூரி யளக முடியன்றே—காரிகையே

௪௬௩. பண்டையி னெல்வேலி மாறர் படுமுடற்கூன்
கொண்டையி லிட்டபிறைக் கூனன்றே—பண்டு

௪௬௪. வணங்கா தவரை வணக்கவிறன் மிண்ட
ரணங்காக வைக்கு மசியு— மணங்கமழ்பூப்

௪௬௫. போக்கு மதமாப் பொருதே யெறிபத்தர்
நூக்கு நவியு நுதலன்றே—மாக்கள்

௪௬௬. படுபடை யூனைப் படைத்தகண் ணப்ப
ரடுபடை விற்புருவ மன்றே—நடுவிற்

௪௬௭. குலவு மியற்பகையார் கோட்புலியார் சுற்றம்
பலவு மடியப் படுத்துங்—கலிக்காமர்

௪௬௮. மெய்ச்சிறுத் தொண்டர்சேய் மெய்ப்பொரு ளுயரிவ
ரச்சுருக் காய மறவறுத்து—மெச்சுகழற்

௪௬௯. சிங்கர் மனைவிகர மூக்குச் செருத்துணையா
ரங்கைகலிக் கம்ப ரரிவைக்குச்—சங்கரன்

௪௭௦. வீறு பழிநா விரிஞ்சையூர்ச் சத்தியார்
கூறு படப்படக் கொய்தெடுத்துஞ்—சீறிக்

௪௭௧. குலச்சிறையா ரேனாதி நாதர்குறு காளை
யலற்செய் மூனையடுவா ரட்டுந்—துலக்கிய

---

(பா-ம்) ௪௬௧. 'நற்குமுளே'
௪௬௪. 'வணங்காவிடலை'
௪௬௫. 'நூக்குநவியம்'
௪௬௭. 'அடையப்படுத்தும்'
௪௬௮. 'அச்சுதன்காயம்'
௪௬௮-௪௬௯. 'மெய்ச்சிங்கன், தேவி காத்தையவண் மூக்கைச் செருத்துணைதன், காவி விழிகைக் கலிக்கம்பன்-சேவு யர்த்தோன்'
௪௭௧. 'குலச்சிறையே னாதி மூனைய டுவான் கூடா, ரலைச்சிறை யெய்த வலைத்துந்'

சஎஉ. வாளுமொரு தாய ரதிபத்தர் மாவடுமீன்
கோளுமிரு கண்ணின் குலமன்றோ—தாளிணையிற்

சஎங. பொய்யடிமை யில்லாப் புலமையோர் காடவர்கோன்
செய்யடிமைக் காரியார் சேக்கிழார்—மெய்யிற்

சஎச. பணிந்து பரமனையே பாடுவார் பாட்டி
னணிந்த சிவப்புவா யன்றோ—மணந்து

சஎரு. தருமுத்தி மெய்ஞ்ஞான சம்பந்தர் பந்த
ருமுத்து வெண்முறுவ லன்றோ—திருமூலர்

சஎசு. மந்திரத்திற் கூறும் வரிக்குயிலுஞ் சண்டேசர்
தந்திரத்தி னூட்டுந் தடம்பாலு—மைந்தெழுத்தி

சஎஎ. னுறையர் நீலகண்டப் பாண ரமைக்குழலுந்
தேனுறைய வீணைத் திறநெறியு—மூனுதிர்த்த

சஎஅ. காரைக்கா லம்மை கனியுமுன் கையுரைத்த
பாரைக்கா மூர்த்தியார் பைஞ்சாந்துஞ்—சேருந்

சஎகூ. தருண வினிமையைந்துந் தன்மைய தொன்று
மருண மெழுமொழி யன்றோ—வருபவர்க்குத்

சஅ0. துப்பமைத்து நல்குமொரு சூத ரெறிசூது
மப்பரைக்கை கூப்பு மடுபகடு—மெய்ப்பொதுவின்

சஅக. வேண்டுமொரு கூற்றுவனார் மேன்முடியுங் கோன்முடியைத்
தீண்டு புகழ்த்துணையார் செங்குடமு—மாண்டைக்க

சஅஉ. ணன்போ மிழலைக் குறும்பரா ரூரர்க்கு
முன்பேர் மலையு முலையன்றோ—பொன்போலு

சஅங. மானக்கஞ் சாறர் மகளளகப் பஞ்சவடி
ஞானக் கலையர் நறுந்தாம—மூன

சஅச. வினையர் மனக்கறுப்பு மிக்கோ ரொழுங்கு
மனைய வரிரோம மன்றோ—புனையிழாய்

சஅரு. தில்லையில் வாழுந் தணர்நற் சிறப்புலியார்
வல்லையி லம்பர்ச்சோ மாசியா—ரில்லறத்து

சஅசு. நாவற் சடையரிசை ஞானியார் பூசலார்
தேவத் திருமேனி தீண்டுநர்—நாவுரைக்குந்

---

(பா-ம்.) சஎசு. ‘கூவும் வரிக்குயிலும்’
சஎகூ. ‘அன்றோ - கருணையினால்’
சஅ0. ‘துப்பனைத்தும்’
” ‘அப்பனையி லாளுடையார்க் காங்காயும்’
சஅஉ. ‘அன்றோ- வன்பான’
சஅச. ‘வினையருள வாணவமும்’
சஅசு. ‘பூசலையார்’

௪௮௭. தங்கலையுஞ் சாலியரு ணேசனார் தாபதர்க்கு
வெங்கலை நெய்திழைக்கு மெல்லிழையுஞ்—செங்கணார்மு

௪௮௮. னுய்த்தநா னீலநக்கர் தேவி யுமிழ்சிலம்பி
வைத்தநூல் யாவு மருங்கன்றோ—பத்திவிடு

௪௮௯. மல்கு லரஞணைக் கப்பூதி யார்மகத்தந்
தொல்கு மரவி னுருவன்றோ—நல்வணிக

௪௯௦. ரம்பொ னமர்நீதி யார்கோ வணநிறுத்த
பைம்பொற் றராசு பரடன்றோ—நப்பதிக்கே

௪௯௧. தண்டி யடிக டடாகத்து நீலகண்டர்
மண்டி யிளமைபெறு வான்குளத்துங்—கொண்டவெழுத்

௪௯௨. தஞ்சு மியம்பிப் பசுபதியா ராழ்கயத்தும்
விஞ்சு முளரி விரிகோலஞ்—செஞ்சொல்

௪௯௩. படியு முகமு மிருகையும் பஞ்சூட்
டடியு முடன்சிறப்ப வன்றோ—கொடியே

௪௯௪. திருவா திரைக்குநர சிங்க முனைய
ரொருவாத பாணர்க் குதியர்—சொரிபொன்னு

௪௯௫. மோணகாந் தன்றளியி னண்பர்க் கொளித்தளித்த
காணமு மேனிக் கவினன்றோ—வாணிலவு

௪௯௬. மென்மை முருகர் கணநாதர் வேணியர்க்குத்
தொன்மை தருபூந் தொடையன்றோ—நன்மைக்

௪௯௭. கலிநீதி யார்நமி நந்திகணம் புல்லர்
மலிய விடுந்தீப மாண்பு—முலக

௪௯௮. முயத்தகு வாயிலா ருட்பூசை யின்கண்
வியத்தகு ஞான விளக்கு—மியற்கருவூர்ச்

௪௯௯. சென்னிபுகழ்ச் சோழர் திருநாளைப் போவார்விழ்
வன்னிநிற மும்பூண் மணியன்றோ—கன்னித்

௫௦௦. திருமங் கையைவென்ற செவ்விக் கிவரே
யருமங் கையர்க்கரசி யன்றோ—கிரிமுகிலின்

---

(பா-ம்.) ௪௮௯. 'சிவநேச ரப்பூதி யார்மகத்தந்து'
௪௯௦. 'பைம்பொற்றுலையும்'
௪௯௧. 'தண்டி யெடுத்த தடாகத்துப்'
௪௯௫. 'நாகையிற் கீழ்வேளூர் நம்பர்க் கொளித்தளித்த, மாசையிற் பொன்னும் வடிவன்றோ - வாகத்து'
௪௯௭. 'கலிய னமிநந்தி காரிகணம் புல்லன், மலியவிடுஞ் சோதி வடிவும்'
௫௦௦. 'அரசி'

௫௦௧. மூசுவார் மென்முலைக்கற் பூர முழுநீறு
பூசுவார் பூதிப் பொடியன்றோ—விசனையே

௫௦௨. துற்று திருக்குறிப்புத் தொண்டருஞ் சாக்கியரு
மெற்று சிலையு மெறிசிலையு—மற்றச்

௫௦௩. சமையத்துந் தெய்வத் தலத்து நெகிழா
தமையப் பிடித்ததிட மன்றோ—நமதுதிரு

௫௦௪. வாரூர்ப் பிறந்தா ரயலோ விவர்க்குமிப்
பேரூர்ப் பிறப்பே பிறப்பன்றோ—தீராத

௫௦௫. பத்தராய்த் தாழ்வாரப் பாலுமடிச் சார்ந்தார்கள்
சித்தமே சங்கரன்பாற் சேர்வித்தோ—ரித்தனையே

௫௦௬. ரிங்கிவ ரன்றோவென் றேற்பக் கிளிதெளியக்
கொங்கிவ ரோதியுடன் கூறுதலு—மங்காங்

௫௦௭. தரகர வென்றுருகு மவ்வேலை மூன்று
புரகரன் வீதி புகுந்தான்—கரமுகிழ்த்துத்

௫௦௮. தத்தையை வைத்துத தமரிற் சதகோடி
யொத்தயல் செல்ல வுடன்சென்றா—ளத்திரளை

௫௦௯. நீந்தி நுதலு நிலமணப்பத் தாழ்ந்துதொழு
தேந்தி மலைகுனித்த வேந்தலே—மாந்தளிர்

௫௧௦. வண்ணத் துமையாண் முலைத்தழும்பு மார்பகத்தி
னண்ணத் தவஞ்செய்த நாயகனே—கண்ணப்ப

௫௧௧. ரெச்சிற் றடியு மெழில்வாயின் மஞ்சனமு
மூச்சிப்போ துங்கொள்ளு முத்தமனே—செச்சைமயில்

௫௧௨. வாகனத்தோன் வானவரைக் காத்துமாச் சூர்தடிய
மாகனத்த வேலுதவும் வள்ளலே—மோகமிகப்

௫௧௩. பிட்டுக்கு மண்ணுஞ் சுமந்து பிரம்பினடி
பட்டுப் பரிந்தளித்த பாக்கியனே—நிட்டைபெறுஞ்

௫௧௪. சங்கப் புலவருடன் சங்கத்தி லேயிருந்து
கொங்குதேர் வாழ்க்கை கொடுத்தோனே—பங்கயற்க

௫௧௫. ணம்மை யுடன்சுந் தரபாண் டியனாகி
யிம்மையிலே நன்மைதரு மெம்மானே—மும்மையுல

௫௧௬. கேந்துமுசு குந்தமன்னற் கின்பமுறு மெவ்வரமு
மீந்ததியா கேச விறைவனே—வீந்தவிரு

---

(பா-ம்.) ௫௦௨. 'பற்று திருக்குறிப்பன் ௫௦௫. சித்தத்தைச்'
சாக்கியன் பண்டெலை'

ருகஎ. கண்ணுங் கவிவினவக் கச்சிகம லாலயத்து
நண்ணும் படிகொடுத்த நங்கோவே—தண்ணியலாக்

ருகஅ. காயினு நீசிலநாள் வைகிய காரணத்தின்
வேயினு னேயம் விளக்கின்றேன்—வாயினுற்

ருககூ. சுட்டாலு நின்கச்சிச் சூதத் திருப்பதனல்
விட்டாலுங் கோகிலத்தை வேட்கின்றே—னட்டாலும்

ருஉ0. பிள்ளை பணித்தபணிப் பெண்ணை யகலாத
புள்ளை யெளியேன் புகல்கின்றே—னுள்ளயரக்

ருஉக. கைக்கு மெனினுமுன் காதுபெறப் பெற்றமையி
னுய்க்கு மிசையை யுவக்கின்றேன்—மெய்க்கழலாய்

ருஉஉ. வேடைய தெய்த வெதுப்பினு நின்குவட்டு
வாடைய தென்று மகிழ்கின்றேன்—கோடிநம

ருஉங. ளுகு மெனினுமுன் வேணி யணிந்தமையி
ளுகு மதியை நயக்கின்றேன்—வேகத்தா

ருஉச. லிக்கு வளைத்துவே ளெய்யவெறுப் பாயினுமுன்
மெய்க்கு வளைத்தார் விழைகின்றேன்—கைக்குதவா

ருஉரு. யென்று திருத்தேர் நிலையளவு மேத்தெடுத்துத்
துன்று கழுநீர்த் தொடைபெற்றா—ணின்ற

ருஉசா. வினைப்பகையுங் காமத்து விற்காமன் செய்யு
முனைப்பகையுங் கூட முடித்தா—டனைப்பணிந்தே

ருஉஎ. யிவ்வா றெழுபருவத் தெல்லோரு முன்போத
வுய்வார் பவனிக் குடன்போதச்—சைவ

ருஉஅ. வழிப்போந்தான் றாதாய்ப் பரவையார் மாடத்
துழிப்போந்தான் போந்தா னுலா.

---

## நேரிசை வெண்பா.

மாதர் நலங்கொண்டு வீதி வலங்கொண்டு
மாதை யிடங்கொண்டு வாழ்கந்த—நாதனடுக்
கொண்டுதியா கேசர்பூங் கோயிற்சிங் காதனமேற்
கொண்டா ரசபைநடங் கொண்டு.

---

(பா-ம்.) ருககூ. 'வெஃகினேன்' ருஉஅ. 'சந்தாய்ப்'

ருஉச. 'தார் விரும்பினேன்'

## பயன்.

நாட்டுங் கமலைத் திருவுலா நற்செவியாற்
கேட்டும் படித்துங் கிளரின்பங்—காட்டும்
பொருளைப் புகழ்ந்துதினம் போற்றத்யா கேச
ரருளைப் பெறுவா ரவர்.

---

## சிறப்புப் பாயிரங்கள்.

க. தெள்ளுதமி ழாரூர்த் தியாகேசர் மெய்யன்பு
கொள்ளுங் கமலையுலாக் கூறினை—யுள்ளக்
குவிவீர ராகவன்சொற் கூடிற் புலவீர்
கவிவீர ராகவன்சொற் கண்டு.

## கட்டளைக் கலித்துறை.

உ. புவியோர் பெறுந்திரு வாரூ ருலாவைப் புலவர்க்கெலாஞ்
செவியே சுவைபெறு மாறுசெய் தான்சிவ ஞானவனு
பவியே யெனுநங் கவிவீர ராகவன் பாடியநற்
கவியே கவியவ னல்லாத பேர்கவி கற்கவியே.

[இஃது, இலங்கைப் பரராசசேகரனென்னும் அரசர் பாடிய செய்யுளென்று தமிழ்நாவலர்சரிதையால் தெரிகின்றது.]

திருவாரூருலா முற்றிற்று.

ஸ்ரீதியாகராசர் துணை.

கணபதிதுணை.

# திருவாரூருலா

# அரும்பதவுரை.

### காப்பு.

**வாதாவிவிநாயகர்துதி.** கமலை-திருமகள், திருவாரூர். கம் - நீர். மீ - மேலே. வேழம் உக - கொறுக்காந்தட்டைகள் உகும்படி.

**மாற்றுரைத்தவிநாயகர் துதி.** போற்று உரைத்த - துதிகளைக் கூறிய, ஆரணமே - வேதமே. கைச்சிலம்பு - கையையுடைய மலைபோல்வார். திருமுதுகுன்றத்திற் பெற்றுத் திருமணிமுத்தநதியில் இட்டு இத்தலத்தில் தேவதீர்த்தத்தில் எடுத்த பன்னீராயிரம் பொன்னைச் சுந்தரமூர்த்தி நாயனுருக்கு மாற்றுரைத்துக் காட்டியதுபற்றி, இவர் இத்திருநாமம் பெற்றனர். (தியாக. கட. ௬).

### அவையடக்கம்.

சோதிகையும் - சிவபெருமானது திருக்கரமும். மா நாகமும் - பெரிய வாசுகியென்னும் பாம்பும். பூநாகம் - நாகப்பூச்சி; "திருக்கழுக்குன்ற. அவை."

### நூல்.

க. தேவு - தெய்வம். ஒன்பானெனும் பேறு - நவந்தருபேதம்.

௨. நாதாந்தமேயாய் - நாததத்துவத்திற்கு அப்பாலாய்.

௩. உயிர்களை உய்வித்தற்பொருட்டு, பராசத்தி தவஞ் செய்துகொண்டு எழுந்தருளியிருத்தல்பற்றி, இத்தலம், பராசத்தி யெல்லை என்றும் சத்திபுரமென்றும் வழங்கப்பெறும்; "இறந்திடா ஞானசத்தி யெல்லையாமாரூர்" (திருவாரூர்ப்பு) என்பதனுலுணர்க. பராசத்தி யென்றது கமலாம்பிகையை.

ச-ரு. இடையில் இளைப்புருமல் நிறைவேற்றுவோரே தலைவரென்று திருமாலும் இந்திரன் முதலிய தேவர்களும் தம்முள் நிச்சயித்துக்கொண்டு சென்று குருக்ஷேத்திரத்தில் யாகமொன்று செய்கையில், தேவர்கள் அயர்ச்சியடைந்து நின்றுவிட, திருமால் அதனை ஆயிரம் வருடத்தில் நிறைவேற்றித் தாமே தலைவரென்று செருக்குற்றனர்; சிவாஞ்ஞையால் யாகத் தீயிலிருந்து அப்பொழுது, ஐசுவரமென்னும் பெயரையுடைய வில்லொன்று எழுந்தது. அவர், களிப்பின்மிகுதியால் அதனைக்கைப்பற்றி வளைத்து அம்புகளைத் தொடுத்துத் துரத்தத் தேவர்கள் ஓடிவந்து இத்தலத்தை அடைந்தார்கள். உடன்வந்த திருமால் இத்தல விசேடத்தால் தம் வன்மையும் செருக்குங் குறையப்பெற்று மயக்கமுற்று அவ்வில்லையூன்றி அதன் தலையின்மேல் தமது தலையைச் சாய்த்துத் துயில்வாராயினர். அப்பொழுது தேவர்கள் பிருகஸ்பதியின் குமாருடைய கட்டளைப்படி அவ்வில்லின்கீழ் ஒரு புற்றை உண்டாக்கித் தாம் சறையான் வடிவங்கொண்டு அப்புற்றுவழியாகச் சென்று மேற்கூறிய வில்லினது நாணின் அடியை அரித்தபொழுது சிவபெருமான் அப்புற்றிலிருந்து சோதிவடி

வாகத் தோற்றினரென்பது வரலாறு. (திருவாரூர்ப்பு, வன்மீக)

எ. சனகாதிகளுக்குக்கலியின் துயரம் தீர்த்ததுபற்றி இத்தலத்திற்குக் கலிசெலாநகரம் என்பது ஒரு திருநாமம். (திருவாரூர்ப்பு. தலமகிமை. கஉ).

அ. குணதீரம் - கீழ்கரை. ஈர்த்த - அறுக்கப்பட்ட.

கூ. தம்முடைய தமையனர் உண்ண வைத்திருந்த கனி முதலியவற்றை அவரனுமதியின்றி உண்டு, அந்தத் தோஷபரிகாரமாக அவரால் தம்முடைய கைகள் அரியப் பெற்றசங்கமுனிவரென்பவர், இத்தலத்துள்ள அமுததீர்த்தத்தில் ஆடி அக்கைகள் வளரப்பெற்றனர்; இதனல் அத்தீர்த்தம் சங்கதீர்த்தமென்று பெயர் பெற்றது; (திருவாரூர்ப்பு. சங்க) "கரங்கொடுத்துச் சங்கருக்குக் கனைகடல்வாய்த் துயில்வோற்குச், சிரங்கொடுத்த பெருஞ்செல்வத் திருவாரூர்" (திருவாரூர்ப்பு. அசலே. கக.) என்பதனுலுமறிக.

கம. கமலை - திருமகள். திருமாலுக்குத் திருமகளை மணஞ்செய்வித்ததை மகாலட்சுமிச் சருக்கத்தாலுணர்க. (திருவாரூர்ப்பு.)

கக-கச. கண்ணன் கருத்து-புத்திரன் வேண்டுமென்பது. இக்கண்ணிகளால், தியாகராஜமூர்த்தி, முதலில் திருமாலாலும் அப்பால் இந்திரனுலும் பூசிக்கப்பெற்றுப் பின்பு முசுகுந்தசக்கரவர்த்தியால் இத்தலத்திற்கு எழுந்தருளினமை கூறப்படுகின்றது. (திருவாரூர்ப்பு. தியாகராச; கந்த. கந்தவி). தொடிக்கைமான் - உமாதேவியார்.

கரு-கசு. கோ - பசு. கூலிக்கு ஊர்ப்பசுக்களை மேய்ப்பவனுகிய வணிகனெருவன் ஓடிப்போன பசுவொன்றைத் தொடர்ந்து இத்தலத்தைச் சூழ்ந்த புண்ணியத்தால் மறுபிறப்பில் தசானன தேசத்து அரசனுயினன்; அப்பசு மறுபிறப்பில் அவனுக்கு மந்திரியாயிற்று; இருவரும் பின்பு முத்திபெற்றன ரென்பது வரலாறு. (திருவாரூர்ப்பு. பிரதக்ஷிண.)

கஎ. திரிசங்கு - திரிகின்ற சங்குகள்; ஓரரசன். வசிஷ்ட முனிவருடைய பிள்ளைகளின் சாபத்தாற் புலையன் வடிவம்பெற்ற திரிசங்கு வென்னுமரசன், கௌசிகமுனிவருடைய கட்டளையால் இத்தலத்தை யடைந்து தேவதீர்த்தத்தில் ஆடி நல்ல உடம்பு பெற்றுனென்பது வரலாறு. (திருவாரூர்ப்பு. திரிசங்கு.)

கஎ-கஅ. சுருதியன் - கேமசருமனென்னும் அந்தணன்; இவன் நீர் வேட்கையுற்றுப் பார்த்தையொருத்தி கொடுத்த கள்ளைக் கள்ளென்றறியாமற் பருகிப் பின்பு தெரிந்து வந்து இத்தேவதீர்த்தத்தில் ஆடி அப்பாவம் தீரப்பெற்றனன். காரி - இந்திரன். ஆவி கொள்வினை யென்க. இந்திரனுக்கு விருத்திர ஹத்தியை இத்தீர்த்தம் போக்கியது. (திருவாரூர்ப்பு. கேம. இந்திர.)

கஅ-கக. வடக்கேயுள்ளகயையால் தீர்க்கப்படாததான நன்றிமறப்பென்னும் பாவத்தை இத்தலத்துள்ள கயாதீர்த்தம் ஒரு பேய்க்குத் தீர்த்தது. (திருவாரூர்ப்பு. கயா) இத்தீர்த்தமுள்ள இடம் கயக்கரை யென்று இக்காலத்து வழங்கும்.

உ0. கோடி முனிவர்கள் வந்து தவம் புரிந்து தரிசித்த பொழுது, வன்மீகநாதர் கோடியளவான திருவுருவங்கள் கொண்டு அவர்களுக்குக் காட்சி கொடுத்தருளினர். (திருவாரூர்ப்பு. உருத்திர)

உ0-உக. தேர்பத்தன் - தசரதன். ஒருசித்தன் - சித்திசனென்னும் அரசன். இவர்களுக்கு ஸ்ரீவன்மீகநாதர் மகப்பேறு அருளினர். (திருவாரூர்ப்பு. தசரத; சித்தி.)

உச-உஉ. கோகருணமென்று பெயருள்ளவர்களாகிய இருவர்க்கு முத்தி

யளித்தனர். (திருவாரூர்ப்பு. கோசுரு ணச்)

உஉ-உங. முருகு - இளமை. சித்திரகாயம் - புலி. குலிசித்திரநாமம் - குலிசேசனென்னும் திருமான பெயரை; கேகயநாட்டரசனாகிய குலிசனென்பவன் தன்னிடம் பாரணஞ்செய்ய வந்த துருவாச முனிவருக்கு ஊனோடு கலந்த உணவை அருத்திய குற்றம் பற்றி, அவராற் புலியாகச் சபிக்கப் பெற்று இத்தலமடைந்து அவ்வுருவம் தீர்ந்தனன். (திருவாரூர்ப்பு. குலிசே)

உங-உச. முத்து ஈத்த-முத்துக்களை இழுத்த. கலிக்கு அஞ்சி மூன்றரைக்கோடி புண்ணிய தீர்த்தங்கள் இத்தலத்தை அடைந்தன. (திருவாரூர்ப்பு. சர்வ).

உரு-உசு. ஒர் எழும் - திருவாரூர், திருநாகைக்காரோணம், திருக்காறுயல், திருக்கோளிலி, திருமறைக்காடு, திருநள்ளாறு, திருவாய்மூர் என்னும் எழுதலங்களும், ஸ்ரீ தியாகராஜமூர்த்திகள் எழுந்தருளப்பெற்றிருத்தலின், இத்தலங்கள் ஸப்தவிடங்கஸ்தலமென்று கூறப்படும்; இதனை, "சீரார் திருவாரூர் தென்னாகை நள்ளாறு, காரார் மறைக்காடு காறுயல்—பேரான, ஒத்ததிரு வாய்மூருவந்ததிருக் கோளிலி, சத்த விடங்கத் தலம்." என்னும் ஆன்றோர் திருவாக்காலுணர்க. விடங்கர் - தியாகராசர்; இவ்வெழுவருள் இத்தலத்து மூர்த்திக்கு வீதிவிடங்கரென்பது திருநாமம்.

உஎ. மணித்தண்டு - மாணிக்கத்தண்டு. இத்தலத்தில் ஸ்ரீ தியாகேசருடைய திருவாடுதண்டு மாணிக்கத்தண்டென்று கூறப்படும். தியாகேசர் சிங்காதனம் இரத்தின சிங்காதனமாதலின், 'மணிச் சிங்காதனம்' என்றார். பெருமாள் - பெருமையையுடையவர்.

உஅ. தேவாகண்டரென்பது தியாகேசருடைய திருநாமம்.

உகூ. தியாகேசருடைய துவசம் - தியாகக்கொடி என வழங்கும்.

ருஉ. வாதித்தல் - விலங்கிடல்.

ருரு. பங்குனி யுத்திரத்தில் தியாகேசருடைய திருவடியைத் தரிசிப்போர் முத்தி பெறுவர்.

ருஎ. திருமகளுக்கு மணஞ்செய்வித்தது.

ருசு-ருஅ. கடு - விடம். சூரியோதயவர்ணனை. தனது மகளென்றது திருமகளை. மருகன் - திருமால். கனமணி - கவுத்துவம். தினமணி - சூரியன.

ருகூ. அல்லியங் கோதை யென்பது, அம்பிகையின் திருநாமம். நீலோத்பலாம்பிகை என்பர்.

சo-சக. இரண்டு - உவர்க்கடலும், கட்கடலும். ஐந்து - நெய்க்கடல் முதலியன. இந்நூலாசிரியர், இக்கருத்தை, "ஆட்ட, முதுபெருங் கடலோரைந்துய" (நகர. உஎ.) எனத் திருக்கழுக்குன்றப்புராணத்திலும் அமைத்திருக்கின்றார்.

சஉ-சரு. சேடனாகிய காப்பைத் திருக்கரத்தில் அணிந்து; பொறைவில் - மேருவாகிய வில். கணைக்கு அணையாய் - அம்பாகிய திருமாலுக்குப் படுக்கையாகி. கோடாத தேர் - பூமி. சாதிபற்றியும் தலைமைபற்றியும் வாசுகியின் றொழில் சேடன்மேலேற்றப்பட்டது. கோடு - மலை.

சச-சரு. மருங்கை யொத்தது நூல். சஅரு-ம் கண்ணி முதலியன ஈண்டு ஆராயத்தக்கன.

சரு-சசு. அராக்கச்சு - ஆதிசேடனாகிய கச்சு. உடைவாளிற்குச் சூரியனும் அராக்கச்சிற்குக் கேதுவும் உவமைகள். மருளிச்கொள - ஒப்ப.

சஎ-சஅ. உழை - மான். காப்பு - சேடன். உழை இடக்கரத்தும், காப்பு வலக்கரத்தும் உள்ளவைகளாதலின், இரண்டிற்கும் இரண்டு மதிகள் வேண்டுவன வாயின. செவ்வந்தித்

தோடுகளுக்கு மதிகள் உவமை. ஆற்றிய - ஆற்றுதற்கு.

௪௯. நீலரத்நகண்டசரத்திற்கு உமாதேவியாருடைய கை உவமை.

௪௯-௫௧. உரகன் - ஆதிசேடன்; அவன் தாங்கு மடந்தை - பூமிதேவி; அவள் தந்தை - பிரமதேவர்; அவள் காந்தன் - திருமால். அவர்கள் பிறப்பைத்தாங்கும் உறுப்புக்கள் - திருத்தோள்கள்; அவற்றைஉரகன் தழீஇயென்னவென்க. இலயப்புயங்கம் - புயங்கநடனம்; அரவுபோல் ஆடல். வலயப்புயங்கம் - பாம்பாகிய வாகுவலயம். வாகுவலயங்கட்குச் சேடனுவமை.

௫௧-௫௨. மிடற்றுமஞ்சு - நீலகண்டமாகிய மேகம். புரிநூல் - பூணூல்.

௫௨-௫௪. கஞ்சம் - தாமரை. குருகு அங்கைநாயகி - வளையலையணிந்த அழகியகையையுடைய உமாதேவியார். செங்கழுநீர் சேர்த்தமை - செங்கழுநீர்மாலை. கங்காதேவியாருடைய சிவந்தகண்களின் ஒளிக்குச் செங்கழுநீர்மாலையும் நகையொளிக்கு முத்துமாலையும் உவமைகள்.

௫௪-௫௬. மார்த்தாண்டன் - சூரியன்; எழுவாய். சூரியனைப்பாரதயுத்தத்தில் மறைத்த முன்னோன் - திருமால். தடித்து - மின்னல். இரத்தினகடகத்திற்குச் சூரியன் உவமை.

௫௬-௫௮. உந்தியென்பது ஆற்றிற்கும் கடலுக்கும் நாபிக்கும் பெயர். தன்பூதம் - அப்பு. பந்தி மருவு தரம் முத்து - வரிசையாக மருவிய தகுதியையுடைய முத்துக்கள்; முத்தாலாகிய உதரபந்தனத்திற்கு நுரைஉவமை.

௫௮-௬௦. இவற்றால், திருவடிகளில் ஆடரவமும் கிண்கிணியும் அணிந்தமை கூறுகின்றார்; இவை - ஆடரவச் கிண்கிணியென்றுங் கூறப்படும். இவ்வரலாற்றை உகரு-ம் கண்ணிமுதலியவற்றாலுணர்க.

௬௧-௬௭. இவற்றால், திருமேனியிற் பச்சைக்கருப்பூரம் சாத்துதல்கூறுகின்றார். கருப்பூரத்திற்குப் பாற்கடற்றுளிகளின்செறிவும் நீறும் நிலவும் முத்தும் கங்கையும் நகையும் உவமைகள்.

௬௧. திருப்பாற்கடலில் திருமாலின்மார்பில் தியாகேசர் முதலில் எழுந்தருளியிருந்தமை ஈண்டுஅறியற்பாலது.

௬௨. திருமேனியாகிய தழல்.

௬௪. திருநெல்வேலியில் மூங்கிலடியில் தோன்றியதுபற்றி, சிவபெருமான், வேய்முத்தென்று கூறப்படுவர்.

௬௮. பளிதம்-பச்சைக்கருப்பூரம்; பளிதமாகிய மதி. ஊர் - பரிவேடம்.

௬௯-௭௨. இவற்றால், நிலைக்கண்ணாடிபார்த்தல் கூறப்படுகின்றது. சிவபெருமானுடையதிருமேனியின் ஒவ்வொரு கூற்றைக்கவர்ந்த உமாதேவியார் முதலியோருடைய தவத்திலும் அதனை முற்றுங்கவர்ந்த நிலைக்கண்ணாடியின் தவமே பெரிதென்றபடி. கண்ணாடி, உலோகத்தாலும் செய்வித்தலுண்டு. சுருதி நிலைக்கண் நாடித் தோன்ற அரியான் - சிவபெருமான். பருதி - வட்டம்.

௭௩. வேதவனம் - வேதாரணியம். அடைத்தோன் - திருஞானசம்பந்தமூர்த்திநாயனார். அது திறந்தோன் - திருநாவுக்கரசுநாயனார். தாதுவிடுத்தோன் - சுந்தரமூர்த்திநாயனார். சொற்பாட்டு - தேவாரங்கள்.

௭௪. நானூறு காரிகையை நல்கினோன் - நானூறு கட்டளைக்கலித்துறையாலாகிய திருக்கோவையாரை அருளிச்செய்த மாணிக்கவாசகர்.

௭௫. கல்லெனல் - ஒலிக்குறிப்பு. கல்என்னும் உண்டியான் கான்முளை - கல் லென்கின்ற உணவையுடையவராகிய சிலாதமுனிவருடைய புத்திர

ரான திருநந்திதேவர். சிலாதரென்ப தற்குக் கல்லையுண்பவனென்று பொருள்.

எரு-எசு. விசயன் செம்மலுக்கு - அருச்சுனனுடைய செவ்வியமற்போருக்கு. தோள்கொடுத்த செம்மலை - சிவபெருமான். செம்மல் - நிர்மாலியம், பெருமையிற் சிறந்த சண்டேசநாயனர். மயிலை - மயிலாப்பூரில்.

எஎ. என்பினற்பெண்ணைப் பெற்றெனக. பெருத ஆண்பெண்ணை - ஈனத ஆண்பனையை; ஆண்பனையைப் பெண்பனையாகச்செய்தோர் - திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

எஅ. பூதியம் - உடம்பு. மைந்தனுக்கு உயிரையளித்தோன் - திருநாவுக்கரசு நாயனர்.

எகூ. அப்பு அரவை இட்ட - ஆகாயகங்கையையும் பாம்பையுமணிந்த. தூதினற் பரவையினது விருப்பத்தையடைந்தவர் - சுந்தரமூர்த்திநாயனர்.

அ0. அஞ்சு அம்புவாசி - (மன்மதனுடைய) ஐந்துபாணங்களின் விசேடத்தை. அம் சம்புவாசி - அழகிய நரியாகிய குதிரைகளை. அழைத்தோன் - மாணிக்கவாசகர்.

அ0-அக. துஞ்சு அமளி அம்பர்க்கு - தூங்குதற்குரியபடுக்கையை நீராகவுடைய திருமாலுக்கு. போதற்கு - பிரமதேவற்கு. சுந்தரமூர்த்திநாயனருடைய திருவருளால், தியாகேசரைத் திருவம்பரிலுள்ள தம்முடையயாகசாலைக்கு எழுந்தருளச் செய்தவர், சோமாசிமாறநாயனர். இக்கதையை, இந்நூல், கஉக, கஎஎ, சுகூ0-ம் கண்ணிகளாலும், "இகத்துக்குப் போகமறுமைக்கினிய பேரின்ப மெவர்க்கு நல்கிச், சகத்துக்குப் போகவினை தூரந்தவாரூரிறையைத் தையல் செம்பொ, னகத்துக்குப் போகவென விடுத்தமட்டோ சோமாசி யம்பர்ச் செய்யு, மகத்துக்குப் போகவென வாய்மலர்ந்த கவிமுகிலை வாழ்த்தி வாழ்வாம்." (பாயிரம், கூ.) என்னுந்திருக்கடவூர்ப்புராணச் செய்யுளாலும், திருவம்பர்ப்புராணத்துள்ள, மாறநாயனர் வழிபடுபடலத்தாலுமுணர்க.

அஉ. கால் சிலம்பின் சந்து அணிந்து - தென்றற்காற்றையுடைய பொதியின் மலையில் உண்டாகும் சந்தனக்காப்பைச் சாத்தி. தினந்தோறும் பூசையில் சிவபெருமானுடைய திருவடிச்சிலம்போசை கேட்டவர் - சேரமான்பெருமாணயனர்.

அஉ-அங. நூல் சிலம்ப கற்று - நூல்களை மிகக்கற்று; ஆவி காவி கமலை வாய் - தடாகங்கள்தோறும் நீலோற்பலங்களையுடைய திருவாரூரில்; கன்று ஆவிக்கு மகவை ஆவிகளைந்தோன் - மநுநீதிச்சோழர்; பெரியபுராணம், திருவாரூர்ச்சிறப்பைப்பார்க்க.

அங-அச. சற்றேனும் நீ எள்வாய் அலை - சிறிதேனும் நீ இகழாதே. 'எள்ளைஎன்வாயிலுமிழ்' என்றவர், வரகுணபாண்டியதேவர்; இதனை, "வழிபடு மொருவன் மஞ்சனத் தியற்றிய, செழுவிதை யெள்ளைத் தின்னக் கண்டு, பிடித்தலு மவனிப் பிறப்புக் கென்ன, இடித்துக்கொண்டவனெச்சிலை நுகர்ந்தும்" (உஅ) என்னும் திருவிடைமருதூர் மும்மணிக்கோவையாலும், "பரிந்திடை மருதர் நன்னீ ராடமுன் பரப்பு மெள்ளைக், கரந்தொரு கள்ளன் றின்னக் கண்டவர் கொடுசெ லுங்கா, லருந்திய தென்னை யென்ன வான்றமர்க் கடிமையாக, வரும்பிற வியின்க ணென்றன் மன்னவ னயின்றான் வாங்கி" (சஅ-வது. உரு.) என்னும் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தாலும், மருதவனப்புராணம், வரகுணச்சருக்கம், சுகூ-ம் செய்யுளாலுமுணர்க.

அஎ. கம்பிக்காதழகரென்பது, தியாகேசர் திருநாமம்.

அஅ. தானமு தன்மையர் - ஸ்தானீகர்.

அகூ. சைவச்சுருதித் தலைவர்கள் - ஆதிசைவர்கள். பரிகாரத்துச்சேயோர் - தொண்டுசெய்பவர்.

கூக. போற்று - துதி.

கூக-கூஉ. கூற்றை அழலுமுளரி - சிவபெருமானுடைய திருவடித்தாமரைகளை. அகக்கோளர் - உள்ளேகொண்டிருப்பவர்கள்.

கூங. தண்டு - மாணிக்கத்தண்டு. விட்டதிருவாசல் - விட்டவாயில். இது, சந்நிதியிலுள்ள பெரியகோபுரத்தையடுத்த வடக்குவாசல்.

கூச. எடுப்பளவோ - எடுத்தல்மட்டுமோ. காராயவண்ணக்கணை - திருமாலாகிய கணைகள்.

கூரு. உரகருணம் - பாம்பாகிய நாண். பீடுகெழீஇ-பெருமைபொருந்தி.

கூசு. அன்றைத்தேர் ஆழிக்கு - திரிபுரசங்காரகாலத்துக்கொண்ட தேரின் உருளைகளாகிய சந்திரசூரியர்களுக்கு.

கூஎ-கூஅ. நேமி - உருளை ; ஆகாயகங்கையையும் மதியையும் இத்தேரின் முடி தொடச்செல்கின்றதென்றபடி.

கOO. தூபத்தால் விண்புதைய. புணரி - பாற்கடல்.

கOக. பூசை - திருமால் செய்த பூசை. அந்த - அப்பாற்கடலில்.

கOஉ. அவியைக் கையால் தொடநின்றார் - தேவர்.

கOங. விரிந்தவிழியில் உள்ளதீ - கோபாக்கினி. எரிவிழி - நெற்றிக்கண்.

கOச. வேல் ஆலம் - வேற்படையையும் விடத்தையும். ஆலவட்டம் - விசிறி.

கOச-கOரு. வேலைதருகொடி - திருமகள். திருமகளை மார்பிலும் பூமிதேவியைப் புயத்திலும் வைத்தகொடி - திருமாலாகிய இடபக்கொடி.

கOசு. சேயோரிருவர் - விநாயகரும் முருகக்கடவுளும். ஏயோரிருவர் - திருமாலும் பிரமதேவரும்; ஏயோர், ஏனையோரென்பதன் விகாரம். இருபுள் - கருடனும் அன்னமும்.

கOஎ. அருக்கர் - சூரியர் பன்னிருவர். முடிவெள்ளருக்கர் - உருத்திரர் பதினொருவர்.

கOஅ. எண்மர் - அட்டவசுக்கள். நிலாஒருவர் - சந்திரன். ஐம்முனிவரோடு இருவர் - சப்தரிஷிகள். மானம் - விமானம்.

கOஅ-கOகூ. இருகாரிப்பெயரோர் - வைரவக்கடவுளும் ஐயனாரும். ஞாளி - நாய். வாரிப்பணையோன் - மன்மதன். மலைக்கால் - தென்றல்.

கOகூ-கக0. ஓர்எட்டுவேந்தர் - திசாபாலரெண்மர். வருடை - ஆடு.

கக்க. நவசித்தர் - ஆதிநாதர்முதலியோர். போகர் - போகபூமியிலுள்ளோர். ஆகம் - மார்பு.

ககஉ. ஏமப்பூண்-பொன்னாபரணம். வாமம் - இடப்பக்கம்.

ககங. வரைப்பிறந்த அன்னம் - உமாதேவியார்.

ககச. வான்மகள் - இந்திராணி. மூன்று திருக்கண்மகள் - துர்க்கை. திகிரிக்கைமகள் - காளி.

ககரு. இருவர் - தும்புரு நாரதர் ; கம்பளர் அசுவதரரென்னும் உரகர்களுமாம். இசையாகிய தேனை இறைப்ப.

ககஎ-ககூ. குடமுழவு முதலியன வாத்திய விசேடங்கள்.

ககூ-கஉ0. மகுடத்தலையன் - முசுகுந்தசக்கரவர்த்தி. தருநாடு - சுவர்க்கலோகம்.

கஉக. ஒருமறையோன் - சோமாசிமாறநாயனார்.

கஉஉ. முனைவர் - தேவர்.

கஉச. ஆயின் - ஆராய்ந்தால்.

கஉரு. எழுகடலும் சிறுகும்

கஉசூ. செல்விவரும்ஆலயத்து மடவார் - திருமகள் அவதரித்த பாற்கடலிற்றோன்றிய தெய்வமகளிர்.

கஉசூ-கஉஎ. அரிமகன்-மன்மதன். சாபம் - 'இறக்க' என்று உமாதேவியாரிட்டசாபம். நீக்கியது - இறந்த பின்பு மீட்டும் தோன்றுவானென்றது. (திருவாரூர்ப்பு - தியாகராச.)

கஉஎ-கஉஅ. ஒருவன் - விசுவாமித்திரமுனிவர். அவரால் மேனகை ஒருகாலத்துச் சாபமுற்று இத்தலத்தையடைந்து அச்சாபத்தை அவள் நீக்கிக்கொண்டனள். (திருவாரூர்ப்பு - விசுவா.) மால் நகரின் - பெருமை பொருந்திய வீடுகளையுடைய.

கஉஅ கஉகூ. ஒருபெண் - காயத்திரி. பிரமன்பாற் காயத்திரியைச்சேர்த்த சரிதையைப் பிரமயாகச் சருக்கத்தாலுணர்க. (திருவாரூர்ப்பு.)

கஙo. ஒருவிஞ்சையன் - சுந்தரமூர்த்திநாயனார். விஞ்சையர் மாதர் - வித்தியாதரமகளிர்.

கஙo-கஙக. ஸந்நிதியில்வந்து யாழ் வாசிக்கவேண்டுமென்று திருநீலகண்டயாழ்ப்பாணநாயனார் நிரம்பப்பிரார்த்தித்தபொழுது, ஸ்ரீவன்மீகநாதர், வடமதிலில் ஒரு வாயில்செய்வித்து, அவ்வழியே வருவித்து யாழ்வாசிக்கச்செய்து கேட்டருளினர்; அவருடன் சிலகந்தருவமகளிர் வந்தனரென்பது வரலாறு: இதனை, பெரியபுராணத்தில் திருநீலகண்டயாழ்ப்பாணநாயனார் புராணம், அ-ம் திருவிருத்தத்தாலும், "திருநீல கண்டத்துப் பெரும்பாணன் றிருமூலட் டானன் முன்னே, பெருகார்வத் துடனேயாழ் வாசிக்கப் பெறுவேனே வென்கை பேணி, யுரமாரும் வடமதிலி லொரு வாய்தல் செய்வித்துள் வரவமேவித், திருவாரூர்த் திருமூலட்டானனவன் யாழ்கேட்டுச் சிறப்புச் செய்தான்." (திருவாரூர்ச். ங அ) என்னும் கமலாலயச்சிறப்பாலும், "பாதியிரா, வாரூர் வடபுரிசை யன்பாற் றிறந்ததுவும்." (ஙசுசு, ஙசுஎ) என்னும் திருக்கழுக்குன்ற உலாவாலுமுணர்க.

கஙஉ. பிரமதேவர் இத்தலத்தை ஒருதட்டிலும் மற்றைத் தலங்களை ஒருதட்டிலும் வைத்து நிறுத்தபொழுது, இத்தலம் கனத்துவிளங்கியதென்பது வரலாறு; "ஒருதலையினப்புரிமைத் தொழிந்தசிவ புரிவிதங்களனைத்து மற்றை, யொருதலையினுறவைத்தே யுறத்தூக்கிப் பார்த்தலுமப் புரிக்கே யொத்த, குருவிலைமற்றப்புரிகட் கப்புரியிற் பராசத்தி குலவலாலே, யுரியபெயர் சீநகர மதுதனையே திருவாரூ ரென்ப ரோர்ந்தோர்." (கமலா. பசுபதி). இப்படி - இத்தலம்.

கஙசு. கோடி - வளைவு.

கஙசு-கஙஎ. வாய்முத்தும் தோள் வேயம் எதிர்நிரனிறை.

கஙகூ-கசக. ஆனந்தர் - ஆனந்தேசுவரர். தாமரைப்பூக்களைப் பறித்து விற்று வயிறுவளர்ப்பவனாகிய பட்டினசாமியென்னும் வணிகனொருவன், ஒருநாள் அவைகள் விற்கப்படாமையால் மெலிந்து இத்தலத்தை அடைந்து அன்றிரவிற் சிலபெரியோர்கள் கட்டளைப்படி ஆனந்தேசரை அம்மலர்களால் அருச்சித்து விழித்துக் கொண்டேயிருந்து தாங்க முடியாதபசியால் மறுநாட்காலையில் இறந்தான்; மனைவியுமிறந்தாள். பின்பு அவன் சூரியகுலத்தில் இக்ஷ்வாகுபரம்பரையிற் பத்திரசேனனென்னும் அரசனானான். அவள் அவனுடைய தேவியாயினளென்பது வரலாறு. (திருவாரூர்ப்பு. ஆனந்தே.) தெளிர்த்தல் - முழங்குதல். குருகு - வளையல்.

கசஉ. முழுக - முழுக்க.

கசரு. அந்தி போதும் மதி - அந்தியில் வருகின்ற சந்திரன்.

கசசு. முகிழ்ப்பு - அரும்புதல்.

கசஅ. தார் - மார்பின்மாலை.

கசகூ. வனசம் கரன் - தாமரைமலர்போன்ற திருக்கைகளில். கனசக்கரன் அமளி கச்சு - கனவியசக்கரத்தையுடைய திருமாலின் படுக்கையாகிய அராக்கச்சு.

கருo. தியாகவிநோதப் பெயர் வரைந்த சேலை - தியாகவிநோதனென்னும் திருநாமத்தை எழுதிய சேலை; இஃது இக்காலத்து, தியாகவர்ணமென வழங்கும். சீரா - தலைச்சீரா.

கருக. ஆடரவக்கிண்கிணி - ஆடரவமும் கிண்கிணியுமென்க.

கருச. முசுகுந்தசக்கரவர்த்தி, வைவச்சுதகற்பத்தில் மாசிமாதத்தில் அத்தநக்ஷத்திரத்தில் இத்தலத்தே ஸ்ரீ தியாகேசரை ஸ்தாபனஞ்செய்து திருவிழாச் செய்வித்தனர். (கமலா. சோமா. உஅ; திருவாரூர்ப்பு. தியாகராச. உங-ச; திருவிழா.)

கருரு. வீரை - கடல். வீரகண்டையம் - தியாகேசருடைய வாட்படை.

கருஎ. திருமார்பிற்குச் செவ்விய அந்திவானமும் செவ்வந்திமாலைக்கு நிலாவும் உவமைகள்.

கருஎ-கருஅ. சிவபெருமானுடைய திருச்செவிகளிற் கம்பளர் அசுவதரரென்னு மிருவரும் இடைவிடாமற் பாடிக்கொண்டிருக்கின்றன ரென்பது சைவபுராணவரலாறு.

கசூo. தோற்று அழகு - தோற்றமழகு.

கசூக. கங்கைக்கு முகங்கள் ஆயிரமாதலின், கண்கள் ஈராயிரம் கூறப்பட்டன.

கசூஉ. வீதியிடத்து எள்விழா.

கசூச. நெருப்பினால் நீர்குறையும்.

கசூசு. 'அம்பொன் குடத்தோடளித்து' என்றார், கொங்கைகளைப் பசப்பித்தது கருதி.

கசூஎ. அமண் - சமணமதம், ஆடையின்மை. தென்னாட்டுஅமணச் சிதைத்தார் - பாண்டிநாட்டிற்சமண மதத்தை அழிவித்தார். கூறை - ஆடை.

கசூஅ-கசூகூ. கன்று - பசுக்கன்று, வளையல்கள்; பெரியபுராணத்தில் திருவாரூர்ச்சிறப்பிற்கூறியகதை ஈண்டு உணரற்பாலது.

கஎஉ. சாலகம் - தியாகேசர் பக்கத்திலுள்ள பல்சுணி.

கஎங-கஎச. அடிவைப்பு ஒன்றற்கு ஆயிரம்பொன் பெய்தல், "கனகமோரடிக் காயிர நல்குமெங் கடவுளனக நாயகன்" (திருவாரூர்ப்பு. திருநகரச். சஎ) என்பதனாலுமுணரப்படும்.

கஎரு. மாலானவர் தனுநாண் - திருமாலினுடைய வில்லிற்பூட்டிய நாணி, மயக்கமடைந்த மகளிருடைய உடம்பிலுள்ள இலச்சை.

கஎசு. வேதியன் - சோமாசிமாற நாயனார்.

கஅo. மாறு - விடை.

கஅக. சிவதத்த மாவளவன், அரசுரிமையைப் பெறுமளவும் தியாகேசர் அரசராகவீற்றிருந்து நாட்டிலுள்ளாருடைய இன்பதுன்பங்களைத் தமது திருவாக்காலேயேவிசாரித்து அரசாட்சிசெய்தருளினமையின், 'திருவாய்க்கேள்வி செய்தகதை' என்றார். இச்சரிதையைத் தியாகராசலீலையாலுணர்க. திருவாய்க்கேள்வி என்னுமொழியைத் தமிழ்ச்சிலாசாசனங்களிற் பரக்கக்காணலாம்.

கஅங. சாந்து - கருஞ்சாந்து.

கஅரு. சாமன் - காமனுல்.

கஅஎ. கலை - கலைமான், வித்தை.

ககூo. தக்கன்மகம் பலரையுங்கூட்டி முடித்ததென்றது ஈண்டு அறியத்தக்கது. கூட்டிமுடியாத, இலேடை.

௧௯௨-௧௯௩. தேரூர்ந்தசேய் முதலியோர்கள் இறந்துபிறந்தமை, இவளுடையபற்கள்வீழ்ந்து முளைத்தமைக்கு உவமை. தேரூர்ந்த சேய் - வீதிவிடங்கன். செங்காட்டிற் சேய் - சீராளதேவர். கரா - முதலை.

௧௯௩-௧௯௪. சேயும் உடன்கூடுந் துணையும் - திருஞானசம்பந்த மூர்த்திநாயனாரும் வந்து கூடச்சேருமளவும்.

௧௯௯. வள்ளம் - கிண்ணம். அதென்று - அக்கிண்ணமென்று. ஆயம் நள் - ஆயத்தின் நடுவே.

௨௦௧-௨௦௨. சூரியகுலத்தில் தசரதர் மரபிற் பிறந்து ஊமையாகவேயிருந்து அரசாட்சிசெய்துவந்த தசரதனென்னுமரசன், இத்தலத்தையடைந்து வாணிதீர்த்தத்தில் ஆடிஎழுந்தவுடன் வாக்கு உண்டாகப்பெற்று அதன் வடகரையில்எழுந்தருளிய பராசத்தியைப் பலகவிகளால் துதித்தானென்பதுவரலாறு; "மேதகு வாணிதீர்த்த வியன்புனற் படிந்தவேந்தன், வாதவூ ராளி செய்ய வதனதாமரைமொ ழிக்குஞ், சீதமா கருணைவெள்ளந் திளைத்திடு மூங்கை யென்னப், போதமா மதுரச் செந்தேன் பொழிகவி பல்மொ ழிந்தான்" (திருவாரூர்ப்பு. பரா. ௨௪.)

௨௦௩-௨௦௪. சிதம்பரத்தில் அர்த்தயாமதரிசனமும் இத்தலத்தில்திருவந்திக்காப்புத் தரிசனமும் மிக்கவிசேடமுடையன; இவ்வுண்மை, "ஆதலாற்கம லாலயத் தந்தியங் காப்புங், கோதி லாமணி மன்றந்தி யாமமுங் குடியாப், போதும்" (திருக்கழுக்குன்ற. உருத்திர. ௫௬) என்பதனால் உணரற்பாலது. இதுபற்றியே தியாகேசருக்குத் திருவந்திக்காப்பழகரென்பது திருநாமமாயிற்று. தில்லை ஆர் ஊர் - தில்லைமரங்கள் நிரம்பிய ஊர்; சிதம்பரம்.

௨௦௫. ஆனர்த்ததேசத்து அரசனாகியசமற்காரனென்பவன், வேட்டையாடச்சென்று, கன்றுக்குப் பாலூட்டிக்கொண்டுநின்ற பெண்மான்மீது அம்பையெய்து, வெண்குட்டமுண்டாகும்படி அதனாற் சபிக்கப்பெற்று, எவ்விடத்தும் அந்நோய் தீரப்பெறாமல் இத்தலத்தையடைந்து சங்கதீர்த்தத்திலாடி அந்நோய் நீங்கப்பெற்று இந்நகரத்தைப் புதுப்பித்துப் பலஅந்தணர்களை இங்கே தாபனஞ்செய்தமையால், இதற்குச் சமற்காரபுரமென்பதுபெயராயிற்று. (திருவாரூர்ப்பு. சமற்கார.)

௨௦௬. திருவாரூரிற் பிறந்தவர்கள் முத்தியெய்துதற்கு உரியவர்களென்பதை, "திருவாரூர்ப் பிறந்தார்களெல்லார்க்கு மடியேன்" (திருத்தொண்டத். ௧௦) என்பதனாலுமுணர்க. பேரின்பத்தை அடைவிக்கும் பெம்மான்.

௨௦௬ - ௨௦௭. புலை-அசுத்தம். திருவாரூரில் உத்ஸவதரிசனஞ் செய்துவிட்டுத் தமது ஊரையடைந்த நமிநந்தியடிகள்நாயனார் பலரும் தீண்டினமையால் தமக்கு அசுத்தமுண்டாயிற்றென்றும் ஸ்நானஞ்செய்துவிட்டே சிவபூசை செய்யவேண்டுமென்றும் கருதி ஸ்நானத்திற்குத் தீர்த்தங்கொண்டுவரச் சொல்லிவிட்டுத் தமது வீட்டின் புறத்திண்ணையில் தங்கினர். அயர்ச்சிமிகுதியால் சிறிதுதுயில்வந்தது. அப்பொழுது, தியாகேசர் அவருடைய கனவிலெழுந்தருளி, "திருவாரூரிற் பிறந்தவர்களெல்லாரும் நம்கணங்கள்; அதனை நாளைக் காண்பாயாக" என்று அருளிச்செய்துவிட்டு மறைந்தருளினார். (பெரிய. நமிநந்தி).

௨௦௯. மொய்த்து ஆயம்முன் செல்ல.

௨௧௧-௨௧௩. தியாகேசர் திருவடியிலுள்ள ஆடரவக் கிண்கிணியைப் பேதை வேண்டுமென்றல் இக்கண்ணிகளாற் கூறப்படும். ஆட்டைக்கு இருதினம் - பாதசேவைக்கு உரிய நாட்கள், மார்கழித்திருவாதிரையும்

பங்குனிஉத்தரமும். பந்தித்த - கட்டிய.

உகசு. விதிப்பதோ - உண்டுபண்ணுவதோ.

உகஎ. இரண்டு - ஆடரவமும் கிண்கிணியும். இந்தவிரண்டும் ஒன்ருகவுங் கூறப்படும்.

உகக. இவ்வாட்டு - அஜபாநடனம். ஆடரவமாகிய பதஞ்சலி, ஆதிசேஷனுடையஅவதாரமாதலின், 'இன்னமரி பாயிழக்குமோ' என்ருர்.

உஉ0. உரைத்துமோ, உளப்பாட்டுத்தன்மைப்பன்மை.

உஉக. ஆழியான்சேய்-மன்மதன்.

உஉஉ. பெட்குமது - விரும்புதற்குரியது. பொதும்பு - மரப்பொந்து. எதிர்ந்து - மழையை யெதிர்ந்து.

உஉச. வேட்பு - வேட்டல்.

உஉரு. பறை - வாத்தியம்.

உஉசு-உஉஎ. சிவபெருமானுடையவிடை - திருமால்; அவர் இராமாவதாரத்தில் இராவணனை முதற்போரினிறுதியில், 'இன்றுசென்று நாளைவா' என்றது ஈண்டு அறியற்பாலது. (கம்ப. யுத்த. முதற். உருசு)

உஉஅ. கமலை என - திருவாரூரைப்போல. கொண்டைக்குத் திருவாரூருவமை. செங்கமலை மாலையே கூடும்படியென்றதற்கு, திருமகள் திருமாலைச் சேரும்படியென்றும் திருமகள்வடிவாகச் செய்யப்படும் அணியும் பூமாலையும் தன்பாற் சேரும்படியென்றும் பொருள்கொள்க.

உஉஅ-உஉக. ஆடும்வினை - விளையாட்டு. வேகடஞ்செய்யாதாய் - சாணைபிடித்தல் செய்யப்படாதமாணிக்கமாய். செய்மணியாய் - வேகடஞ்செய்தமணியாய்.

உஙக. பாவைவிளையாடி - பாவையை வைத்துக்கொண்டு விளையாடி. கொல்லி-கொல்லிமலை. அம்மலைதன்பாற் பாவையையுடைமையின், பாவையையுடைய இவளுக்கு உவமையாயிற்று; அப்பாவை கொல்லிப்பாவை யெனப்படும். 'போய்' என்ருர், பேதைப்பருவங்கடந்தமையின்.

உஙரு-உஙகு. சத்தவிடங்கத்தலத்துள், திருக்காருயவில் ஆதிவிடங்கரென்றும், திருக்கோளிலியில் அவனிவிடங்கரென்றும், திருமறைக்காட்டில் புவனிவிடங்கரென்றும், திருவாய்மூரில் நீலவிடங்கரென்றும், திருநள்ளாற்றில் நகரவிடங்கரென்றும், திருவாரூரில் வீதிவிடங்கரென்றும், திருநாகைக் காரோணத்தில் அழகவிடங்கரென்றும் தியாகராசமூர்த்திகளுக்குத் திருநாமங்கள் உள்ளன. செவ்வந்திக்கு இட்டபெயராதலின், 'விடங்கு' என்ருர். ஆரூரன்நாமத்தது - வீதிவிடங்கென்பது; உரு-உசு-ம் கண்ணிகளின் குறிப்பைப்பார்க்க.

உஙசு. தொடலை - மாலை. தொடலைசெய்தென்க. மிலைந்து - சூடி.

உஙஎ. தியாகேசன்விருப்பே - தியாகேசருடைய விருப்பத்திற்குரியதே. கொடுத்துமென - கொடுப்போமென்றுசொல்ல.

உஙஅ. சூடியபின் - நீ அணிந்தபின்பு.

உஙக. கண்ணுக்குக்கண்ணை இடந்துஇட்டார்-கண்ணப்பநாயனார். தாம்சூடியபூவைச்சூட்டுதற்குரியவர் கண்ணப்பநாயனுரே யென்றபடி.

உச0. திருமாலுக்கல்லாமல்.

உசக. பிறர் - பிறமகளிர். பங்குடையாள் - உமாதேவியார்.

உசங-உசச. திருத்தொண்டத்தொகை.

உசரு-உசசு. கருணாகரத்தொண்டைமானென்பவர், அரசனிடத்து அமைச்சராக விருந்து அவனுடைய அனுமதியின்றி அவன்பொருள்களைக்கொண்டு தியாகேசருக்குப் பற்பல

திருப்பணிகள் செய்து பின்பு அவனுல் வருத்தமுற்றுப் பலர் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே தியாகேசருடைய திருவடிகளை அடைந்தாரென்னும் வரலாறு ஈண்டு அறியற்பாலீது; தியாகேசருடைய விருதாவளித் திருநாமங்களுள் கருணாகரத்தொண்டைமானென்பதும் ஒன்று; "கருணாகரன்செய் திருப்பணியைக் கருதி நலமாய்க் கண்டுசெய்த, பொருளா கரணு லத்துடையான்பூமியானைப்போலாரோ" என்னும் சோழமண்டலசதகமும் அவர் திருப்பணிசெய்ததை வலியுறுத்துகின்றது.

உசசு-உசஎ. கரம் - ஒளி. துங்கத்திகிரி - மேலாகிய தேருருள். திகிரிவெற்பு - சக்கரவாளகிரி. பொங்க- ஒலிக்க.

உருo. அரியணை - தியாகேசருடைய சிங்காதனம்.

உருஉ. போதணையும் பாப்பணையும் முறையே பிரமருக்கும் திருமாலுக்குமுரியவை. பண்டுஅளந்த - முன்பு திறையாகஅளந்த. ஆரம் - முத்து.

உருரு. மறி - மான். அல்லாய - இருளையொத்த.

உருஎ-உருஅ. மேல் - பண்டைப் பிறப்பில். இடம் கிட்டுமோவென்க. சிவபெருமான் உண்டருளிய விடத்தின் கொடுமையை உமாதேவியார் தணித்தருளினரென்பது புராணவரலாறு.

உருகூ. பணி - வணங்குவாய். நீங்குநீங்கும்.

உகூo. இடம், சிலேடை.

உகூக. தேவரகண்டரென்பது, ஸ்வாமி திருநாமம்.

உகூஉ. அருத்திவைத்த - ஆசை வைத்த.

உகூங-உகூச. பிறிது - திருமகளுக்கு வேருக. பொய்கையில் - தேவ தீர்த்தத்தில்.

உகூச. வேழமுகன் - விநாயகர். மாற்றை வேழமுகனறியும் போதென்க. ஆணிப்புதுக்கனகம் - உரையாணிப்பொன்; இந்நூற்காப்பில், மாற்றுரைத்த விநாயகர் துதிக்குறிப்பைப்பார்க்க.

உகூசு. அது - அவ்விருள். முச்சி- உச்சிக்கொண்டை. நச்சு உதயம் - விடத்தின்தோற்றம்.

உகூகூ. தாலக்கா - பனங்காடு. சேய்க்கு - திருஞானசம்பந்தமூர்த்திநாயனருக்கு. அவர் பதிகத்தால் திருவோத்தூரில் ஆண்பனை பெண்பனையாகிக் காய்த்த குரும்பையும் அவர் திருக்கோலக்காவிற்பெற்றதாளமும் கொங்கைகளுக்கு உவமை.

உஎசு. தொழநின்ற - தொழும்படி தியாகேசர் எழுந்தருளியிருந்த. பொன் - இலக்குமி.

உஎஅ. பாகத்தினும் - பாகத்திலிருந்தும். அசைந்தாடி - தியாகராசர். பால் – வெண்மை. பளிதம் - பச்சைக்கருப்பூரம்.

உஅக. திருமகளும் கலைமகளும்.

உஅஉ. வேய்முத்து - சிவபெருமான். உஅச. கருமா – ஆதிவராகம்.

உஅரு. நிலவை - சந்திரனை.

உஅசு. அரிக்கரியதாமரை - திருமாலுக்கு அரிய திருவடி; வண்டுக்கு அரிய தாமரைப்பூவென்பது மற்ஞெருரு பொருள்.

உஅஎ. நந்து - சங்கம்.

உஅங-உஅஎ. முத்துப் பிறக்குமிடங்களாதலின், கரும்பு, பன்றி, யானை, சந்திரன், சங்கம் இவைகள் கூறப்பட்டன. இவற்ருற் சிவாதிக்கியம் கூறினமை அறியத்தக்கது; முன்பு சிவபெருமானை, 'வேய்முத்து' என்றமைக்கேற்ப, ஒன்றன்பால் வினைமுற்றுக்கள் கூறப்பட்டன.

உஅகூ. பனிப்போதின் - பனிக்காலத்துத் தாமரைப்பூவைப் போல.

உகஉ. இழை ஊசல் - செய்த ஊசல்; வினைத்தொகை.

உகங. கயம் - தடாகம்.

உகச. மதியப்பூப்பு - சந்திரோதயம்.

உகஅ. வேணுமுத்து - வேயீன்ற முத்து; சிவபெருமான். வாள் நகம் - கைலயங்கிரி.

உகக. பேர்த்த நிசாசரன் - இராவணன். சீர்த்தநிசாசரன் - சந்திரன். கூர்த்து - மிக்கு.

ஙOO. ஒடுக்குமோ - உயிரை ஒடுக்குமோ.

ஙOக. பூசையிற்கூடு மணிதவிர - சிவபூசையிற் கூடியமணி உயிரை உண்ணுதலன்றி; உயிரை உண்ணுதலாவது பசுகரணங்களைப்போக்குதல்.

ஙOஉ. பூண் - பாம்பு.

ஙOங. தமிழ் அமுத விண்டு-பொதியின்மலை.

ஙOச. கன்று - வளையல்.

ஙOகூ. அம் கை - அழகிய கைமரம்.

ஙகO. ஆழியான் - திருமால்.

ஙகக. திருமாலின் வில்லின் நாணைத் தேவர்கள் கறையான் வடிவங்கொண்டு அரித்து அறுத்த கதை ஈண்டு அறியற்பாலது.

ஙகஉ-ஙகங. திருவாரூரிற் சூரிய புஷ்கரிணிகள் மூன்றாகவுள்ளன; அவற்றிலுண்டான மூன்று தாமரை மலர்கள், முறையே கீழிடத்தையும் பக்கத்தையும் மேலிடத்தையுமேநோக்கி மலர்ந்திருந்தன. (திருவாரூர்ப்பு. சூரிய.)

ஙகடு. பாதாளப் பொற்புவனத்து - பாதாளத்துள்ள ஆடகேசத்தில்.

ஙககூ. பணிக்கு-ஆபரணத்திற்கு. பணிமணி - பாம்பின் மணிகளை.

ஙகஎ. வாசி - விசேடம்; இத்தலத்துள்ள அசலேசரென்னுஞ் சிவலிங்கப்பெருமானுடைய நிழல் கிழக்குத்திசையிலன்றி வேறு திசைகளிற் செல்லாது. (திருவாரூர்ப்பு. அசலே) அசலநிழல் - சலித்தலில்லாத நிழல்.

ஙககூ. பண்மகள் - விறலி.

ஙககூ-ஙஙO. இவை வினாவிடைகளாகவுள்ளவை: ஙககூ, ஙஉக, ஙஉங, ஙஉடு, ஙஉஎ, ஙஉகூ—இக்கண்ணிகள் வினா; ஙஉO, ஙஉஉ, ஙஉச, ஙஉகூ, ஙஉஅ, ஙஙO.—இக்கண்ணிகள் விடை.

ஙஉO. நாளையுண்டு.

ஙஉஉ. அங்கம் பெண்ணுக்குதல்- என்பைப் பெண்ணாக்கல்.

ஙஉங. கோட்டுமதியத்தழல் - பிறைத்தழல்.

ஙஉடு. மறித்தும் - மீட்டும்.

ஙஉகூ. பொன்பறித்தது, திருமுருகன்பூண்டியின் பக்கத்தில். நிறத்துப் பாரப்பசும்பொன் - பசலை; நிறம் - மார்பு.

ஙஉஎ. குவளை மிடறு - கருங்குவளை மலர்போன்ற கழுத்து. எகுவளை - நீங்குகின்ற வளையல்கள்.

ஙஉகூ. கோவம் - இந்திரகோபம். ஆவம் - அம்பறாத்தூணி. விசயன் - அருச்சுனன்.

ஙஙக. பனிக்காலை முட்ட - இராக்கால முழுக்க. தனிக்காலை - ஒருருளையை.

ஙஙஉ. ஓட்டும் தேர் - சூரியனுடைய தேர்.

ஙஙடு-ஙஙகூ. ஆசை - திசை. ஆடரவம் சேடனுதலின், 'எட்டெண்ணு மாசை யுடனுடும்' என்றார். ஆசு- விரைவு.

ஙஙஎ. காமாரி - சிவபெருமான்.

ஙஙஅ. கமலாலய வல்லி-கமலாம்பிகை; இவர் பராசத்தி யென்றுங் கூறப்பெறுவர்.

௩௪௦. வெள் சுத்தான் சேய் - வெள்ளிய சங்கத்தையுடைய திருமாலின் புதல்வனாகிய மன்மதன்.

௩௪௨. படிமம் - கண்ணாடி.

௩௪௩. கனல் ஆற்று - வெப்பத்தை ஆற்றிய.

௩௪௪. பணையப்பணைத்து - மிகப் பருத்து.

௩௪௫. அன்பர் - காமுகர். ஒளித்ததென - ஒளித்து விட்டதென்று சொல்லும்படி. வார் வம்பு இறக்கும் - கச்சைக் கடக்கும்.

௩௪௬. தங்கு எர் - தங்கிய அழகு.

௩௪௬-௩௪௭. மங்கை முதலைந்தில் - ஐந்து பருவத்தில். கருமம் ஐந்து - பஞ்சகிருத்தியம்; நடு - அழித்தல்.

௩௪௯. இரா.-இரவில். இடப்பக்கத்தில் வீணையொன்றையேந்தி.

௩௫௦-௩௫௨. இவற்றால் தசாங்கங்கள் கூறப்படுகின்றன. மணிவரை - அரதனசிருங்கமலை; இஃது ஆடகேசர் எழுந்தருளிய நாகபிலத்திற்கு யாவரும் செல்லாதபடி இந்திரன் சேர்த்தியது; (திருவாரூர்ப்பு. ஆடகே. ௨௩); மாணிக்கமலையுமாம். ஈராயிரமருப்புவேழம் - ஐராவணம். பஞ்சானனமுரசு - பஞ்சமுகவாத்திம்; இது தியாகேசர் சந்நிதியிலுள்ள விசேடவாத்தியம். வீரகண்டையம் - தியாகேசருடைய வாளாயுதம்.

௩௫௩. பண்கள் பதினெட்டென்பது சிலருடைய கொள்கை; திருவேடகப் புராணம், எடகநாதர்வளம், ௩அ-ம் செய்யுள்: "அயன்றலை சிவன்றன தங்கை யூடிருந், தியன்றிசைத் திடுபதி னெண்ப ணீர்மையாற், பயன்றரு மூவர்தம் பதிக மோதுவார், முயன்றுறை மாடகோ டிகளு மொய்த்தவே." என்பதனாலுமுணர்க.

௩௫௪. மாட்டோர் - பக்கத்திலுள்ளோர். 'என்' என்பதை 'மகிழ்ந்து' என்பதனோடுங் கூட்டுக.

௩௫௬. பெய் போதில் - அருச்சித்த ஆயிரம் தாமரைமலர்களில். பெறும் சிறுவன் - மன்மதன்.

௩௫௭. வேழம் - யானை, கரும்பு. கல்லோலம் - அலை.

௩௬௦. இருந்தோர் - இருந்த விறலியரும் பாணர்களும். குன்றை - மேருமலையை.

௩௬௭. தரங்கித்து - அலைந்து.

௩௬அ-௩௭௭. திருவந்திக்காப்புவருணனை.

௩௬௯. உம்பர் சேனாபதி - முருகக்கடவுள்.

௩௭௦. கண்டையம்-வீரகண்டையம்; வாள். விரவு ஆர் - கலத்தல் பொருந்திய.

௩௭௧. மலர்களாற் செய்யப்படும் மாலை, தோடுமுதலியவற்றைப் பணியென்றல் மரபு.

௩௭௩. மத்தளம் - சுத்தமத்தளம். இதுமுதலாகிய ஐந்தும் சுத்ததத்துவங்கள் ஐந்தென்று சொல்லப்படும். (தியாக. திருநகர. ௧௪௧.)

௩௭௫. கொத்து - அடியவர் தொகுதி. பதியிலாள் - உருத்திரகணிகை. 'அசைபைக் கோலத்துக்கு' என்று திருத்திக்கொள்க.

௩௭௯. புல்லம் - இடபம்.

௩அ௨. வீதி, சிலேடை.

௩அ௩. சந்து - தூது.

௩அ௫. ஐம்போது - கோட்டுப் பூமுதலிய ஐவகைப்பூக்கள். கம்பேந்தி - திருமால்.

௩அ௬. நிச்சவிழா - நித்தியோத்ஸவம்.

௩அஅ. குழவி - மனுநீதி கண்ட சோழருடைய குமாரராகிய வீதிவிடங்கர்.

௩அஅ-௩அ௯. திரிசங்குவென்னுமரசன்முதலியோர் தேவதீர்த்தத்திலாடித் திவ்யசரீரம் பெற்றுச் சுவர்க்

க மடைந்தது பற்றிப் பொருமையுற்ற இந்திரனது கட்டளையால் வாயுதேவன் அத்தீர்த்தத்தைத் தூர்த்தான்; அதனால் வாயுதேவனிடத்தும் இந்திரனிடத்தும் சிவபெருமானுக்குக் கோபமுண்டாயிற்று. (திருவாரூர்ப்பு. இந்திர.)

ஙகூஉ. பத்தி - சிவபக்தியை.

ருகூங-ஙகூடு. கைக்கொளவின் - கைக்கொண்டிருத்தல் போல. திரு- தெய்வவுத்தி யென்னும் ஆபரணம்; பிறையும் திருவும் பொலிகுழலாள்.

ஙகூஅ-ஙகூகூ. இறை திருக்கண் - சோமசூரியர்கள்; இவை அரைப்பட்டிகையிலுள்ள மணிகளுக்கு உவமை.

சΟΟ. கோடிய - வளைந்த.

சΟஉ. இவை யென்றது, பின்னர்க்கூறப்படும் புயல் முதலியவற்றை. வற்ருனுடனே தூது மொழிந்திடாது. தாய் - தாவி.

சΟசு. ஒட்டு இரக்கும் - ஒட்டால் இரக்கும். முனிவர் பன்னியரை-தேவதாருவனத்து முனிவர்களுடைய மனைவியர்களை.

சΟஎ-சΟஅ. சங்கார் கையான்-திருமால்.

சΟகூ. இளங்கோக்கள் - வைசியர்.

சகΟ. மீன்வலையால் - மீன் வலையோடு.

சகங. மூவரும் ஓதியவை - தேவாரங்கள். மோகத்தால் வருவர்.

சகச. நள்ளாற்றுச்செய்யுள், 'போகமார்த்த' என்னும் திருப்பதிகம்.

சகடு. அரசு - கூன்பாண்டியர்; அவருக்கு வெப்புநீங்கிய சரிதம் ஈண்டு அறியத்தக்கது.

சகசு. கூன் தள்ளு திருப்பாட்டு, "வாழ்க வந்தணர்' என்னுந் திருப்பாசுரம்.

சகஎ. யாழ்மூரி, "மாதர்மடப்பிடி' என்னுந் திருப்பதிகம்.

சகஅ. கல் மிதப்பச் செய்த திருப்பாட்டு, "சொற்றுணைவேதியன்" என்னுந் திருப்பதிகம்.

சககூ. ஊரன்கவி, "பரவும் பரிசொன்றறியேன்" என்னுந் திருப்பதிகம்.

சஉக. பங்குனியுத்ஸவத்தில் ஆழித்தேரினின்றும் இறங்கிய பின்பு, ஸ்வாமி, திருவாரூரிலிருந்து புலிவலத்துக்கு மேற்கேயிருக்கும் வேலங்குடியிலுள்ள மண்டபத்திற்கு எழுந்தருளி அதற்கு எதிர்த் தோட்டத்திலுள்ள பாகற்கொடிகளை அறுத்தருள்வது தொன்மையான வழக்கமென்று தெரிகின்றது. இது, பாகல்வேட்டை யென்று வழங்கும்; மருவுபுகழ்க் கிர்ஷ்ண மகராசராணை, யரிய வடமலையா ராணை-திருவாரூர்ப், பாகற்கொடியறுப்பார் பாதத் திருவாணை, த்யாகக் கொடியிறக்கா தே." (தமிழ்நாவலர் சரிதை, தத்துவப் பிரகாசர் பாடியது) என்னும்வெண்பாவும், 'ஆடாது மாடிப்பாகற் கொடியறுத்தார்' என்று வழங்கும் பழமொழியும் இதனை வலியுறுத்தும்.

சஉங. கொந்தளிப்ப - மிக்குமுழங்க.

சஉடு. பேரன்பன் - விறன் மிண்டநாயனர். புறம்பென்றது, அவர் புறகென்ற மொழியை; திருக்காளத்திநாத ருலா, ஙஙங, ருசடு-ம் கண்ணிகளைப்பார்க்க. இச்சரித்திர விரிவை, பெரியபுராணம், விறன்மிண்டநாயனர் புராணத்தாலுணர்க.

சஉஎ. சேவடி தேய.

சஉஅ. தியாகேசருடைய திருவாடுதண்டின் பெயர் மாணிக்கத்தண்டென்று வழங்கும்.

சஙΟ. நான்மறையோன் - சோமாசிமாற நாயனர்.

சஙக. கேள்வி ஓர் - கேள்வியை உணருகின்ற. வேள்வியோர் - அந்தநாயனரது யாகசாலைக்கண் இருந்த அந்தணர்.

௪௩௩. நிறுத்ததை, ௩௨-ம் கண்ணிக்குறிப்பாலுணர்க.

௪௩௫. இவளது அழகின் மிகுதியைக் கண்டு வெட்கித் திருமகளும் விளர்ப்புறுவாளென்றபடி.

௪௩௬, தென்னுலவை - தென்றல்

௪௩௭. அதிதிருச்சாலகத்து - தியாகராசருடைய பல்கணிவாயிலில்.

௪௩௯. இவள் சொல் இசையைப் போல்வதாதலின், அதற்கு மனமுருகிக் கொடிய புலியும் பாம்பும் பணிவனவாயின; "கடும்புலிக ளயர்ந்துசித்ர காயமெனும் பெயர்விளக்கக், கொடும்பணிகண் மாலையதாய்க் குலரத்நவிளக்கேற்ற" (அழகர்கலம்பகம்-௧) என்பதனுலுணர்க. மன்ருட்டிற் புலியென்றது, வியாக்கிரபாதரை; பணியென்றது, பதஞ்சலியை.

௪௪௨. பனசை - திருப்பனந்தாள். காரிகை - தாடகை யென்னு மாது; இவள், கலைச்சி யென்றுங் கூறப்படுவள்; திருப்பூவணநாதருலா, ௩௰-ம் கண்ணிக் குறிப்புரையைப் பார்க்க.

௪௪௩. 'பெய்துடைய கோமான்', எனத்திருத்திக் கொள்க. செம்மனச் செல்வி யென்பது, மதுரையிலிருந்த பிட்டு வாணிச்சியாகிய வந்தி யென்பளது பெயர்; "சீருடைச் தவத்தின் மிக்காள் செம்மனச் செல்வியென்னும், பேருடை நரைமூ தாட்டி பிட்டுவிற் றுணவு கொள்வாள்" என்பதனுலுணர்க; (திருவாதவூ. மண்சுமந்த. ௨௨).

௪௪௩. மகவைக்கொய்து.

௪௪௪. செங்காட்டு அம்மை - சிறுத்தொண்டர் மனைவியாராகியவெண்காட்டு நங்கையார். சந்தனநங்கை - வெண்காட்டு நங்கையாருடைய தாதியாராகிய சந்தனத்தார்.

௪௪௭. கைவண்டு - கையிலுள் வளையல்.

௪௫௰. தெள்ளேணம் - மகளிர் விளையாட்டுக்களுள் ஒன்று.

௪௫௧. சம்புப்பரி - நரிக்குதிரை.

௪௫௩. திருத்தோள் நோக்கீர் - திருத்தோள் நோக்கம் செய்வீர்; விளி. தோள்நோக்கம் - தோள்வீச்சென்றும் வழங்கும். பல்வரியீர் - பலவகையானவரிக்கூத்துக்களையுடையீர்; விளி. பல்வரிக்கூத்தின் பெயர்களைச் சிலப்பதிகாரம், ௭௧-ம் பக்கத்துள்ள "சிந்துப்பிழுக்கை" என்னுமேற்கோளாலுணர்க.

௪௫௫. அன்னர் இசைத்தன - குயிற்பத்தும் திருத்தசாங்கமும்.

௪௫௭. சிவபத்தவாணி - சிவபக்தர்களுடைய பெருமையைக் கூறும் வாக்கையுடையது. கனிவாய் - மகிழ்ந்து.

௪௫௮. ஒரு சொல், "தில்லை வாழந்தணர்த மடியார்க்கு மடியேன்" என்பது.

௪௬௧-௫௰௬. இக்கண்ணிகளில் மகளிர்களுடைய உறுப்புக்களுக்கு உவமை கூறுதல் முகமாக எடுத்துப்பாராட்டியிருக்கும் உண்மைநாயன்மார்களுடைய அற்புத திவ்ய சரித்திரங்கள் ஆழ்ந்து நோக்கி இன்புறுதற்கு உரியன. இவற்றில் தனியடியார்கள், தொகையடியார்கள் யாவரும் கூறப்பெற்றுள்ளார்.

௪௬௧. அளவு பேச எற்கு அடங்கா.

௪௬௨. இளைசையின் மாறர் - இளையான்குடிமாறநாயனார்.

௪௬௩. மாறர் - நின்ற சீர் நெடுமாற நாயனார். பண்டையிற்படும்.

௪௬௪. அணங்காக - தெய்வத்தன்மையுள்ளதாக. அசி-ஒருவகைவாள்.

௪௬௫. நவி - மழு.

௪௬௬. படுபு - கொன்று.

௪௭௫. பந்தர் - முத்துப்பந்தர்.

சஎசு. மந்திரம் - திருமந்திரம். அந்நூலில், 'கெர்ப்பக்கிரியை' என்னும் பகுதியில், ௩அ-ம் செய்யுளிற் குயிலின் பெயர் வந்திருத்தல் காண்க.

சஎஎ. ஆனாயநாயனார் அமைக்குழல், திருநீலகண்டயாழ்ப்பாண நாயனார் வீணையென்க.

சஎஅ. கா - சார்த்த.

சஎசு-சஎக. இனிமை ஐந்து, குயில், பால், குழல், வீணை, கனி. தண்மை ஒன்று, சந்தனம். அருணம் - செம்மை.

சஅ0. துப்பு - நுகர் பொருள். பகடு - யானை.

சஅ௩. கலையர் - குங்குலியக்கலயநாயனார்.

சஅஎ-சஅஅ. செங்கணார் - கோச்செங்கட்சோழநாயனார்; முன் - முற்பிறப்பில்; இவர் சிலந்தியாயிருக்கும் பொழுது.

சகசு. மென்மை தொடையன்றே.

ரு0க கற்பூரம் பூதிப்பொடியன்றே.

ரு0உ-ரு0௩. சிலை - கல். மற்றச் சமயத்தும் மற்றத்தெய்வத்தலத்துமென்க. திடத்திற்குச் சிலைகளிரண்டுமுவமை.

ரு0அ. சதகோடி - சதகோடி மகளிர்.

ருகஎ. கவி - சுந்தரமூர்த்தி நாயனார். தண் இயலா - தண்மை இயலாமல்.

ருகசு. விட்டு ஆலும் - வாய்விட்டுக் கூவும்.

ருஉ0. பிள்ளை - திருஞானசம்பந்த மூர்த்திநாயனார். பெண்ணை - பனை. புள் - அன்றில்.

ருஉஉ. வேடை - வெப்பம். குவடு - கைலை. வாடையது - வடகாற்று.

இந்நூல் அரும்பதவுரையில் எடுத்துக்காட்டிய

## நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்புக்கள்.

அசலே—அசலேசச்சருக்கம்.

அவை—அவையடக்கம்.

ஆடகே—ஆடகேசச்சருக்கம்.

ஆனந்தே—ஆனந்தேச்சுரச்சருக்கம்.

இந்திர—இந்திரச்சருக்கம்.

உருத்திர—உருத்திரகோடிச்சருக்கம்.

கட—கடவுள் வாழ்த்து.

கந்த—கந்தபுராணம்.

கந்தவி—கந்தவிரதப்படலம்.

கம்ப—கம்பராமாயணம்.

கமலா—கமலாலயச்சிறப்பு.

கயா—கயாதீர்த்தச்சருக்கம்.

குலிசே—குலிசேச்சுரச்சருக்கம்.

கேம—கேமசருமச்சருக்கம்.

கோகருண—கோகருணச்சருக்கம்.

சங்க—சங்கதீர்த்தச்சருக்கம்.

சமற்கார—சமற்காரச்சருக்கம்.

சர்வ—சர்வதீர்த்தச்சருக்கம்.

சித்தீ—சித்தீச்சுரச்சருக்கம்.

சூரிய—சூரியபுட்கரிணிச்சருக்கம்.

சோமா—சோமாக்கந்தச்சருக்கம்.

தசரத—தசரதச்சருக்கம்.

தலமகிமை—தலமகிமைச் சருக்கம்.

தியாக—தியாகராசலீலை.

தியாகராச—தியாகராசச்சருக்கம்.

திரிசங்கு—திரிசங்குச்சருக்கம்.

திருக்கழுக்குன்ற—திருக்கழுக்குன்றப்புராணம்.

திருத்தொண்ட—திருத்தொண்டத்தொகை.

திருநகர—திருநகரப்படலம்.

திருவாதவூ—திருவாதவூரர் புராணம்.

திருவாரூர்ச்—திருவாரூர்ச்சிறப்புச்சருக்கம்.

திருவாரூர்ப்பு—திருவாரூர்ப்புராணம்,

திருவிழா—திருவிழாச்சருக்கம்.

நகா—நகரச்சருக்கம்.

நமிநந்தி—நமிநந்தியடிகள்நாயனார்புராணம்.

பசுபதி—பசுபதிபுற்றிடம்பற்றிய சருக்கம்.

பரா—பராசத்திச்சருக்கம்.

பிரதக்ஷிண—பிரதக்ஷிணச்சருக்கம்.

பெரிய—பெரியபுராணம்.

மகா—மகாலக்ஷமிச்சருக்கம்.

மண்சுமந்த—மண்சுமந்தசருக்கம்.

முதற்—முதற்போர்ப்படலம்.

யுத்த—யுத்தகாண்டம்.

வன்மீக—வன்மீகநாதச்சருக்கம்.

விசுவா—விசுவாமித்திரச்சருக்கம்.

---

ஸ்ரீ:

கடவுள் துணை.

# முத்தொள்ளாயிரச் செய்யுண் முகவுரை.

முத்தொள்ளாயிரம் என்பது, சேரர் பாண்டியர் சோழர் என்னும் முடியுடைத் தமிழரசர் மூவரையும் அறம்பொருளின்பம் பற்றிப் புகழ்ந்துள்ள ஈராயிரத் தெழுநூறு வெண்பாக்களான் ஆயதோரரிய பெரிய பண்டைத்தண்டமிழ்நூல். இது மூவேந்தரையும் தனித்தனியே சிறப்பித்து வரும் தொள்ளாயிரம் தொள்ளாயிரம் பாடல்களாக மூன்று தொள்ளாயிர முடைமையின், முத்தொள்ளாயிரம் எனப்பெயர் சிறந்த தென்ப. இது முடியுடைவேந்தர்க்கு எற்றபெற்றியான் நாடு, நகர், திறை, தானை, யானை, குதிரை, அமர்க்களம், வென்றி, கொடை, புகழ், இன்பம் என்பன முதலிய பலபல வகைகளாகப் படைத்துக்கொண்டு புகழ்ந்ததாமெனத் தோற்றுகின்றது. "விருந்தேதானும், புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" (செய்யுளியல்-உ௩௦) என்பதனுரையிற், பேராசிரியரும், நச்சினார்க்கினியரும்; புதிதாகத் தொடுக்கப்படுந் தொடர்நிலை மேற்றாகிய விருந்து என்பதற்கு இம் முத்தொள்ளாயிரநூலை எடுத்துக் காட்டுதலான், இது பழையதும் புதியதுமாகிய கதை மேற்றன்றி ஒருவர் புதிதாகத்தாம் வேண்டியவாற்றாற் படைத்துச் செய்த தொடர்நிலைச் செய்யுளென்பதும், "நெடுவெண் பாட்டே முந்நா லடித்தே, குறுவெண் பாட்டி னளவெழு சீரே" (செய்யுளியல்-க௫௯) என்பதனுரையில், அவ்வுரையாளரிருவரும், முறையே, "பதினெண் கீழ்க்கணக்கினுள்ளும் முத்தொள்ளாயிரத்தும் ஆறடியினேறாமற் செய்யுள் செய்தார் பிறசான்றோரு மெனக்கொள்க" எனவும், "இக்கருத்தானே கீழ்க்கணக்கினுள் நான்கடியும் ஈரடியுமே மிக வந்தவாறும், முத்தொள்ளாயிரத்து நான்கடியே மிகவந்தவாறுங் காண்க" எனவும் கூறியவாற்றான், இந்நூல் வெண்பாக்கள் பெரும்பான்மை நான்கடியானும் சிறுபான்மை ஐந்தாறு அடிகளானும் வந்தன என்பதும், பேராசிரியர் "அங்கதப் பாட்டவற் றளவோ டொக்கும்" (ஷை-க௬௦) என்பதனுரையில் 'கைக்கிளைச் செய்யுள் முத்தொள்ளாயிரத்துட் புலவாயினும்'

எனக்கூறுதலான், இதன்கட்சுட்டி யொருவர் பெயர்கொண்ட பாடாண்டிணைப் புறப்புறக் கைக்கிளைச்செய்யுட்கள் பலவா மென்பதும் அறியப்படுவன. வச்சத் தொள்ளாயிரமும், ஒட்டக்கூத்தர் செய்த அரும்பைத் தொள்ளாயிரமும் இம் முத்தொள்ளாயிர நெறியே தழுவி யுரைக்கப்பட்டனவா மென ஊகிக்கப்படுகின்றன. இந்நூல் இந்நாட்டுத் தமிழ்க்குடிகளும் தமிழரசர்களுமே நிலவிய மிகப்பழைய காலத்தே இயற்றப்பட்டதாதலின், இதனுல் அத்தொன்மைக் கால வியல்புகள் பல நன்கறிய லாகுமெனத் தெரிகின்றது. இத்தகைப் பெரிய் பழைய நூலின் ஒருசில செய்யுட்களே புறத்திரட்டென்னும் இனிய செய்யுட்டொகை நூலில் ஆங்காங்குக் கோக்கப்பட்டிருத்த லிற் காணப்படுதலல்லது இந்நூன் முழுதும் ஒருசேரக் காண்பது இக்காலத்தரிதாயிற்று. நல்லாசிரியர் தொல்லுரைகளில் தமிழ் மூவேந்தரி லொருவரைச் சிறப்பித்து இனிய வெண்பா யாப்பின் வரும் பாடல்கள் சில இம்முத்தொள்ளாயிரமா மென்று கருதப்படுகின்றன. அவை, புறத்திரட்டிற் காணப்பட்டனபோல, முத்தொள்ளாயிரமெனப்பெயர் குறிக்கப்படாமையின் ஒருதலையாகத் துணியப் படவில்லை. புறத்திரட்டின்கண்ணுள்ள அவ்வொருசில முத்தொள்ளாயிரச் செய்யுட்களும், தேனும் பாலுங் கன்னலும் அமுதுமாகித் தித்திப்பன வாதலின், அவற்றைப் பலரும் அறிந்து கூட்டுண்டு களிக்குமாறு, இச்'செந்தமிழ்' வாயிலாக வெளியிடற் கவாவினேன். இந்நூலாசிரியர் பெயர் முதலியன ஒன்றும் இப்போது அறியலாவதில்லை. இந்நூற் கடவுள்வாழ்த்து வெண்பாவாலும் புகழின்கணுள்ள 'மடங்கா மயிலூர்தி' 'செங்கணெடியான்' என்னும் வெண்பாக்களாலும் இவர் சமயக் கோட்பாட்டிற் சைவராவர் எனக்கருதுகின்றேன்: ஈண்டு வெளிப்படும் இம்முத்தொள்ளாயிரச் செய்யுட்கள் இச்சங்கத்துக்குக் கிடைத்த புறத்திரட்டுப் பிரதிகளினின்று திரட்டப்பட்டன. இவற்றுள் இன்பப்பகுதிபற்றிய இன்பொருட்பாடல்கள் சென்னையிலிருக்கும் தமிழ்ப்பண்டிதர் ப்ரஹ்மஸ்ரீ தி-வேங்கடராமையங்காரவர்களுடைய புறத்திரட்டுக்காமத்துப்பால் ஏட்டிலும் மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் சைவநூற் பரிசோதகர் ஸ்ரீமத் ரா-சுப்பிரமணியக் கவிராயரவர்களுடைய புறத்திரட்டேட்டிலும்இருந்தன.

இங்ஙனம்,

ரா. இராகவையங்கார்,

செந்தமிழ்ப் பத்திராசிரியர்.

கடவுள் துணை.

# முத்தொள்ளாயிரச் செய்யுட்கள்.

## கடவுள் வாழ்த்து.

க மன்னிய நாண்மீன் மதிகனலி யென்றிவற்றை
முன்னம் படைத்த முதல்வனைப்—பின்னரு
மாதிரையா னுதிரையா னென்றென் றயர்வுறுமீ
யூர்திரைநீர் வேலி யுலகு.*

## நாடு.

உ அள்ளற் பழனத் தரக்காம்பல் வாயவிழ
வெள்ளந்திப் பட்ட தெனவெரீஇப்—புள்ளினந்தங்
கைச்சிறகாற் பார்ப்பொடுக்குங் கவ்வை யுடைத்தரோ
நச்சிலைவேற் கோக்கோதை நாடு.

ந நந்தி னிளஞ்சினையும் புன்னைக் †குவிமொட்டும்
பந்த ரிளங்கமுகின் பாளையுஞ்—சிந்தித்
திகழ்முத்தம் போற்றோன்றுஞ் செம்மற்றே தென்ன
னகைமுத்த வெண்குடையா னாடு.

ச காவ லுழவர் களத்தகத்துப் போரேறி
‡ நாவலோஒ வென்றழைக்கு நாளோதை—காவலன்றன்
கொல்யானை மேலிருந்து கூற்றிசைத்தாற் போலுமே
நல்யானைக் கோக்கிள்ளி நாடு.

---

* இதன் பின்னடி யிரண்டையும் நீலகேசித்தெருட்டுக் கடவுள் வாழ்த்துரையிற் சமயதிவாகர முனிவர் மேற்கோள் காட்டியுள்ளார். 'என்றென் றயருமால்' எனவும் பாடமுண்டு.

† 'கருவிமொட்டும்' எனவும் பாடம்.

‡ "இதனுள் 'நாவலோஒ' என்புழி உயிரளபெடை செப்பலோசை கெடாதே வந்தவாறு கண்டு கொள்க" என்பது யாப்பருங்கலவிருத்தி. (ச)

## பகைப்புலம் பழித்தல்.

ரு கரிபரந் தெங்குங் கடுமுள்ளி பம்பி
நரிபரந்து நாற்றிசையுங் கூடி—யெரிபரந்த
பைங்கண்மால் யானைப் பகையடுதோட் கோதையைச்
செங்கண் சிவப்பித்தார் நாடு.

சு வேரறுகை பம்பிச் சுரைபடர்ந்து வேளைபூத்
தூரறிய லாகா கிடந்தனவே—போரின்
முகையவிழ்தார்க் கோதை * முசிரியார் சோமா
னகையிலைவேல் காய்த்தினார் நாடு.

எ † இரியன் மகளி ‡ ரிலைஞெமலு ளீன்ற
வரியிளஞ் செங்காற் குழவி—யரையிரவி
§ ஊமன்பா ராட்ட வுறங்கிற்றே செம்பியன்ற
ணுயம்பா ராட்டாதார் நாடு.

---

* முசிரி - இது சேரநாட்டுச் சுள்ளியாறு கடலுடன் கலக்கு மிடத்திருந்த பெரிய துறைமுகப்பட்டினம். முற்காலத்து மேற்றேயத்து யவனர்மரக்கலங்கள் மிளகு முதலியன கொள்ளற்கு மிகுதியாகத் தங்கிய பெருந் துறைமுகம் இதுவே; இதனைச் "சேரலர், சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க, யவனர் தந்த வினைமா ணன்கலம், பொன்னொடு வந்து கறியொடு பெயரும், வளங்கெழுமுசிரி" (கசசு) என அகப்பாட்டின்கண் வருதலான் அறிக. தாலமி, பிளினி முதலிய மேற்றிசை யாத்திரைக்காரரும் இவ்வூர்த்துறை முகத்தைப் பற்றியும் இதன்கண் மிளகேற்றுதலைப் பற்றியும் மிகுதியாகக் கூறியுள்ளாரென்ப. வராகமீரர் பிரகத்சங்கிதைக்கண் மரீசிபட்டனம் என்னும் ஊர் தென்பாகத்துள்ளதாகக் கூறியுள்ளார். அஃது இம்முசிரியேயாமென்பது பலவிவேகிகளுடைய கொள்கை: (மரீசி-மிளகு.) இவ்வூரினை முன்னையோர் பாண்டியன் வளைந்து பெரும்போர் புரிந்து இதன்கணிருந்த சேரர்க்குரிய படிமம் ஒன்றைக் கவர்ந்து சென்றான் என்பது கசசு-ஆம் அகப்பாட்டான் அறியப்படுகின்றது.

† இரியன் மகளிர்-கெடுதலுற்ற மகளிர்.

‡ இலைஞெமல்-இலைச்சருகு "ஒலிகழை பிசைந்த ஞெலிசொரி யொண்பொறி, படுஞெமல் புதையப் பொத்தி" என்பது அகம் (௩௯).

§ ஊமன்-கூகை.

அ வாகை வனமாலை சூடி யரசுறையு
மோகை யுயர்மாடத் துள்ளிருந்து—கூகை
படுபேய்க்குப் பாட்டயரும் பண்பிற்றே தென்னன்
விடுமாற்றங் கொள்ளாதார் நாடு.

கூ * பறைநிறை கொல்யானைப் பஞ்சவர்க்குப் பாங்காய்த்
திறைமுறையி னுய்யாதார் தேய—முறைமுறையி
ஞன்போ யரிவையர்போ யாடவர்போ யாயின்ற
வீன்போ யுறையு மிடம்.

## திறை.

கo பல்யானை மன்னர் படுதிறை தந்துய்ம்மின்
மல்ல னெடுமதில் வாங்குவிற் பூட்டுமின்
வள்ளிதழ் வாடாத வானோரும் வானவன்
வில்லெழுதி வாழ்வர் விசும்பு.

கக நேமி நிமிர்தோ ணிலவுதார்த் தென்னவன்
காமர் நெடுங்குடைக் காவல னாணையா
லேம மணிப்பூ ணிமையார் திருந்தடி
பூமி மிதியாப் பொருள்.

க௨ நிறைமதிபோல் யானைமே னீலத்தார் மாறன்
குடைதோன்ற ஞாலத் தரசர்—திறைகொ
ளிறையோ வெனவந் திடம்பெறுத லின்றி
முறையோ வெனநின்றார் மொய்த்து.

கங நின்றீமின் மன்னீர் நெருநற் றிறைகொணர்ந்து
முன்றந்த மன்னர் முடிதாக்க—வின்றுந்
திருந்தடி புண்ணாகிச் செவ்வி யிலனே
பெருந்தண் ணுறந்தையார் கோ.

---

* பறை நிறைந்த கொல்யானை:— கொல்யானையை நீர்க்குவிட்டாற் பறை சாற்றிச் செல்லுதல் முன்னை வழக்கு. "நிறையழி கொல்யானை நீர்க்குவிட் டாங்குப், பறையறைந் தல்லது செல்லற்க" என்பது குறிஞ்சிக்கலி (௨o). 'அறைபறையானை' என்பர்முன்னும். "மத்தகஜமானது முன்னே தலைப்பறைகொட்ட வருமாபோலே வாடையை முன்னடக்கவிட்டுக்கொண் டாய்த்து மாலைவருவது" (கo-கூ-ரு) எனத் திருவாய்மொழி யீட்டினும் வருதல் காண்க.

## எயில் கோடல்.

௧௪ செருவெங் கதிர்வேற் சினவெம்போர் மாற
னுருமி னிடிமுர சார்ப்ப—* வரவுறழ்ந்
தாமா வுகளு மணிவரையி னப்புறம்போய்
வேமால் வயிறெரிய வேந்து.

## குதிரை மறம்.

௧௫ நிரைகதிர்வேன் மாறனை நேர்நின்றார் யானைப்
புரைசை யறநிமிர்ந்து பொங்கா—வரசர்த
முன்முன்றோ †வீழ்ந்த முடிக ளுதைத்தமாப்
பொன்னுரைகற் போன்ற குளம்பு.

## யானைமறம்.

௧௬ வீறுசான் மன்னர் விரிதாம வெண்குடையைப்
பாற வெறிந்த பரிசயத்தாற்—றேறாது
செங்கண்மாக் கோதை சினவெங் களியானை
திங்கண்மே னீட்டுந்தன் கை.

௧௭ ‡ அயிற்கதவம் பாய்ந்துழக்கி யாற்றல்சான் மன்ன
ரெயிற்கதவங் கோத்தெடுத்த கோட்டாற்—பனிக்கடலுட்
பாய்தோய்ந்த நாவாய்போற் றோன்றுமே யெங்கோமான்
காய்சினவேற் $கிள்ளி களிறு.

௧௮ மருப்பூசி யாக மறங்கனல்வேன் § மன்ன
ருருத்தகு மார்போலை யாகத்—திருத்தக்க
வையக மெல்லா மெமதென் றெழுதுமே
மொய்யிலைவேன் மாறன் களிறு.

---

* வேந்து போய் அரவுறழ்ந்து வயிறெரியவேம் என்க. "புற்றிழந்த, நாகக் குழாம்போ னடுங்கின வென்னுங்கொல், வேகக் குழாக்களிற்று வேந்து" என வரும்.

† 'வீழ்ந்தார்' எனவும் பாடம்.

‡ தொல்காப்பியம், பொருளதிகாரம், ௧௬௧, ௬௩௩-ஆம் பக்கங்கள்.

$ 'கோதைகளிறு' எனவும் பாடம். (தொல், பொரு, பக்-௬௩௩.)

§ 'மன்னர் திருத்தகு' எனவும் பாடம்.

௧௯ உருவத்தார்த் தென்னவ னோங்கெழில் வேழத்
திருகோடுஞ் செய்தொழி லெண்ணி—லொருகோடு
வேற்றா ரகல முழுமே யொருகோடு
மாற்றார் மதிறிறக்கு மால்.

௨௦ கொடிமதில் பாய்ந்திற்ற கோடு மரசர்
முடியிடறித் தேய்ந்த நகமும்—பிடிமுன்பு
பொல்லாமை நாணிப் புறங்கடை நின்றதே
கல்லார்தோட் கிள்ளி களிறு.

௨௧ கச்சி யொருகான் மிதியா வொருகாலாற்
றத்துநீர்த் தண்ணுஞ்சை *தான்மிதியாப்—பிற்றையு
மீழ மொருகான் மிதியா வருமேநங்
† கோழியர்கோன் கிள்ளி களிறு.

௨௨ பாற்றின மார்ப்பப் பருந்து வழிப்படா
நாற்றிசையு மோடி நரிகதிப்ப—வாற்ற
வலங்கலம் பேய்மகளி ராட வருமே
யிலங்கிலைவேற் கிள்ளி களிறு.

௨௩ தோற்ற மலைகட லோசை புயல்கடாஅங்
காற்றி னிமிர்ந்த செலவிற்றாய்க்—‡கூற்றுங்
குறியெதிர்ப்பை கொள்ளுந் தகைமைத்தே யெங்கோ
னெறிகதிர்வேன் மாறன் களிறு.

௨௪ அடுமதில் பாய வழிந்தன கோட்டைப்
பிடிமுன் பழகழித்த ணணி—முடியுடை
மன்னர் குடையான் மறைக்குமே செங்கனல் வேற்
றென்னவர் கோமான் களிறு.

---

* உஞ்சை-உச்சயினி நகரம்.

† கோழி-உறையூர்; "முற்காலத்து ஓர் கோழி யானையைப் போர் தொலைத்தலான் அந்நிலத்திற் செய்த நகர்க்குக் கோழி யென்பது பெயராயிற்று" என்றார் அடியார்க்கு நல்லார். (சிலப்-நாடுகாண்-உசஅ)

‡ யமனும் கொலையைக் கடன்வாங்கும் ஆற்றலுடையது. 'குறியெதிர்ப்பையாவது அளவுகொடுத்து வாங்கி அவ்வாங்கியவாறே எதிர்கொடுப்பது.' என்றார் பரிமேலழகர் (திருக்குறள்-உஉக).

## களம்.

உ௫ வெருவரு வெஞ்சமத்து வேலிலங்க வீழ்ந்தார்
புருவ முரிவுகண் டஞ்சி—நரிவெரீஇச்
சேட்கணித்தாய் நின்றழைக்குஞ் செம்மற்றே தென்னவன்
வாட்கணித்தாய் வீழ்ந்தார் களம்.

உ௬ மரகதப்பூண் மன்னவர் தோள்வளை *கீழா
வயிரக் கடகக்கை வாங்கித்—துயருழந்து
புண்ணுற் றழைக்குங் குறுநரித்தே †பூழியனைக்
கண்ணுற்று வீழ்ந்தார் களம்.

உ௭ முடித்தலை வெள்ளோட்டு மூளைநெய் யாகத்
தடித்த குடர்திரியா மாட்டி—யெடுத்தெடுத்துப்
பேஎய் விளக்கயரும் பெற்றித்தே செம்பியன்
சேஎய் பொருத களம்.

உ௮ ஏனைய பெண்டி ரெரிமூழ்கக் கண்டுதன்
றானையாற் கண்புதைத்தான் றார்வழுதி—யானையெலாம்
புல்லார் பிடிபுலம்பத் தாங்கண் புதைத்தவே
பல்வாயார் பட்ட களத்து.

## வென்றி.

உ௯ கொடித்தலைத்தார்த் தென்னவன் றேற்றான்போ னின்றான்
மடித்தவாய் சுட்டிய கையாற்—பிடித்தவேற்
கண்ணோரா வோச்சிக் களிறணையாக் கண்படுத்த
மண்ணோரா மன்னரைக் கண்டு.

௩௦ தொழிறேற்றாப் பாலகனை முன்னிறீஇப் பின்னின்
றழலிலைவேல் காய்த்தினர் பெண்டிர்—கழலடைந்து
மண்ணீத்த லென்ப வயங்குதார் மாமாறன்
கண்ணீத்தந் தீர்க்கு மருந்து.

---

* 'கீளா' எனவும் பாடம்.

† பூழியன்-சோன்: பூழிநாட்டையுடையான் என்பது பொருள்; "பூழியர்கோக்கோதை" என்பர் முன்னும் (௬௭).

## புகழ்.

௩௧ மடங்கா மயிலூர்தி மைந்தனை நாளுங்
கடம்பம்பூக் கொண்டேத்தி யற்றாற்—றொடங்கமரு
ணின்றிலங்கு வென்றி நிறைகதிர்வேன் மாறனை
யின்றமிழால் யாம்பாடும் பாட்டு.

௩௨ செங்க ணெடியான்மேற் றேர்விசய னேற்றியபூப்
பைங்கண்வெள் ளேற்றான்பாற் கண்டற்றா—லெங்கு
முடிமன்னர் சூடியபூ மொய்ம்மலர்த்தார் மாற
னடிமிசையே காணப் படும்.*

௩௩ கூந்தன்மா கொன்று குடமாடிக் கோவலனாய்ப் [தாய்
பூந்தொடியைப் புல்லிய ஞான்றுண்டால்—யாங்கொளித்
தென்னவனே தேர்வெந்தே தேறுநீர்க் கூடலார்
மன்னவனே மார்பின் மறு.†

௩௪ வானிற்கு வையகம் போன்றது வானத்து
மீனிற் கனையார் மறமன்னர்—வானத்து
மீன்சேர் மதியனையன் விண்ணுயர் கொல்லியர்
கோன்சேரன் கோதையென் பான்.

௩௫ மந்தரங் காம்பா மணிவிசும் போலையாத்
திங்க ளதற்கோர் திலகமா—வெங்கணு
முற்றுநீர் வைய முழுது நிழற்றுமே
கொற்றப்போர்க் கிள்ளி குடை.‡

---

* தீர்த்த னுலகளந்த சேவடிமேற் பூந்தாமஞ்
சேர்த்தி யதுவே சிவன்முடிமேற் றான்கண்டு
பார்த்தன் றெளிந்தெழுந்த பைந்துழா யான்பெருமை
பேர்த்து மொருவராற் பேசக் கிடந்ததே. என்பது திருவாய்மொழி (௨-௮-௬).

† குருந்த மொசித்தஞான் றுண்டா லதனைக்
கரந்த வடிவெமக்குக் காட்டாய்—மரம்பெறு
போரிற் குருகுறங்கும் பூம்புன னீர்நாட
மாற்பிற் கிடந்த மறு. என்பதும் இக்கருத்தேபற்றிவந்தது. (தொல்காப்பியம், புறத்திணையியல்-டு. நச்சினார்க்கினியருரை மேற்கோள்).

‡ தொல்காப்பியம், பொருளதிகாரம், ௨௧௫-ஆம் பக்கம்.

2

௩௬ பார்படுப செம்பொன் பதிபடுப முத்தமிழ்நா
ணீர்படுப வெண்சங்கு நித்திலமுஞ்—சாரன்
மலைபடுப யானை வயமாறன் கூர்வேற்
றலைபடுப தார்வேந்தர் மார்பு.

௩௭ அருமணி யைந்தலை யாடரவம் வானத்
திருமேற்றை யஞ்சி யொளிக்குஞ்—செருமிகுதோட்
செங்கண்மா மாறன் சினவேல் * கனவுமே
யங்கண்மா ஞாலத் தரசு.

௩௮ அரும்பவிழ்தார்க் கோதை யரசெறிந்த வெள்வேல்
பெரும்புலவுஞ் செஞ்சாந்து நாறிச்—சுரும்பொடு
வண்டாடு பக்கமு முண்டு குறுநரி
கொண்டாடும் பக்கமு முண்டு.

௩௯ கண்ணார் கதவந் திறமின் களிறொடுதேர் †
பண்ணார் நடைப்புரவி பண்விடுமி—னண்ணார்தந்
தேர்வேந்தன் றென்னன் றிருவுத் திராடநாட்
போர்வேந்தன் பூச லிலன். ‡

௪0 அந்தண ராவொடு பொன்பெற்றார் நாவலர்
மந்தரம்போன் மாண்ட களிறார்ந்தா—ரெந்தை
யிலங்கிலைவேற் கிள்ளி யிரேவதிநா ளென்னோ
சிலம்பிதன் கூடிழந்த வாறு. §

## கைக்கிளை.

௪௧ செய்யா ரெனினுந் தமர்செய்வ ரென்னுஞ்சொன்
மெய்யாதல் கண்டேன் விளங்கிழாய்—கையார்
வரிவளை நின்றன வையையார் கோமான்
புரிவளை போந்தியர்பக் கேட்டு.

---

* கனவும்-அச்சத்தாற் கனவினுங் காணும்.

† 'தார்' எனவும் பாடம்.

‡ § தொல்காப்பியம், பொருளதிகாரம், ௨௪௪-ஆம் பக்கம்.

சஉ திறந்திடுமின் றீயவை பிற்காண்டு மாத
ரிறந்து படிற்பெரிதா மேத—முறந்தையர்கோன்
றண்ணார மார்பிற் றமிழர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு.*

சங தாய ரடைப்ப மகளிர் திறந்திடத்
தேயத் திரிந்த குடுமியவே—யாய்மலர்
வண்டுலாஅங் கண்ணி வயபான்றேர்க் கோதையைக்
கண்டுலாஅம் வீதிக் கதவு.

சச காப்படங்கென் றன்னை கடிமனை யிற்செறித்
தியாப்படங்க வோடி யடைத்தபின்—மாக்கடுங்கோ
னன்னலங் காணக் கதவந் துளைதொட்டார்க்
கென்னைகொல் கைம்மா றினி.

சரு துடியடித் தோற்செவித் தூங்குகை நால்வாய்ப்
பிடியேயா னின்னை யிரப்பல்—கடிகமழ்தார்ச்
† சேலேக வண்ணனொடு சேரி புகுதலுமெஞ்
‡ சாலேகஞ் சார நட.

சசா எலாஅ மடப்பிடியே யெங்கூடற் கோமான்
புலாஅ னெடுநல்வேன் மாற—னுலாஅங்காற்
§ பைய நடக்கவுந் தேற்றாயா னின்பெண்மை
யையப் படுவ துடைத்து.

சஎ நீணிலத் தார்வளவ னின்மேலா னுகவு
நாணின்மை யின்றி நடத்தியா—னீணிலங்
கண்டன்ன கொண்டல் வருங்கா விரிநாட்டுப்
பெண்டன்மை யில்லை பிடி.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், எகூஉ-ஆம் பக்கம்.

† சேலேகம். சந்தனம். ‡ சாலேகம்-சாளரம்.

§ மடநடை பெண்மை வனப்பெனப தோராய், கடுநடை கற்றாய் கண
வ னிழப்பாய், பிடியலை பாவியெனப் பூண் பிறழ்ந்து, புடைமுலை விம்மப்
புலந்தனர் நிற்பார் என்பது சிந்தாமணி-(மண்மகள்-உச).

சஅ சுடரிலைவேற் சோழன்றன் பாடல மேறிப்
படர்தந்தான் பைந்தொடியார் காணத்—தொடர்புடைய
நீல வலையிற் கயல்போற் பிறழுமே
சாலேக வாயிலொறுங் கண்.

சகூ போரகத்துப் பாயுமா பாயா துபாயமா
வூரகத்து மெல்ல நடவாயோ—கூர்வேன்
மதிவெங் களியானை மாறன்றன் மார்பங்
கதவங்கொண் டியாமுந் தொழ.

ருO ஆடுகோ சூடுகோ வைதாக் கலந்துகொண்
டேடுகோ டாக வெழுதுகோ—நீடு
புனவட்டப் பூந்தெரியற் பொற்றேர் வழுதி
கனவட்டங் கால்குடைந்த நீறு.

ருக குடத்து விளக்கேபோற் கொம்பன்னார் காமம்
புறப்படா பூந்தார் வழுதி—புறப்படி
னுபுகு மாலை யணிமலையிற் றீயேபோ
னுடறி கௌவை தரும்.

ருஉ வரைபொரு நீண்மார்பின் வட்கார் வணக்கு
நிரைபொரு வேன்மாங்கைக் கோவே—நிரைவளையார்
தங்கோலம் வவ்வுத லாமோ வவர்தாய்மார்
செங்கோல னல்ல னென.

ருங வாமான்றேர்க் கோதையை மான்றேர்மேற் கண்டவர்
மாமையே யன்றோ விழப்பது—மாமையிற்
பன்னூறு கோடி பழுதோவென் மேனியிற்
பொன்னூறி யன்ன பசப்பு.

ருச வழுவிலெம் வீதியுண் மாறன் வருங்காற்
றொழுதேனைத் தோணலமுங் கொண்டா—னிமிழ்திரைக்
கார்க்கடற் கொற்கையார் காவலனுந் தானேயால்
யார்க்கிடுகோ பூச லினி.

௫௫ கண்டன வுண்கண் கலந்தன நன்னெஞ்சந்
தண்டப் படுவ தடமென்றோள்—கண்டா
யுலாஅ மறுகி லுறையூர் வளவற்
கெலாஅ முறைகிடந்த வாறு.

௫௬ மன்னுயிர் காவல் தனதான வவ்வுயிரு
ளென்னுயிரு மெண்ணப் படுமாயி—னென்னுயிர்க்கே
சீரொழுகு செங்கோற் செழியற்கே தக்கதோ
*நீரொழுகப் பாலொழுகா வாறு.

௫௭ என்னெஞ்சு நாணு நலனு மிவையெல்லா
மன்னன் புனனுடன் வெளவினு—னென்னே
யரவக லல்குலா யாறிலொன் றன்றோ
புரவலர் கொள்ளும் பொருள்.

௫௮ தானேற் றணிக்குடைக் காவலனாற் காப்பதுவும்
வானேற்ற வையக மெல்லாமால்—யானோ
வெளியயேனோர் பெண்பாலே னீர்ந்தண்டார் மாற
னளியானே லன்றென்பா ரார்.

௫௯ †கனவினுட் காண்கொடா கண்ணுங் கலந்த
நனவினுண் முன்விலக்கு நாணு—மினவங்கம்
பொங்கோதம் போழும் புகாஅர்ப் பெருமானார்
செங்கோல் வடுப்படுப்பச் சென்று.

௬௰ தானைகொண் டோடுவ தாயிற்றன் செங்கோன்மை
சேனை யறியக் கிளவேனோ—யானை
பிடிவீசும் வண்டடக்கைப் பெய்தண்டார்க் கிள்ளி
நெடுவீதி நேர்பட்ட போது.

---

* முறைதெரிந்து செல்வர்க்கு நல்கூர்ந்த வர்க்கு
மிறைதிரியா னேரொக்கல் வேண்டு—முறைதிரிந்து
நேரொழுகா னாயி னதுவா மொருபக்க
நீரொழுகப் பாலொழுகு மாறு. (பழமொழி-௨௰௬.)

† தொல்; பொரு, ௭௩௫-ஆம் பக்கம்.

௬௧ தெண்ணீர் நறுமலர்த்தார்ச் சென்னி யிளவளவன்
மண்ணகங் காவலனே யென்பரான்—மண்ணகங்
காவலனே யானக்காற் காவானோ மாலைவாய்க்
கோவலர்வாய் வைத்த குழல்.

௬௨ அறைபறை யானை யலங்குதார்க் கிள்ளி
முறைசெயு மென்பராற் றோழி—யிறையிறந்த
வங்கோ லணிவளையே சொல்லாதோ மற்றவன்
செங்கோன்மை செந்நின்ற வாறு.

௬௩ * களியானைத் தென்னன் கனவின்வந் தென்னை
யளியா னளிப்பானே போன்றான்—றெளியாதே
செங்காந்தண் மென்விரலாற் சேக்கை தடவந்தே
னென்காண்பே னென்னலால் யான்.

௬௪ கார்நறு நீலங் கடியகத்து வைகலு
நீர்நிலை நின்ற தவங்கொலோ—கூர்நுனைவேல்
வண்டிருக்க நக்கதார் வாமான் வழுதியாற்
கொண்டிருக்கப் பெற்ற குணம்.

௬௫ அறிவாரார்...........பெண்டிரோ மாகச்
செறிவார் தலைமேல் நடந்து—மறிதிரை
பாட முரிஞ்சு மதுரையார் கோமானைக்
கூட வொருநாள் பெற.

௬௬ அன்னையுங் கோல்கொண் டலைக்கு மயலாரு
மென்னை பழியுஞ்சொற் சொல்லுவர்—நுண்ணிலைய
† தெங்குண்ட தேரை படுவழிப் பட்டேன்யான்
றிண்டேர் வளவன் றிறத்து.

௬௭ நீரு நிழலும்போ னீண்ட வருளுடைய
வூரிரே யென்னை யுயக்கொண்மின்—போரிற்
புகலுங் களியானைப் பூழியர்கோக் கோதைக்
கழலுமென் னெஞ்சங் கிடந்து.

---

* தொல், பொரு, ௧௮௬-ஆம் பக்கம்.

† "தேரையார் செவ்விளநீ ருண்ணப் பழிசுமப்பர்" என்ப.

சூஅ புலவி புறக்கொடுப்பன் புல்லிடினு ணிற்பன்
கலவி களிமயங்கிக் காணே—னிலவியசீர்
மண்ணாளுஞ் செங்கோன் வளவனை யானிதன்றே
கண்ணாரக் கண்டறியா வாறு.

சூகூ கைய தவன்கடலுட் சங்கமாற் பூண்டதுவுஞ்
செய்யசங் கீன்ற செழுமுத்தான்—மெய்யதுவு
மன்பொரு வேன்மாறன் வார்பொதியிற் சந்தனமா
லென்பெறு வாடுமென் றோள்.

எ0 நாணுக்காற் பெண்மை நலனழியு முன்னின்று
காணுக்காற் கைவளையுஞ் சோருமாற்—காணேனன்
வண்டெவ்வந் தீர்தார் வயமான் வழுதியைக்
கண்டெவ்வந் தீர்வதோ ராறு.

எக * வாருயர் பெண்ணை வருகுரும்பை வாய்ந்தனபோ
லேரிய வாயினு மென்செய்யுங்—கூரிய
கோட்டானைத் தென்னன் குளிர்சாந் தணியகலங்
கோட்டுமண் கொள்ளா முலை.

எஉ ஏற்பக் குடைந்தாடி லேசுவ ரல்லாக்கான்
மாற்றி யிருந்தா ளெனவுரைப்பர்—வேற்கண்ணாய்
கொல்யானை மாறன் குளிர்புனல் வையைநீ
ரெல்லா மெனக்கோ ரிடர்.

எங கூடற் பெருமானைக் கூடலார் கோமானைக்
கூடப் பெறுவேனேற் கூடென்று—கூட †
லிழைப்பாள்போற் காட்டி யிழையா திருக்கும்
பிழைப்பிற் பிழைபாக் கறிந்து.

---

* சிலப்பதிகாரம், நாடுகொண்காதை, கஉகூ. அடி, அடியார்க்கு நல்லாருரை. தொல், பொருள், சூஙங-ஆம் பக்கம்.

† இதனைக் "கூடலாவது வட்டமாகக் கோட்டைக்கீறி அதுக்குள்ளே சுழிசுழியாகச் சுற்றுஞ்சுழித்து இவ்விரண்டுசுழியாகக் கூட்டினல், இரட்டைப்பட்டாற் கூடுகை: ஒற்றைப்பட்டாற் கூடாமை என்று ஸங்கேதம்" என **நாச்சியார்திருமொழியுரையினும்**, "மணற்குன்றி னீத்தகன்றூர் வருகென், றூழிதிருத்திச் சுழிக்கணக்கோதி" எனத் **திருச்சிற்றம்பலக்கோவை**யினும் (கஅசூ) "வளைத்துக்கிடந்த வரிமணற் கூடலும்" என **அம்பிகாபதிகோவை**யினும் (ஙஉஉ) வருவனவற்றான் உணர்க.

எச செங்கான் மடநாராய் தென்னுறந்தை சேறியே
னின்கான்மேல் வைப்பனென் கையிரண்டும்—நன்பாற்
கரையுரிஞ்சி மீன்பிறழுங் காவிரிநீர் நாடற்
குரையாயோ யானுற்ற நோய்.

எரு என்னை யுரையலென் பேருரைய லூருரைய
லன்னையு மின்ன ளெனவுரையல்—பின்னையுந்
தண்படா யானைத் தமிழ்நர் பெருமாற்கென்
கண்படா வாறே யுரை.

எசு கடற்றானைக் கோதையைக் காண்கொடாள் வீணி
லடைத்தா டனிக்கதவ மன்னை—யடைக்குமே
லாயிழையா யென்னை யவன்மே லெடுத்துரைப்பார்
வாயு மடைக்குமோ தான்.

எஎ வளையவாய் நீண்டதோள் வாட்கணா யன்னை
யிளையளாய் மூத்திலள் கொல்லோ—தளையவிழ்தார்
மண்கொண்ட தானை மறங்கனல்வேன் மாறனைக்
கண்கொண்டு நோக்கலென் பாள்.

எஅ கொடிபாடித் தேர்பாடிக் கொய்தண்டார் மாறன்
முடிபாடி முத்தாரம் பாடித்—தொடியுலக்கை
கைம்மனையி லோச்சப் பெறுவெனோ யானுமோ
ரம்மனைக் காவ லுளேன்.

எகூ சூதலைப் பருவத்தே கோழிக்கோ மானை
வதுவை பெறுகென்றா ளன்னை—யதுபோய்
விளைந்தவா வின்று வியன்கானல் வெண்டேர்த்*
துளங்குநீர் மாமருட்டி யற்று.

அ0 அலங்குதார்ச் செம்பிய னுடைழிற்றோ ணோக்கி
விலங்கியான் வேண்டா வெனினு—நலந்தொலைந்து
பீர்மேற் கொளலுற்ற பேதையர்க் கென்வாய்ச்சொ
னீர்மே லெழுந்த நெருப்பு.

---

* வெண்டேர் - பேய்த்தேர்.

அக கோட்டெங்கு சூழ்*கூடற் கோமானைக் கூடவென
வேட்டாங்குச் சென்றவென் னெஞ்சறியாள்—கூட்டே
குறும்பூழ் பறப்பித்த வேட்டுவன்போ லன்னை
வெறுங்கூடு காவல்கொண் டாள்.

அஉ புன்னைச் சோலை புனற்றெங்கு சூழ்மாந்தை
நன்னகை நின்றலரு நன்னாடன்—னென்னைகங்
கங்கு லொருநாட் கனவினுட் டைவந்தா
னென்கொ லிவரறிந்த வாறு.

அங களியானைத் தென்ன னிளங்கோவென் றெள்ளிப்
பணியாரே தம்பா ரிழக்க—வணியாகங்
கைதொழு தேனு மிழக்கோ நறுமாவின்
கொய்தளி ரன்ன நிறம்.†

அச கனவை நனவென் றெதிர்விழிக்குங் காணு
நனவி லெதிர்விழிக்க நாணும்—புனையிழா
யென்க ணிவையானு லெவ்வாறோ மாமாறன்
றன்க ணருள்பெறுமா தான்.

அரு தளையவிழும் பூங்கோதைத் தாயரே யாவி
களையினுமென் கைதிறந்து காட்டேன்—வளைகொடுபோம்
வன்கண்ணன் வாண்மாறன் மால்யானை தன்னுடன்வந்
தென்கண் புகுந்தா னிரா.

அசு ஓராற்று னென்க ணிமைபொருந்த வந்திலையே
கூரார்வேன் மாறனென் கைப்பற்ற—வாரா
நனவென் றெழுந்திருந்தே னல்வினையொன் றில்லேன்
கனவு மிழந்திருந்த வாறு.

அஎ ஊட லெனவொன்று தோன்றி யலருறாஉங்
கூட லிழந்தேன் கொடியன்னாய்—நீடெங்கின்
பாளையிற் றேன்சொரிக்கும் பாய்புன னீர்நாட்டுக்
காளையைக் கண்படையுட் பெற்று.

---

* மாந்தை எனவும் பாடம்.

† தொல், பொருள், பக்கம். கசுக.

அஅ ஆய்மணிப் பைம்பூ ணலங்குதார்க் கோதையைக்
காணிய சென்று கதவடைத்தே—னாணிப்
பெருஞ்செல்வ ரில்லத்து நல்கூர்ந்தார் போல
வருஞ்செல்லும் பேருமென் னெஞ்சு.

அகூ நாணொருபால் வாங்க நலனொருபா லுண்ணெகிழ்ப்பக்
காமருதோட் கிள்ளிக்கென் கண்கவற்ற—யாமத்
திருதலைக் கொள்ளியி னுள்ளெறும்பு போலத்
திரிதரும் பேருமென் னெஞ்சு.

கூ0 வரக்கண்டு நாணாதே வல்லையா னெஞ்சே
*மரக்கண்ணோ மண்ணாள்வார் கண்ணென்—றிரக்கண்டாய்
வாளுழுவை வெல்கொடியான் வண்புனனீர் நாடற்கென்
றாளழுவந் தோன்றத் தொழுது.

கூக உகுவாய் நிலத்த துயர்மணன்மே லேறி
நகுவாய்முத் தீன்றசைந்த சங்கம்—புகுவான்
றிரைவரவு பார்த்திருக்குந் தென்கொற்கைக் கோமா
னுரைவரவு பார்த்திருக்கு நெஞ்சு.

கூஉ கடும்பனித் திங்கட்டன் கைபோர்வை யாக
நெடுங்கடை நின்றதுகொ றோழி—நெடுஞ்சினவே
லாய்மணிப் பைம்பூ ணலங்குதார்க் கோதையைக்
காணிய சென்றவென் னெஞ்சு.

கூங மாறடுபோர் மன்னர் மதிக்குடையுஞ் செங்கோலுங்
கூறிடுவாய் நீயோ குளிர்வாடாய்—சோறடுவா
ராரத்தாற் றீமூட்டு மம்பொதியிற் கோமாற்கென்
வாரத்தாற் றோற்றேன் வளை.

கூச புகுவார்க் கிடங்கொடா போதுவார்க் கொல்கா
நகுவாரை நாணி மறையா—விருகரையி
னேமான் பிணைபோல நின்றதே கூடலார்
கோமான்பின் சென்றவென் னெஞ்சு.

---

* ருஎசு-ஆம் திருக்குறட் பரிமேலழகருரை.

௯௫ பிணிகிடந் தார்க்குப் *பிறந்தநாட் போல
வணியிழை யஞ்ச வருமான்—மணியானை
மாறன் வழுதி மணவா மருண்மாலைச்
சிறியோர் வாடை சினந்து.

௯௬ பேயோ பெருந்தண் பனிவாடாய் பெண்பிறந்தா
ரேயோ வுனக்கிங் கிறைக்குடிக—ணீயோ
களிபடுமால் யானைக் கடுமான்றேர்க் கிள்ளி
யளியிடை யற்றம்பார்ப் பாய்.

௯௭ நாம நெடுவேல் நலங்கிள்ளி சோணாட்டுத்
தாமரையு நீலமுந் தைவந்—தியாமத்து
†வண்டொன்று வந்தது வாரல் பனிவாடாய்
பண்டன்று பட்டினங் காப்பு.

௯௮ மாணார்க் கடந்த மறவெம்போர் மாறனைக்
காணுக்கா லாயிரமுஞ் சொல்லுவேன் கண்டக்காற்
பூணாகந் தாவென்று புல்லப் பெறுவேனோ
நாணோ டுடன்பிறந்த நான்.

௯௯ வருக குடநாடன் வஞ்சிக்கோ மானென்
றருகல ரெல்லா மறிய—வொருகலா
முண்டா யிருக்கவவ் வொண்டொடியாண் மற்றவனைக்
கண்டா ளொழிந்தாள் கலாம்.

௧௦௦ புல்லாதார் வல்லே புலர்கென்பர் புல்லினா
ரில்லா யிரவே நெடிதென்பர்—நல்ல
விராஅமலர்த் தார்மாறன் வெண்சாந் தகல
மிராவளிப் பட்ட திது.

---

* பிணியுற்றார்க்குப் பிறந்தநாளிற் பிணிமிகும் என்று சோதிடநூல்வல்லார் கூறுவர்.

† தொல், பொருளுரை, பக்கம்-௯௩௩.

கOக இப்பியீன் றிட்ட வெறிகதிர் நித்திலங்
கொற்கையே யல்ல படுவது—கொற்கைக்
குருதிவேன் மாறன் குளிர்சாந் தகலங்
கருதியார் கண்ணும் படும்.

கOஉ இவனென் னலங்கவர்ந்த கள்வ னிவனெனது
நெஞ்ச நிறையழித்த கள்வனென்—றஞ்சொலாய்
செல்லு நெறியெலாஞ் சேரலர்கோக் கோதைக்குச்
சொல்லும் பழியோ பெரிது.

கOஙு காராட் டுதிரந்தூஉ யன்னை களனிழைத்து
நீராட்டி நீங்கென்றால் நீங்குமோ—போராட்டு
வென்று களங்கொண்ட வெஞ்சினவேற் கோதைக்கெ
னெஞ்சங் களங்கொண்ட நோய்.

கOச யானூடத் தானுணர்த்த யானுணரா விட்டதற்பின்
றானூட யானுணர்த்தத் தானுணரான்—றேனூறு
கொய்தார் வழுதி குளிர்சாந் தணியகல
மெய்தா திராக்கழிந்த வாறு.*

கOரு மல்லனீர் மாந்தையார் மாக்கடுங்கோக் காயினுஞ்
சொல்லவே வேண்டு நமதுறை—நல்ல
திலகங் கிடந்த திருநுதலா யஃதா
லுலகங் கிடந்த வியல்பு.

முற்றிற்று.

* தொல். பொருளுரை, ருகஅ-ம் பக்கம்.

திருச்சிற்றம்பலம்.

# மதுரைத் தமிழ்ச் சங்கம்.

## இச்சங்கத்தார் 1904-ஞு நவம்பர்மீ 19-ம் தேதியில் நடாத்திய ஆங்கிலகலாசாலைத் தமிழ்ப் பரீட்சையிலும் 1905-ஞு 23, 24, 25-ம் தேதிகளில் நடாத்திய தனித்தமிழ்ப் பரீட்சையிலும் தேறிப்பரிசும் யோக்கியதாபத்திரமும் பெறும் மாணக்கர்களின் விவரம்.

### பி. ஏ. பரீட்சை.

#### I. வகுப்பு.

1. P. பொன்னுரங்கமுதலியார், பிரஸிடென்ஸிகாலேஜ், சென்னை } (I) 50ரூ. பெறத்தக்க தங்கப்பதக்கப்பரிசு.

#### II. வகுப்பு.

2. S. அப்பாவுப்பிள்ளை, செயிண்டு ஜோஸப் காலேஜ், திருச்சி.
3. K. ராஜாராவ், ஷை
4. A. நடேசன், யஸ்-பி-ஜி-காலேஜ், திருச்சி.
5. N. S. ரத்தினசபாபதி, கிறிஸ்டியன் காலேஜ், சென்னை.
6. T. B. தாஸராவ், பிரஸிடென்ஸி காலேஜ், சென்னை.
7. S. S. கிருஷ்ணசாமி, கவர்ன்மெண்டுகாலேஜ், கும்பகோணம்.
8. J. R. வல்சலம், மஹாராஜாஸ் காலேஜ், திருவனந்தபுரம்.

### யப் ஏ. பரீட்சை.

#### I. வகுப்பு.

1. V. முத்துசாமி அய்யர், யஸ்-பி-ஜி-காலேஜ், திருச்சி. } (I) 40ரூ. பெறத்தக்க தங்கப்பதக்கப்பரிசு.

#### II. வகுப்பு.

2. A. S. வெங்கிடசுப்பிரமணியன், செயிண்டுஜோஸப் காலேஜ், கூடலூர்.

3. W. P. மார்க்கபந்துவையர், முனிசிபல் காலேஜ், சேலம்.
4. M. D. தங்கஸாமி, மஹாராஜாஸ் காலேஜ், திருவனந்தபுரம்.
5. G. விஸ்வநாதன், ஸ்காட்கிறிஸ்டியன் காலேஜ், நாகர்கோயில்.
6. N. நஞ்சப்பன், செண்டுமைக்கேல் காலேஜ், கோயம்புத்தூர்.
7. A. பெரியநாயகம், அர்ச்மைக்கேல் காலேஜ், கோயம்புத்தூர்.
8. E. S. சிதம்பரம், செண்டு ஜோஸப் காலேஜ், திருச்சி.
9. M. சின்னய்யா, யஸ்-பி-ஜி-காலேஜ், திருச்சி.
10. P. S. கிருஷ்ணசாமி, ஷை
11. R. ராகவன், ஷை
12. R. S. கிருஷ்ணசாமி, கவர்ன்மெண்டு காலேஜ், கும்பகோணம்.
13. S. சம்பந்தமூர்த்தி, ஷை
14. R. சுப்பிரமணியன், ஷை
15. K. நாராயணசாமி, ஷை
16. S. கணபதிசுப்பிரமணியன், ஷை
17. N. பஞ்சாபகேசன், ஷை
18. A. சொக்கலிங்கம், ஹிந்து காலேஜ், திருநெல்வேலி.
19. V. K. வீரராகவாசாரி, ஷை
20. C. K. லட்சுமணன், ஷை
21. A. பட்சிராஜய்யங்கார், ஷை
22. A. R. நடராஜன், ஷை
23. V. கிருஷ்ணன், சி. யம். எஸ். காலேஜ், திருநெல்வேலி.
24. V. S. சுப்பிரமணியன், ஷை சென்னை.
25. M. R. சிவராமகிருஷ்ணன், ஷை
26. S. தோத்தாத்திரி, கிறிஸ்டியன் காலேஜ், சென்னை.
27. P.K.கிருஷ்ணமாசாரியார், வெஸ்லியன்மிஷன்காலேஜ், சென்னை

## மெட்ரிகுலேஷன். (I) வகுப்பு.

1. எலிசபெத்சாமுயல் (பெண்) மஹாராஜாஸ் கேர்ல்ஸ் காலேஜ், திருவனந்தபுரம். — (I) (30ரூ.) வெள்ளிப்பதக்கமும் மீத ரூ-யும் கூடிய பரிசு.
2. P. தேவுத்ஸா, நேட்டிவ் ஹைஸ்கூல், கும்பகோணம். — (II) 25ரூ. பரிசு.
3. T. N. சீதாராமராவ், முனிசிபல் காலேஜ், சேலம். — (III) 20ரூ. பரிசு.